
## அத்தியாயம்-I



# ஆர். மணிமாலா

அன்னை தெரசா மகளிர் காப்பகம்! நகரத்தை விட்டு சற்று ஒதுக்குப்புறமாய் இருந்தது அந்த காப்பகம். பறவைகள் சலசலக்கும் மரங்கள் சுற்றிலும் அரண்போல் அமைந்திருக்க நடுவில் அமைதியாய் இருந்தது கட்டிடம்.

ஆதரவற்ற முதியோர்கள், அபலைப் பெண்கள், அனாதை குழந்தைகள் என்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்கள் அங்கு இளைப்பாறிக் கொண்டிருந்தன.

நகரத்திலுள்ள பெரும் செல்வந்தர்கள், அயல் நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் போன்றோரிடமிருந்து பெறப்படும் பணத்தின் மூலம்தான் இந்த காப்பகம் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

வருடா வருடம்... இக்காப்பகத்தில் அடைக்கலமாக வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போவதால்... முதியோர்களைத் தவிர, அபலைப் பெண்களுக்கும், அனாதை குழந்தைகளுக்கும் பல தொழிற்பயிற்சி கல்வி அளிக்கப்பட்டு.. தொழிலதிபர்கள், அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் மூலம் வேலைவாய்ப்பு வாங்கிக் கொடுத்து காப்பகத்தை விட்டு அனுப்பி விடுகின்றனர். காப்பகத்தை சிறு குறையுமின்றி வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருப்பவர் பாதர் சாலமன்.

# கண்ணுக்குள்ளே உன்னை வைத்தேன்!



காப்பகத்தினுள் ஒரு டெம்போ வேன் வந்து நின்றது. அதிலிருந்து உணவுகள் அடங்கிய பெரிய அலுமினிய பாத்திரங்கள் இறக்கப்பட்டன. இது அடிக்கடி நடக்கும் சம்பவம்தான்.

திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளில் மீதியாகும் உணவு வகைகளை.. இதுபோன்ற அனாதை இல்லங்களுக்கு அளித்து விடும் நல்ல மனம் கொண்டோர் நாட்டில் நிறையவே உண்டு. மண்டபம், மேளதாளம், கச்சேரி, வேடிக்கை என்று ஆடம்பரமாய் செலவு செய்யாமல் அதற்கென செலவழிக்கப்படும் தொகையில் அனாதை இல்லங்களுக்கு வயிறார விருந்து சாப்பாடு போடும் எண்ணம் பலரிடம் வளர்ந்து வருகிறது. இது பாராட்டக்கூடிய விஷயம். பலரும் பின்பற்றக்கூடிய விஷயம்.

''ரேகா.. வேன் வந்திருக்கு போலிருக்கே!'' ஆவலாய் கேட்டாள் செல்வி.

ரேகா என்று அழைக்கப்பட்ட பெண் எங்கோ வெறித்து பார்த்தபடி மரத்தின் மீது சாய்ந்து நின்றிருந்தாள். இருபது வயதுதான் இருக்கும். அவள் முகத்தில் அமைதியும், தனிமையான அழகும் குடி கொண்டிருந்தது.

''பிரியாணின்னு நினைக்கிறேன். முஸ்லிம் வீட்டு கல்யாணமாய் இருக்குமோ? வாசனை இங்கே வருது!''

''.....''

ரேகாவிடமிருந்து பதில் வராமல் போகவே செல்வி வேன் பக்கமிருந்த பார்வையை பிடுங்கி இவள் மீது போட்டாள்.

''ரேகா..!''

''.....''

''ஏய்.. ரேகா!'' அவள் தோளைப் பிடித்து உலுக்கினாள் செல்வி.

''அ.. எ.. என்ன?'' திடுக்கிட்டு பார்த்தாள் ரேகா.

''ரேகா.. என்னாச்சு உனக்கு? ஏன் ஒரு மாதிரியா இருக்கே?''

''ப்ச்!''

''என்ன ரேகா எப்பவும் கலகலன்னு சிரிச்சுக்கிட்டே இருப்பியே... இப்ப ஏன் உன் முகம் வாடிப்போயிருக்கு?''

''என்னோட கோட்டா நாளையோட முடியப்போகுது செல்வி!''

''என்ன சொல்றே நீ? ஒன்னுமே புரியலே!'' கண்கள் சுருக்கி அவளைப் பார்த்தாள்.

உற்றுப் பார்த்தால் ரேகாவின் கண்கள் கலங்கியிருப்பது புரியும்.

''நாளையோட எனக்கு இருபது வயசு செல்வி!''

''ஓ!''

''இந்த ஹாஸ்டல் சட்டத்திட்டப்படி நாளைக்கு நான் வெளியேறப்படுவேன்!''

''ரே..கா!'' திகைப்புடன் அவள் கைகளை பற்றிக் கொண்டாள் செல்வி. அந்த அழுத்தத்தில் வாஞ்சை இருந்தது.

''நான் இங்கேயிருக்கறது.. இன்னையோட கடைசி செல்வி!''

செல்வி இன்னும் அழுத்தமாய் பற்றினாள்.

''நிஜமாவா?''

''ம்!'' தலையாட்டினாள்.

''எங்கேப் போகப்போறே?''

''தெரியலே.. எனக்கு எங்கேயோ வேலைக்கு ஏற்பாடு பண்ணியிருக்கறதா பாதர் சொன்னார்.''

''என்னை மறந்திடுவியா ரேகா!''

''சேச்சே.. ஏன் செல்வி இப்படியெல்லாம் பேசறே?''

''நீயெல்லாம் அதிர்ஷ்டசாலி ரேகா! உன் சிறகுகள் வளர்ந்து... சுதந்திரமா பறக்க தயாராயிட்டே! ஆனா.. நான்? நான் என்னைக்குமே சிறகொடிந்த பறவை தானே ரேகா! விமோசனமே இல்லாத என்னைப் பார்த்தாவது நீ சந்தோஷப்படு ரேகா! கடவுள் உனக்கொரு பாதையை காட்டியிருக்கிறார்! உன் வாழ்க்கை சிறப்பாக அமையும்!'' மனப்பூர்வமாய் வாழ்த்திய செல்வியின் கண்கள் கலங்கியிருந்தது.

''ஏன் செல்வி இப்படியெல்லாம் பேசறே?'' என்றவள் செல்வியை கரிசனம் பொங்கப் பார்த்தாள்.

''இந்த இல்லத்தோட சட்ட திட்டமெல்லாம் என்னை மாதிரியான சிறகொடிஞ்ச பறவைக்கெல்லாம் கிடையாது இல்லையா?'' கசப்புடன் தன்னை குனிந்து பார்த்துக் கொண்டாள்.

கால்களிரண்டும் சூம்பிப்போய் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த செல்விக்கு முப்பது வயதிற்கு மேலிருக்கும்.

''அப்பா...அம்மாதான் இல்லே... கடவுள் எனக்கு இந்த கால்களையாவது கொடுத்திருக்கலாமே ரேகா! ஏன் தரலே?'' குரல் கம்மியது.

''சேச்சே... என்ன இது சின்ன குழந்தையாட்டம்?''

''கடவுள் என்னை குழந்தை மாதிரி தானே



படைச்சிட்டான்? பிறக்கும் போதே குறையோட பிறந்தால் தானே...என்னைப் பெத்தவங்க பெரும் சுமையா நினைச்சு... இங்கே போட்டுட்டுப் போனாங்க? ரேகா நாமெல்லாம் என்ன பாவம் பண்ணினோம்? ஏன் நாம அனாதைகளானோம்?'' கன்னத்தில் கண்ணீர் கோடு போட்டது.

''நாம அனாதைகளல்ல செல்வி! பெத்தவங்களை விட.. நமக்கு தான் சொந்த பந்தம் அதிகம். தந்தையாய் இருந்து வழி நடத்தற கடவுள், தாயாய் பாதுகாக்கிற நம்ம பாதர், பிள்ளைகளால் உதாசீனப் படுத்தப்பட்டு கடைசி காலத்தை இங்கே வந்து கழிச்சிட்டிருக்கிற முதியோர்கள் தான் நம்ம தாத்தா பாட்டிகள். அக்கா, தங்கைன்னு நம்ம சொந்த பந்தம் ரொம்ப அதிகமில்லையா செல்வி?'' அன்புடன் அவள் தலையை தடவிக் கொடுத்தாள் ரேகா.

''சந்தோஷமாய் போய் வா ரேகா! உனக்கொரு பிரகாசமான வாழ்க்கை உனக்காக காத்துக்கிட்டிருக்குன்னு என் உள்மனசு சொல்லிக்கிட்டேயிருக்கு! அப்பப்ப வந்து போய்க்கிட்டிரு ரேகா!''

''உங்க எல்லாரோடயும் சேர்ந்திருக்கறது இன்னையோட கடைசி. நாளையோட எனக்கும் இந்த ஆர்பனேஜுக்கும் உள்ள உறவு முடியப்போகுது. ஆனாலும், என்னால இந்த இடத்தையோ, உங்களையோ மறக்க முடியாது செல்வி! அப்பப்ப கண்டிப்பா வந்து பார்த்துட்டு போவேன்! பத்து வருஷமா இங்கே இருந்துட்டு பிரிஞ்சி போறதை நினைக்கறப்ப வேதனையா இருக்கு செல்வி!''

''எல்லாமே நல்லதுக்குன்னு நினைக்கக்கா! அப்புறம், நீ செங்கல்பட்டுக்கு தானே போகப்போறே?''

''எனக்கும் அங்கே போய் எல்லாரையும் பார்த்துட்டு வரணும்னுதான் ஆசையாயிருக்கு! பட், நான் அங்கே போய் நின்னா...எப்படி வரவேற்பாங்களோ தெரியாது.''

''உன்னை பார்த்தா நிச்சயம் சந்தோஷப்படுவாங்க ரேகா! என்னைக் கேட்டா நீ அங்கேயே போயிடறது நல்லதுன்னு தான் தோணுது!''

ரேகா அதைக்கேட்டு வேதனையுடன் சிரித்தாள்.

''இல்லே செல்வி! பாவம்... அவங்களால வச்சு காப்பாத்த முடியலேன்னு தானே... என்னை இங்கே விட்டுட்டு போனாங்க? ஏழு வருஷமா என் மேல அன்பை வாரியிறைச்சி வளர்த்தவங்க... இந்த பத்து வருஷத்துல ஒரு நாள் கூட வந்து எட்டிப்பார்க்கலையே செல்வி? அப்புறம் எப்படி... என்னை ஏத்துக்குவாங்கன்னு சொல்றே? வேண்டாம்... என்னால யாருக்கும் பிரச்சினையோ, மனக்கஷ்டமோ வந்துடக் கூடாது!''

''நீ சொல்றதும் சரிதான்!''

''லஞ்சுக்கு நேரமாயிடுச்சு. வா போகலாம்!'' செல்வியின் சக்கர நாற்காலியை தள்ளிக் கொண்டு சென்றாள் ரேகா!

பாதர் சாலமனின் எதிரே கண்மூடி நின்றிருந்தாள் ரேகா! மூடிய கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி கன்னத்தில் இறங்கிக் கொண்டிருந்தது.

சாலமன் அவள் தலையை அன்புடன் தடவிக் கொடுத்தார்.

''பாதர்!'' குரல் தெறித்தது.

''டோண்ட் க்ரை மை சைல்ட்... டோண்ட் க்ரை!'' அவள் கண்ணீரை துடைத்தார்.

''என்னை இத்தனை வருஷம் ஒரு தாயைப் போல பரிவோடும், பாசத்தோடும் பாதுகாத்தீங்க! ரொம்ப நன்றி பாதர்!''

''நன்றியை எதிர்பார்த்து இதை செய்யலே ரேகா! இந்த காப்பகம் வெற்றிகரமா செயல்படறதுக்கும், ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஆலமரமா நிழல் தர்றதுக்கும் காரணம் பல நல்ல உள்ளங்கள் தர்ற நன்கொடைகள் தான்! எப்படியோ... உன்னுடைய புத்திசாலித்தனமும், நீ கத்துக்கிட்டிருக்கிற டெக்னிக்கல் குவாலிபிகேஷனும் உனக்கொரு நல்ல வேலையை வாங்கிக் கொடுக்கும். நான் ஒரு லெட்டர் தர்றேன்... அதை இந்த அட்ரஸ்ல உள்ள ஏகாம்பரம் என்பவரை பார்த்துக் கொடு! அவர் உனக்கொரு வேலைக்கு ஏற்பாடு செய்வார்! ஏகாம்பரம்... சென்னையில் பெரிய தொழிலதிபர். இந்த காப்பகத்திற்கு கைகொடுக்கிற பல நல்ல உள்ளங்களில் ஒருவர்.''

''தாங்க்யூ பாதர்!''

''கடவுள் உன்னை ஆசிர்வதிப்பார்! போய் வாம்மா!'' அன்புடன் வழியனுப்பி வைத்தார் சாலமன்.

பிரிவு மனதை வாட்ட.... நெஞ்சில் துக்கம் கனமாய் அடைத்துக் கொள்ள... சூழ்ந்திருந்த அத்தனை பேரிடமும் பிரியாவிடைப் பெற்றாள் ரேகா!

இனி...தனது ஒவ்வொரு நாளையு உணவிற்காகவும்... உழைத்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்றெண்ணிய போது... உடம்பில் சுறுசுறுப்பு வந்தமர்ந்து கொண்டது. இனி, நம் வாழ்க்கை நம் கையில் என்ற உண்மை உணர்ந்த போது... பொறுப்பு வந்தமர்ந்தது. ஒரு பெண்ணான தனக்கு ஒரு நான்கு சுவரை இனிதான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றெண்ணியபோது பயமும், எச்சரிக்கை உணர்வும் ஏற்பட்டது.

'ரேகா... மனுஷங்க நல்லவங்க தான்! ஆனா, எல்லோரும் ஒரே மாதிரி இருந்துட முடியாது! நீ இளம் பெண்! கவனமாயிரு. உன் பெண்மைக்கு பங்கம் வராத அளவிற்கு மிக கவனமாய் நடந்துக் கொள்! உறக்கத்திலும் உன் கண்கள் திறந்திருக்கட்டும்!' பாதரின் வார்த்தைகள் காதில் ஒலித்தன.

சிட்டிக்கு புறப்படும் பஸ்கள் நிறுத்துமிடத்திற்கு ஒரு கிலோ மீட்டர் தூரம் நடக்க வேண்டும். ரேகா விரைவாய் நடந்தாள்.

அவள் எண்ணமெல்லாம் தன் எதிர்காலத்தைப் பற்றியே இருந்ததால்... சாலையில் கவனம் செலுத்த தவறி விட்டாள். இடப்பக்கமாய் பார்த்தபடி சாலையை கடந்த ரேகா... வலப்பக்கமாய் வந்து கொண்டிருந்த காரை பார்க்க தவறி விட்டாள்.

கார்... கடைசி நொடியில் பிரேக் போட்டு பெரும் விபத்தை தவிர்த்தாலும்.... ரேகாவை இடித்து தள்ளிய பிறகே நின்றது.

எதிர்பாராத அதிர்ச்சியில் கீழே விழுந்த ரேகா உடனடியாக மயக்கத்திற்குப் போனாள்.



## 2

''மை காட்!'' காரிலிருந்து பதைபதைப்புடன் இறங்கினான் அந்த அழகான இளைஞன்.

அதற்குள் அங்கு சிறு கூட்டம் சேர்ந்து விட்டது.

கீழே விழுந்ததில் நெற்றியிலும், கையிலும் சிராய்ப்பு ஏற்பட்டு ரத்தம் வடிந்துக் கொண்டிருந்தது.

''கார்ல உட்கார்ந்துட்டா.. சில பேருக்கு கண்ணு , மண்ணே தெரியறதில்லே. பாவம் சின்னப் பொண்ணு. உயிர் இருக்கா பாருப்பா!'' ஒரு நடுத்தர வயது மனிதன் முதல் நிலைப் பற்ற வைக்க, அந்த இளைஞன் திரும்பி பார்த்து முறைத்தான். வாயை கப்சிப்பென்று மூடிக் கொண்டான் அந்தாள்.

இளைஞன் ரேகாவின் அருகே குனிந்தான். அமைதியான அந்த முகம் அவன் மனதை பிசைய.. அவளை அப்படியே இருகைகளால் தூக்கி திறந்திருந்த கதவின் வழியே காரில் கிடத்தினான். ஓரமாய் கிடந்த பெட்டியும் ஹேண்ட்பேகையும் எடுத்துக் கொண்டு காரை விரைவாக ஓட்டினான்.

சென்னை நகரின் மையப்பகுதியில் இருந்த ஒரு தனியார் மருத்துவமனையில் அவளை சேர்த்தான்.

''டாக்டர்.. அந்த பெண்ணுக்கு?''

''நத்திங் சீரியஸ்! லேசான அடி. அதிர்ச்சியில மயங்கி இருக்காங்க. ஒன் ஆர் டு ஹவர்ஸ்ல மயக்கம் தெளிஞ்சிடும்.''

''ஓக்கே... தாங்க்யூ டாக்டர்'' என்று அவள் கண் விழிப்பதற்காக காத்திருந்தான்.

'யாரிந்த பெண்? இந்த ஊரைச் சேர்ந்தவளா? அல்லது வெளியூரை சேர்ந்தவளா? கையில் பெட்டி இருந்ததே. அப்படியானால் உறவினர் வீட்டிற்காக இங்கே வந்திருப்பாளோ? அல்லது எங்காவது போய் விட்டு சொந்த ஊருக்கு வந்திருக்கலாம். எது எப்படியிருப்பினும் இவள் வருகைக்காக காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு இவளைப் பற்றி தகவல் தெரிவித்தாக வேண்டும். இவள் பெயர் என்னவென்று கூட தெரியவில்லை. எப்போது மயக்கம் தெளிந்து... தெரிந்து இவளை பத்திரமாய் உரியவரிடம் ஒப்படைப்பது? ஒருவேளை அவள் பெட்டியை ஆராய்ந்தால் தகவல் கிடைக்கலாம்.

பிறர் உடைமையை அவர் அனுமதியின்றி ஆராய்வது தவறல்லவா? ஆபத்திற்கு பாவமில்லை. ஆராய்வது உத்தமம்!' உள் மனசு சொல்ல.. ரேகாவின் பெட்டியை எடுத்தான்.

காப்பகத்தை விட்டு செல்வதால் பாதர் சாலமன் நினைவுப் பரிசாக சீக்ரெட் நம்பர் லாக் சிஸ்டம் உள்ள அழகிய சூட்கேஸை அளித்திருந்தார். அதில்தான் தன் உடைமைகளை பத்திரப்படுத்தி இருந்தாள். அதை ரேகா தவிர வேறு யாராலும் திறக்க முடியாது. அடுத்து அவளின் ஹேண்ட்பேகை திறந்தான். இரண்டு நூறு ரூபாய் நோட்டும், மூன்று பத்து ரூபாயும், கொஞ்சம் சில்லறையும் ஒரு பைபிளும் தவிர வேறெதுவுமில்லை.

அர்விந்தனுக்கு ஆச்சர்யமாயிருந்தது. ஒரு அழகிய இளம்பெண்ணின் ஹேண்ட்பேக் என்றால் பவுடர், க்ரீம், லிப்ஸ்டிக், கைகடக்க கண்ணாடி, டெலிபோன் டைரி, கர்ச்சிப் என்றிருக்கும். சுபத்ராவின் பேகில் அப்படித்தானே இருந்தது? கிட்டத்தட்ட பெரும்பாலான பெண்களின் பேக் இப்படித்தான் இருக்கும். ஆனால் இதென்ன? இப்படிக் கூட துடைத்து வைத்தாற் போல் இருக்குமா? பைபிள் இருக்கிறதே! அப்படியானால் இந்த பெண் கிறிஸ்டியனாய் இருப்பாளோ?

''சார்... நீங்க கொண்டு வந்து சேர்த்த பெண்ணுக்கு கான்ஷியஸ் திரும்பிடுச்சு. டாக்டர் உங்களை வரச் சொன்னார்.''

அர்விந்தன் அரக்க பரக்க எழுந்து கொண்டான்.

அந்தப் பெண் இருந்த அறையை நோக்கி கிட்டத்தட்ட ஓடினான்.

''வாங்க மிஸ்டர் அர்விந்த்''

''டாக்டர்.. அவங்களுக்கு..?''

''டோண்ட் ஒர்ரி.. ஷி இஸ் ஆல் ரைட்!''

அர்விந்தன் அந்த பெண்ணின் அருகே சென்றான். மருண்ட விழிகளால் சுற்று முற்றும் பார்த்து விட்டு அவன் முகத்தில் வந்து நிலைப்பெற்றது பார்வை.

''ஆர் யூ ஆல் ரைட்?'' அர்விந்தன் அன்பாக கேட்டான்.

ரேகா மிகவும் பயந்துப் போனாள்.

தான் காரில் அடிபட்டு விழுந்தது நன்றாக நினைவிருந்தது. அதன்பிறகு என்ன நடந்தது? எப்படி ஹாஸ்பிடலுக்கு வந்தேன்? யார் கொண்டு வந்து சேர்த்தார்கள்? இவன் யார்? என் பெட்டி எங்கே? அதில்தானே பாதர் கொடுத்த சிபாரிசு கடிதம் இருக்கிறது?

''எ... என் பெட்டி எங்கே?''

''இதோ பத்திரமாய் இருக்கிறது'' எடுத்துக் காட்டினான் அர்விந்தன்.

''மேடம் இவர்தான் உங்களை ஹாஸ்பிடலில் கொண்டு வந்து சேர்த்தவர்'' என்றார் டாக்டர்.

## இந்தியாவின் சிறந்த பெண்மணி!

பி.பி.சி. தொலைக்காட்சி நடத்திவரும் அறிவுத்திறன் போட்டி உலகிலேயே மிகவும் கடினமானதாகும். சமீபத்தில் பல்வேறு கட்டமாக நடந்த இந்த வினாடி வினா போட்டியில் இந்தியா முழுவதிலும் இருந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உள்பட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். இதில் கே.இ. பிரியம்வதா என்ற 25 வயது மாணவி வென்று சாதனை படைத்தார்.

கோடீசுவரன் நிகழ்ச்சியைப் போன்று இதில் பரிசு பணம் எதுவும் கிடையாது. இருப்பினும் வெற்றியின் அடையாளமாக 'வெள்ளி பந்து' பரிசாக வழங்கப்பட்டது.



ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் எம்.பி.எல். பயின்றுவரும் இவர், டெல்லியில் என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா ஆன்லைனில் மீண்டும் எடிட்டராக பணிக்கு சேர்ந்துவிட்டார்.

இந்தியாவில் சிறந்த அறிவாளியாக தேர்ந்து எடுக்கப்பட்ட பிரியம்வதாவுக்கு அமிதாப்பச்சன் நடத்தும் கவுன் பனேகா குரோர்பதி நிகழ்ச்சியில் பங்கேற்க துளியும் விருப்பம் இல்லையாம். இதற்கு காரணம் இந்த நிகழ்ச்சி தன்னை ஒரு துளியும் பாதிக்கவில்லை என்பதுதானாம்.

-இருமகள்.

''தாங்க்ஸ்'' கை கூப்பினாள் ரேகா.

''அது என்னோட கடமைங்க! என் கார் மோதிதான் உங்களுக்கு அடிபட்டது. அதுக்காக முதல்ல நீங்க என்னை மன்னிக்கணும்''

டாக்டர், அர்விந்தன் தோளை தொட்டார்.

''மிஸ்டர் அர்விந்த்.. அவங்க இன்னும் அதிர்ச்சியிலிருந்து விடுபடலே! இப்படி ஸ்டர்ப் பண்ண வேண்டாமே ப்ளீஸ்.''

''ஓக்கே டாக்டர்... எப்ப டிஸ்சார்ஜ் பண்ணுவீங்க?''

''இன்னைக்கு ஒரு நாள் முழுக்க பெட்ரெஸ்ட்ல இருக்கட்டும். காலையிலே டிஸ்சார்ஜ் பண்ணிடறேன். நீங்க.. போய்ட்டு நாளைக்கு வந்தால் கூட போதும்''

''தாங்க்யூ டாக்டர்'' என்றவன் அவளருகே குனிந்து ''டேக் ரெஸ்ட் மேடம். நான் நாளை காலையிலே வந்து பார்க்கிறேன்'' என்று விடை பெற்றுப் போய் விட்டான்.

டாக்டரும் நர்சும் அகன்றனர்.

ரேகா ஆயாசத்துடன் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

காப்பகத்தை விட்டு வெளியில் வந்ததுமே விபத்து ஏற்பட்டது எதை குறிக்கிறது? எனக்கு ஆபத்து காத்திருக்கிறது என்றுதானே? 'உன் பெண்மைக்கு பங்கம் வராத அளவிற்கு மிக கவனமாய் நடந்துக் கொள். உறக்கத்திலும் உன் கண்கள் திறந்திருக்கட்டும்.' பாதர் சொன்ன வார்த்தைகள் நினைவிற்கு வந்தது.

நான் உடனே இங்கிருந்து போயாக வேண்டும். தவிர, ஏகாம்பரம் என்கிற தொழிலதிபரை இன்றே சந்திக்கும்படி பாதர் வலியுறுத்தி சொன்னாரே? கண்டிப்பாய் அவரை சந்தித்தே ஆக வேண்டும். யார் கண்ணிலும் படாமல் இங்கிருந்து போயாக வேண்டும். முடிவு செய்த ரேகா.. மெல்ல எழுந்தாள். தலையில கல்லை கட்டி விட்டதுப்போல் பாரமாய் அழுத்திற்று.

முற்பகல் வேளையாதலால் ஹாஸ்பிடல் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. நர்சுகள் அங்குமிங்குமாய் நடந்துக் கொண்டிருந்தனர். அவர்கள் கவனிக்காத நேரமாய் பார்த்து ரேகா வெளியேறி விட்டாள்.

ரேகா சரியான முகவரி தேடி கண்டுபிடித்து செல்வதற்குள் பிற்பகல் ஆகி விட்டது.

நுங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் ரோடில் பெரிய பரப்பளவில் நட்ட நடுவில் அழகாக அமர்ந்திருந்தது அந்த பங்களா.

இதயம் தடதடக்க நடந்தவள்... அந்த பங்களாவினுள் காலடி எடுத்து வைத்ததும் ஏதோ ஒருவித இனம் புரியாத உணர்வு ஏற்பட்டது. உடம்பெங்கும் சிலிர்த்தது.

பெரிய ஹால் அது. பத்து பனிரெண்டு பேர் மொத்தமாய் நின்றிருந்தனர். சுவற்றில் இரண்டு வயது பெண் குழந்தையின் போட்டோ மாட்டப்பட்டு புத்தம் புதிய ரோஜாப்பூ மாலை போடப்பட்டு இருந்தது. ஏகாம்பரமும், அவர் மனைவி அம்பிகா, மகன் தினேஷ், மருமகள் கனகா, மகள் சுபத்ரா மற்றும் உறவினர்கள் சூழ்ந்திருக்க அனைவரும் கண் மூடி கைகூப்பி நின்றிருந்தனர்.

''என் மகள் சுசீலாவின் பிறந்தநாளான இன்று அவள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறேன் கடவுளே'' ஏகாம்பரம் மனமுருக வேண்டிக் கொண்டார்.

ரேகா ஒரு ஓரமாய் ஒதுங்கி நின்றிருந்தாள்.

''அம்பிகா.. அன்னதானத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டியா?'' என்றார் ஏகாம்பரம்.

''அப்பவே உதவும் கரங்களுக்கு அனுப்பியாச்சுங்க'' என்றவள் அப்போதுதான் அந்தப் பெண்ணைப் பார்த்தாள்.

நெற்றியிலும் கையிலும் போடப்பட்டிருந்த கட்டும், கையில் பெட்டியும், களையான முகமும்... அம்பிகாவின் கவனத்தை ஈர்த்தது.

'இவளை.. இதற்கு முன் எங்கோ பார்த்திருக்கிறோமே!' யோசனையுடன் அவளை நோக்கி வந்தாள். ஏகாம்பரமும் அவளை கவனித்து விட்டார்.

''யாரும்மா நீ? யாரை பார்க்கணும்?''

அம்பிகாவை பார்த்ததும் ரேகாவிற்கு கையும் காலும் பரபரத்தன.

'எனக்கொரு அம்மா இருந்திருந்தால் இப்படித்தானே இருப்பாள்?'

''உன்னைத்தான் கேக்கறேன்.. யாரும்மா நீ?'' அம்பிகா மறுபடி கேட்டாள்.

''நா.. நான் அன்னை தெரசா மகளிர் காப்பகத்திலேர்ந்து வர்றேங்க...''

''ஓஹோ.. பாதர் சாலமன் சொன்ன பொண்ணு நீதானா? உன் பேரென்னமா?'' என்றார் ஏகாம்பரம்.

''என் பேரு ரேகா சார்'' என்றபடி பாதர் தந்திருந்த கடிதத்தை நீட்டினாள்.

''அனாதை ஆஸ்ரமத்திலேர்ந்து



வந்திருக்கியா? பாவம்'' அம்பிகாவின் தாய் மனசு வேதனைப்பட்டது.

கடிதத்தை வாங்கிப் படித்தவர் ''உக்காரும்மா'' என்றார்.

ரேகா சோபாவில் பட்டும் படாமல் அமர்ந்தாள்.

''நெத்திலேயும், கையிலேயும் என்ன கட்டு?''

''வரும்போது ஒரு சின்ன ஆக்ஸிடண்ட் ஆயிடுச்சு சார்''

''அடடா... ஏம்மா கவனமா வந்திருக்கலாமில்லே? ரொம்ப அடியா?''

''அதிகமில்லே சார்.. கொஞ்சம்தான்.''

''அம்பிகா இப்படி உக்காரு. பாதர் சாலமன் இந்தப் பொண்ணை நம்மளை நம்பி அனுப்பியிருக்காரு.''

''எதுக்குங்க?''

''ஏதாவது வேலை போட்டு கொடுக்கணுமாம். அந்த காப்பகத்துல இருபது வயசானதும் நம்மளை மாதிரியான ஆட்களிடம் சிபாரிசு பண்ணி வேலைக்கு சேர்த்து விட்டுவாங்க. அதுக்கு மேல அங்கே வச்சிருக்க பொருளாதாரம் இடம் தராது. உடல் ஊனமுற்றவர்களும் முதியோர்களும் மட்டும் இதுக்கு விதிவிலக்கு. இந்தப் பொண்ணுக்கு என்ன வேலை தர்றது? ஆபீஸ்லே இப்போதைக்கு எந்த வேகன்ஸியும் இல்லையே'' யோசனையாய் நெற்றியை தேய்த்தார் ஏகாம்பரம்.

ரேகாவின் முகம் அதை கேட்டு சட்டென வாடிப் போனது. அதை கவனித்த அம்பிகாவின் மனசு வருத்தப்பட்டது.

''ஏங்க.. எனக்கொரு யோசனை தோணுதுங்க.''

''என்ன?''

''நம்ம வீட்டை கவனிச்சுக்க.. வீட்டு கணக்கு வழக்குகளை கவனிச்சுக்க ஒரு ஆள் வேணும்னு சொல்லிட்டிருந்தேனே.. பேசாம இந்தப் பொண்ணை நம்ம வீட்லேயே வேலைக்கு வச்சுகிட்டா என்ன?''

சற்று நேரம் யோசித்தார் ஏகாம்பரம்.

''நீ சொல்றதும் சரிதான். ஆனா, இந்தப் பொண்ணு ஆபீஸ்லே வேலை போட்டு தருவாங்கன்னு எதிர்பார்த்து வந்திருக்கும். வீட்லே வேலைன்னதும் ஒரு மாதிரி பீல் பண்ணிட்டா?'' என்றபடி ரேகாவைப் பார்த்தார்.



# 3

''சார்... நான் அப்படியெல்லாம் ஃபீல் பண்ண மாட்டேங்க! நீங்க எந்த வேலை செய்ய சொன்னாலும் செய்வேங்க!'' என்றாள் அவசரமாக ரேகா!

''அப்புறம் என்னங்க? இந்தப் பொண்ணு இங்கேயே இருக்கட்டும்.''

''சரி.... உன் பேரென்ன சொன்னே? ரேகாவா? ரேகா... பாதரோட நம்பிக்கைக்கு ஏத்த மாதிரி நடந்துக்கணும். ஓக்கே?''

''கண்டிப்பா சார்!''

''மம்மி.. யாரிது பெட்டியும் கையுமா?'' ஜீன்ஸும், டி சர்ட்டும் அணிந்து மதமதப்பாய் இருந்த சுபத்ரா ரேகாவை ஏற இறங்க பார்த்தபடி கேட்டாள்.

அம்பிகா சொன்னாள்.

''ஓ... அனாதை ஆஸ்ரமத்திலேர்ந்து வந்த டிக்கெட்டா? நம்ம வீட்லே வேலை கொடுக்கணும்னு முடிவே பண்ணியாச்சா? உனக்கும் வேற வேலையில்லே? டாடிக்கும் வேற வேலையில்லே?'' ரேகாவை பார்த்த முதல் பார்வையிலேயே திருப்தியில்லாமல் சுபத்ரா எரிச்சலுடன் சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

''அவ சின்னப் பொண்ணு... விளையாட்டா பேசிட்டுப் போறா. தப்பா நினைச்சுக்காதே என்ன?'' அம்பிகா ஆறுதலாய் சொன்னாள்.

''இல்லே... நான் தப்பா எதுவும் நினைக்கலே!''

''அம்பிகா.. இந்த பொண்ணை அவுட் ஹவுசிலே தங்க வச்சிடு. நான் வர்றேன்'' என்று புறப்பட்டு விட்டார் ஏகாம்பரம்.

''சரிங்க.. வா.. ரேகா....!'' என்று அழைத்துச் சென்று அவள் தங்கும் அறையை காட்டினாள்.

''வந்து...!''

''என்ன ரேகா?''

''நான் இன்னைக்கே வேலையிலே ஜாய்ன் பண்ணிக்கலாமா?''

''வேண்டாம்.. ஆக்ஸிடன்ட்ல அடிபட்டு வந்திருக்கே! ரெண்டு நாள் ரெஸ்ட் எடுத்துக்கிட்டு...அப்புறம் ஜாய்ன் பண்ணிக்க''

''ரொம்ப நன்றிங்க! அப்புறம்...''

''சொல்லு... வேறென்ன''

''நான் உங்களை எப்படி கூப்பிடறது? மேடம்னா?'' அம்பிகா அவளையே சில கணங்கள் பார்த்தாள்.

''வேண்டாம்! அம்மானு கூப்பிடு!''

''அம்மா!'' உச்சரித்துப் பார்த்தாள்.

சிலிர்த்து போனாள் அம்பிகா.

''இன்னொரு முறை சொல்லு!''

''அம்மா!''

''என் பொண்ணு சுசீலாவே கூப்பிடற மாதிரி இருக்கு ரேகா!'' அவள் கையை கெட்டியாய் பற்றிக் கொண்ட அம்பிகா... ரேகாவின் கண்களில் எதையோ தேடினாள்.

''அம்மா இங்கே என்ன பண்ணிட்டிருக்கே? உனக்கு போன்...!'' எரிச்சலுடன் வாசலில் வந்து நின்று கூப்பிட்டாள் சுபத்ரா.

''இதோ... வந்துட்டேன்! ரேகா... வர்றேம்மா! சாப்பாடு அனுப்பறேன்...சாப்பிடு என்ன?'' என்று சுபத்ராவின் பின்னால் ஓட்டமும் நடையுமாய் விரைந்தாள்.

அர்விந்த்... அந்த ஹாஸ்பிடலுக்குள் நுழையும் போதே... அதிர்ச்சி காத்திருந்தது.

'நேற்று சிகிச்சைக்காக சேர்த்திருந்த பெண்.. நேற்றே இங்கிருந்து போய்விட்டாள்' என்றதும் நம்ப முடியாமல் அவள் தங்கியிருந்த அறைக்கே சென்று பார்த்தான். அந்த இடத்தில் இன்று வேறொரு நோயாளி!

அர்விந்த் குழம்பிப் போனான்.

ஏன், எதனால் அந்தப் பெண் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போனாள்? அவள் பெயரைக் கூட தெரிந்து கொள்ளவில்லை! இன்று விசாரித்து உரியவர் வீட்டில் பத்திரமாய் ஒப்படைக்க வேண்டும் என்றல்லவா நினைத்திருந்தேன்? ஏனிப்படி ஒரு காரியம் செய்தாள்? ஒருவேளை... அவள் நார்மலான மனநிலை உள்ள பெண்ணில்லையோ? சேச்சே... அப்படியிருக்காது! எவ்வளவு தெளிவாய் என் பெட்டி எங்கே என்று கேட்டாளே!

## குளுகுளு ஐஸ் ஓட்டல்!

கதகதப்பான, குளுகுளு நட்சத்திர ஓட்டல்களைத்தான் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஐஸ் ஓட்டல் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோமா? இல்லையே. முழுவதும் ஐஸ் கட்டிகளால் கட்டப்பட்ட ஐஸ் ஓட்டலும் இருக்கிறது.



இந்த ஓட்டல் எங்கிருக்கிறது என்கிறீர்களா? கனடாவில்தான் இந்த ஐஸ் ஓட்டல் புதிதாக கட்டப்பட்டுள்ளது. கியூபெக் நகரில் மாண்ட் மொரன்சி நீர்வீழ்ச்சி மற்றும் செயின்ட் லாரன்ஸ் ஆற்றின் அருகே 10,760 சதுர அடி பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

விடுமுறை காலத்தில் மட்டுமே இந்த ஓட்டல் திறந்து வைக்கப்படுகிறது. 200 டன் ஐஸ் கட்டிகள் மற்றும் 4,500 டன் ஐஸ் துகள்களால் இந்த ஓட்டல் கட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே 1000 சுற்றுலா பயணிகள் அமெரிக்கா முதல் ஜப்பான் வரை முன்பதிவு செய்துவிட்டனர்.

ஒரு இரவு மட்டும் இந்த ஓட்டலில் தங்க வேண்டுமானால் கட்டணம் ரூ.4,500 செலுத்தவேண்டும். உடல் கதகதப்புக்கு ஒயின் உண்டு. சினிமா பார்க்கலாம். ஓவியங்களை ரசிக்க தனியே 2 அறைகள் உள்ளன.

படுப்பதற்கு ஐஸ் படுக்கையும் தயார் செய்யப்பட்டுள்ளது. தோலினால் தயாரிக்கப்பட்ட உறங்கும் பையும் இதன் மீது போர்த்தப்பட்டுள்ளது. இந்த ஓட்டலில் எதை தொட்டாலும் 'சில்'லென்றுதான் இருக்கும் சிற்றுண்டியை தவிர என்கிறார், 2 வயதான ஓட்டல் ஊழியர் ஒருவர்.

-ஸ்ரீமதி.

அர்விந்தால் எந்த ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

ஹாஸ்பிடலில் பில்லுக்கான பணத்தை செலுத்தி விட்டு வெளியில் வந்தான்.

காரில் அமர்ந்தவன்... யோசனையுடன் காரை கிளப்பாமல் அப்படியே அமர்ந்திருந்தான்.

எவ்வளவு நேரம் அப்படியிருந்தானோ?

''ஹலோ அர்விந்த்... என்ன இங்கே?'' என்ற பரிச்சயமான, ஆச்சர்யமான குரலைக் கேட்டு கலைந்தான்.

ஏகாம்பரம் நின்றிருந்தார்.

''ஹலோ... அங்கிள்!''

''என்ன அர்விந்த் இங்கே? இந்த வழியா கார்ல போய்கிட்டிருந்தேன். அப்பதான் உன்னோட கார் கண்ல பட்டுச்சு! ஹாஸ்பிடல்ல யாரையாவது பார்க்க வந்தியா?''

''ஓ... நோ அங்கிள். அது ஒரு பெரிய கதை!'' என்றவன் நடந்ததை எல்லாம் கூறினான்.

அவன் சொல்ல சொல்ல, ஏகாம்பரம் வியப்பில் ஆழ்ந்தார்.

''ஏன் அர்விந்த்? எதுக்காக அந்தப் பொண்ணு சொல்லாம கொள்ளாம



போய்ட்டா?''

''அதுதான் எனக்கும் புரியலே அங்கிள்.''

''அவ பேரென்ன சொன்னே?''

''எனக்கே தெரியாது.''

''சரி.. விடு! அதையே நினைச்சி குழம்ப வேண்டாம். ஆமா.. நேத்து சுசீலாவோட பிறந்தநாள் தெரியுமில்லே? ஏன் வரலே?''

''நேத்து டைட்வொர்க் அங்கிள். வெரி சாரி.''

''இட்ஸ் ஓக்கே! தனியா பிசினஸ் பண்ணிட்டிருக்கியே... எப்படி போய்க்கிட்டிருக்கு?''

''எவ்ரிதிங் இஸ் கோயிங் பைன் அங்கிள்.''

''ஏம்பா.. இந்த வயசிலே உங்கப்பா தனியா கம்பெனிய நடத்திக்கிட்டிருக்காரே. அந்த பொறுப்பை நீ ஏத்துக்கிட்டு நடத்தலாமில்லே? அதை விட்டுட்டு தனியா எதுக்குப்பா நீ நடத்தணும்.''

''அங்கிள்.. எந்த விஷயத்திலேயும் ஆர்வத்தோடு முழு மனசோட ஈடுபடணும். பெத்தவங்களுக்காகன்னு தங்களோட சுய விருப்பத்தை காலடியில் போட்டு நசுக்கிட்டு விருப்பமேயில்லாம எதிலேயும் ஈடுபடறது எனக்கு பிடிக்காத விஷயம். சின்ன வயசிலேர்ந்தே கம்ப்யூட்டர் இன்ஜினியரா வரணும்னு ஆசை. அதுக்காகவே படிச்சேன். இந்த படிப்பை ஆதாரமா வச்சுக்கிட்டு பாரின் போய் லட்சம் லட்சமா சம்பாதிக்கலாம். ஆனா, எனக்கு அதிலே விருப்பமில்லே. என்னோட படிப்பு தந்த அறிவை நம்ம நாட்டிலே, நம்ம மண்ணிலே பயன்படுத்தணும்னு ஆசைப் பட்டேன். கம்ப்யூட்டர் சாப்ட்வேர் கம்பெனி ஆரம்பிக்கணும்னு விருப்பப்பட்டேன். என்னோட கனவுகளுக்கு நேர்மாறான அப்பாவோட கிரானைட் பிஸினஸை நான் எப்படி எடுத்து நடத்த முடியும்? அதனால் தான் என் இஷ்டப்படி தனியா கம்பெனி நடத்தி அதிலே வெற்றியும் அடைஞ்சுட்டேன்.''

''என்ன இருந்தாலும் உங்கப்பாவுக்குப் பிறகு.. அந்த கம்பெனிக்கு எல்லாமே நீதானே அர்விந்த்? கூட தம்பி, தங்கைன்னு பிறந்திருந்தாக்கூட அவங்ககிட்டே ஒப்படைக்கலாம். ஆனா, அதுக்கும் வழியில்லே. உங்கப்பா என்கிட்டே சொல்லி சொல்லி புலம்பறார்.''

''......''

''இதுக்கு ஒரே வழிதான் இருக்கு.''

''என்ன அங்கிள்?''

''உனக்கொரு கல்யாணம் பண்ணி.. வரப்போற மருமககிட்டே கம்பெனி பொறுப்பை ஒப்படைக்கறதுதான்.''

''அதுவும் எப்படி சாத்தியமாகும் அங்கிள்? வரப்போறவ என்னை மாதிரி டேஸ்ட் உள்ளவளா இருந்தா?'' சிரித்தபடி கேட்டான் அர்விந்த்.

''உங்கப்பா இஷ்டப்படி பொண்ணை தேடிட்டா... எல்லாமே சாத்தியம்தானே அர்விந்த்?''

''கிடைக்கணும். கிடைக்கறவ எனக்கு பிடிக்கணும். எவ்வளவு விஷயங்கள் இருக்கு தெரியுமா?''

''நானும் உங்கப்பாவும் ப்ரண்ட்ஸானது நாங்க ரெண்டு பேரும் ஒரே பிஸினஸ் லைனில் இருந்ததால்தான்.''

''ஐ.. நோ.''

''யு.. நோ.. சுபத்ராவுக்கும் இந்த லைனில் இன்ட்ரஸ்ட் இருக்கு.''

''ஸோ.. வாட் அங்கிள்?''

''நத்திங். நேரமாச்சு.. அர்ஜென்ட்டா ஒருத்தரை பார்க்க கிளம்பிட்டிருக்கேன். பை அர்விந்த்.'' இதழோரம் ஒரு சிறு புன்னகையை நெளிய விட்டு அவனிடமிருந்து விடைபெற்று சென்றார் ஏகாம்பரம்.

அர்விந்த் தோள்களை குலுக்கிக் கொண்டு காரை உசுப்பினான்.



# 4

அதிகாலையிலேயே விழித்துக் கொண்ட ரேகா... குளித்து முடித்து வேலையில் ஈடுபட்டாள். கிச்சனில் நுழைந்து காபி போடுவதிலிருந்து... அனைவருக்கும் பரிமாறுவது வரை அவளே செய்தாள்.

''ரேகா... நீ கணக்கு வழக்கெல்லாம் பார்த்தால் போதும். இதெல்லாம் நீ ஏம்மா செய்யறே? அதுக்குதான் குக் இருக்காங்களே?'' என்றாள் அம்பிகா.

''பரவாயில்லேம்மா! ஆஸ்ரமத்துலே எல்லா வேலையும் எல்லாருமே செய்வோம். இங்கே சும்மாயிருக்க எனக்கு என்னமோ மாதிரியிருக்கு! இதுக்கூட செய்யலேன்னா... எப்படிம்மா?''

''வாங்கற சம்பளத்துக்கு அவ வேலை செய்யறா! உனக்கேன் கரிக்குது? செய்யட்டுமே!'' என்றாள் பட்டென்று சுபத்ரா.

''சுபி... என்ன இது கெட்ட பழக்கம்? ரேகா உன்னை விட வயசிலே பெரியவ! அவளைப் போய் அவ இவன்னு மரியாதையில்லாம பேசறே?'' அதட்டினார் ஏகாம்பரம்.

''இந்த வீட்லே... வேலைக்காரிய அவ இவன்னு சொல்லக் கூட எனக்கு உரிமையில்லாம போச்சா? சே... வரவர இந்த வீட்லே எனக்கு நிம்மதியே இல்லாமப் போய்டுச்சி!'' கையை உதறி... சாப்பிடாமலே எழுந்து சென்று விட்டாள் சுபத்ரா.

''சுபி...சுபி..!'' அம்பிகா கூப்பிட கூப்பிட போய் விட்டாள்.

''விடு... அம்பிகா! அவ பசி தாங்கமாட்டா! தானே வருவா!'' என்றார் ஏகாம்பரம்.

''வளர்ந்துட்டாளே ஒழிய இன்னும் பச்சைக் குழந்தை மாதிரி பிடிவாதம் பிடிக்கிறது மாறலே!'' என்றான் அமைதியாய் சாப்பிட்டுக் கொண்டிருந்த தினேஷ்.

''அவ... அப்படியென்ன தப்பா பேசிட்டா?'' என்றாள் கனகா.

''கை நீட்டி சம்பளம் கொடுக்கறவன் ஆண்டவனுமில்லே. கைநீட்டி வாங்கறவங்க அடிமையுமில்லே! உழைப்புக்கேத்த கூலியை தானே வாங்கறாங்க? இலவசமா தந்துடலியே! அதுக்காக மனுஷனை மனுஷனே மரியாதை குறைவா நடத்தறதோ, கேவலமா பேசறதோ... கூடாது கனகா! ரேகா... இன்னும் கொஞ்ச... கூட்டு வையம்மா!''

கணவன் அவளுக்காக பரி[ந்து] பேசியதுக்கண்டு நெஞ்செரிந்தது கனகாவிற்[கு]. ஆனால், தினேஷின் பெற்றோர்களுக்[கோ] பிள்ளையும் தங்களைப்போல் இருக்கிறானே என்ற சந்தோஷம்.

மூன்று குழந்தைகளை வைத்து[க்] கொண்டு, ஒரு வேளை சாப்பாட்டிற்கு கூ[ட] இல்லாமல் பசியோடு வாடிய கால[ம்] ஒன்றிருந்ததே! அந்த பசி கொடுமையால் தா[னே] தங்கள் மகள் சுசிலாவை ஒரேயடியா[ய்] இழந்தனர்? இன்று உணவிருக்கிறது[.] பசியில்லை! இதற்கு காரணமும் சுசிலா தானே[!] அவள் போட்ட பிச்சைதானே இந்த பணம், கா[ர்], பங்களா... எல்லாமே!

பழையவை எட்டிப் பார்த்தது[ம்] ஏகாம்பரத்திற்கு கண்கள் கலங்கியது.

ரேகாவிற்கு ஆரம்பத்தில் சுபத்[ரா] கனகாவின் உதாசீனம் மன[தை] வருத்தியதென்னவோ நிஜம். ஆனா[ல்] ஏகாம்பரம், அம்பிகாவின் அன்பும், தினேஷி[ன்] சிநேக மனப்பான்மையும் அவளுக்கு ஆறுத[ல்] தந்தன. யார் என்ன திட்டினாலும்... பொறுத்து[க்] கொண்டாள்.

''அம்மா.. நான் சாப்பாடை சுபத்ராம்[மா] ரூமுக்கே கொண்டு போய் தரட்டுமா[?]'' என்றாள் ரேகா.

''ப்ச்...வேணாம் ரேகா! அவ எரி[ஞ்சு] விழுவா!'' என்றான் தினேஷ்!

''இதெல்லாம் எனக்கு பழகிப்போச்[சு!] பாவம் சாப்பிடாம எந்திரிச்சுப் போய்ட்டாங்[க]''

''ரேகா சொல்றதும் சரிதான். நீ கொண்[டு] போய் கொடு ரேகா'' என்றாள் அம்பிகா.

ரேகா தட்டோடு அகன்றதும் அம்மாவ[ிடம்] ஏறிட்டான் தினேஷ்.

''என்னம்மா நீங்க? ரேகாவைப்போ[ய்] இந்த வேலையெல்லாம் செ[ய்யச்] சொல்லிக்கிட்டு? ரேகா ஆர்பனேஜ்[ல்] வளர்ந்தவளாயிருந்தாலும் ஓர[ளவு] படிச்சிருக்கா! அவ படிப்புக்கேத்த வே[லை] கொடுக்க முடியாவிட்டாலும் வீட்[டை] மேனேஜ் பண்ற பொறுப்[பை] கொடுத்திருக்கீங்க! கிட்டத்தட்ட மேனே[ஜர்] மாதிரி! ரேகா வலிய வீட்டு வேலைகள[ை] இழுத்துப் போட்டுக்கிட்டு செய்றா! ஏற்கனவே நம்ம சுபிக்கு ரேகான்னாலே பிடிக்கலே. வேலைக்காரி மாதிரி டீல் பண்ணிட்டிருக்கா! இப்ப அவ ரூமுக்கே சாப்பாடு கொண்டு போய் கொடுக்க சொல்றீங்க! இது போதாதா சுபிக்கு? சுபிக்கு அதிகமா செல்லம் கொடுத்து வளர்த்துட்டீங்க! அதனால மனுஷங்களை மதிக்கத் தெரியலே அவளுக்கு!''

''நல்லா சொல்லுப்பா உங்கம்மாவுக்கு!'' என்று ஆமோதித்தார் ஏகாம்பரம்.

''ஒரு பொண்ணை அநியாயமா இழந்தோம். அதனால சுபி செய்யற எந்த ஒரு சின்ன தப்பையும் கண்டிக்க மனசு வரலைங்க! நான் என்ன பண்ணட்டும்?''

''சரி...சரி... அந்த பொண்ணை இனிமேல் வீட்டு வேலை எல்லாம் செய்ய அனுமதிக்காதே! பாதருக்கு தெரிஞ்சா... என்னை என்ன நினைப்பார்? அவளை வெளிவேலைகளுக்கு அனுப்பி பழகு!''

''சரிங்க!'' என்றாள் அம்பிகா.

கட்டிலில் குப்புற கவிழ்ந்து படுத்திருந்தாள் சுபத்ரா. கதவு திறந்து தான் இருந்தது. ஆனாலும் உள்ளே போக பயமாக இருந்தது.

கதவின் மேல் இருவிரல்களால் தட்டி சப்தமெழுப்பினாள் ரேகா.

பாம்பை போல் திரும்பி தலை தூக்கிப் பார்த்த சுபத்ராவுக்கு... அடங்கியிருந்த கோபம் கிளர்ந்தெழுந்தது.

''எங்கே வந்தே?''

''சாப்பாடு கொண்டு வந்திருக்கேன்!''

''நான் கேட்டேனா?''

''கோபத்துல சாப்பிடாம வந்துட்டீங்க! வயித்தை காயப்போடாதீங்க... சாப்பிடுங்க!''

''ஸ்டாப்பிட்! நீ யாரு எனக்கு அட்வைஸ் பண்ண? மரியாதையா வெளியே போய்டு!''

''சாப்பாடை உதாசீனம் பண்ணாதீங்கம்மா...!''

சுபத்ரா எழுந்து அவள் அருகில் வந்தாள்.

''என்ன சாபம் தர்றியா? சாப்பாடை உதாசீனம் பண்ணினா, எனக்கு சாப்பாடு கிடைக்காதா? நான் என்ன உன்னை மாதிரி அப்பா, அம்மா இல்லாத அனாதையா? எடுபிடி வேலைக்கு வந்த அனாதை... நீ... நீ எனக்கு அட்வைஸ் பண்றியா? மரியாதையா இதை எல்லாம் எடுத்துக்கிட்டு வெளியே போய்டு!''

அவளின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் இதயத்தை ரம்பம் போல் அறுக்க... திகைத்துபோய் நின்றிருந்தாள்.

''போன்னு.... சொல்றேனில்லே?'' ஆத்திரத்தில் அவள் கையிலிருந்த தட்டை பறித்து அவள் மீதே வீசியெறிய... அதிலிருந்த சாப்பாடும் சாம்பாரும் ரேகா மேல் அபிஷேகமாக... கண்களில் சாம்பார் பட்டு திக்கென்று எரிந்தது.

துடித்துப்போய் விட்டாள் ரேகா!

வோல்டேஜ் குறைந்து சோகையாய் ஒளிர்ந்துக் கொண்டிருந்தது.

தூக்கம் வரவில்லை. கண்களை மூடவும் முடியவில்லை. திறக்கவும் முடியவில்லை. இரண்டு நாட்களாகியும் எரிச்சல் அடங்கவேயில்லை.

'நான் என்ன பண்ணிவிட்டேன்? ஏன் சுபத்ராவிற்கு என்னைக் கண்டால் பிடிக்கவில்லை? அனாதைகள் இவ்வுலகின் பாவ சுமைகளா? ஒதுக்கி வைக்கப்பட்ட கருவேப்பிலைகளா? அனாதை என்கிற முத்திரை நாங்கள் வலிய விரும்பி வாங்கிக் கொண்ட பட்டமா என்ன? எங்களுக்கும் இதயம் இருக்கிறது. அன்புக்கு ஏங்கும் மனசு இருக்கிறது. சுயநலக்கார பெற்றோர்களால் வீதியில் வீசியெறிப்பட்ட எங்களை குப்பையாய் நினைத்து வெறுக்கும் உலகத்தாரின் மனோபாவம் என்று மாறும்?'

'சுபத்ரா என்னை நீயாய் வெறுக்கிறாள். இனிமேலும் நான் இங்கிருப்பது சரியா?'

'வேறெங்கே போவது? சித்தி, அத்தை என்று உனக்கு உறவினர்கள் இருக்கிறார்களா... அவர்களை தேடிப்போக? சுபத்ரா சின்னப் பெண்! தன் அம்மாவின் அன்பை பங்கு போட்டுக் கொள்ள விரும்பாத குழந்தை மனசை கொண்டவள்! அவளை உன் அன்பால் மாற்ற முடியாதா என்ன? இதைவிட பாதுகாப்பான இடம் வேறெங்கே இருக்க முடியும்? தாய் தந்தையைப் போல் அன்பை கொட்டும் இவர்களை விட நல்லவர்கள் வேறிடத்தில் கிடைப்பார்களா? கொஞ்சம் பொறுத்துக் கொண்டிரு! இவர்களே... வேறு நல்ல வேலைக்கு ஏற்பாடு செய்வார்கள்!' தன்னைத்தானே சமாதானப்படுத்தி கொண்டாள் ரேகா.

அர்விந்தின் செல்போன் சிணுங்கியது. காரை ஒரு ஓரமாய் நிறுத்தி விட்டு பேசினான்.

''ஹலோ...!''

''ஹாய் அர்விந்த்!''

''ஹலோ சுபி... நல்லாருக்கியா? என்ன... ரொம்ப நாளா உன்கிட்டேர்ந்து போன் வர்றதில்லே?''

''இதே கேள்விய நான் திருப்பிக் கேட்டா?''

''ஓ... ஸாரி சுபி! டைட் வொர்க்! மூச்சு விடக்கூட நேரமேயில்லே...!''

''டெய்லி ஒரு அஞ்சு நிமிஷம் எனக்காக ஒதுக்க முடியாதா அர்விந்த்?''

''ஒக்கே... ஒக்கே... இனி டெய்லி பேசறேன் ஒக்கே?''

''அர்விந்த்... நான் உங்களைப் பார்க்கணுமே!''

''எப்ப?''

''இப்ப!''

''இப்பவேவா? அப்படியென்ன அவசரம்?''

''மனசு சரியில்லே அர்விந்த். உங்களை பார்க்கணும் போலிருக்கு!''

''என்னாச்சு?'' என்றான் ஆச்சர்யமாய்.

''எனக்கு இங்கே இருக்கவே பிடிக்கலே!''

''ஏன் சுபி... என்னென்னவோ பேசறே?''

''எங்க வீட்டுக்கு அனாதை ஆஸ்ரமத்திலேர்ந்து ரேகான்னு ஒருத்தி வந்திருக்கா! அம்மாவும், அப்பாவும் அவளை தலைமேல தூக்கிவச்சிட்டு ஆடறாங்க அர்விந்த்!''

''அப்படியா?'' என்று வாய் பேசியதே தவிர, அவன் கண்கள் காருக்கு வெளியே எதையோ பார்த்து அகன்றது.

'யாரவள்?' சூப்பர் மார்க்கெட்டிற்குள் நுழைகிற அந்த பெண். ஹாஸ்பிடலில் சேர்த்திருந்தேனே... அவளைப் போலவே இருக்கிறதே? அவள்தானோ?

கையில் பெரிய பையுடன் சூப்பர் மார்க்கெட்டிற்குள் சென்று கொண்டிருந்தாள் ரேகா!

போனில் சுபத்ரா பேசிய எதுவும் சிந்தையைத் தொடவில்லை.

''சுபி... ஐ... காண்டாக்ட் லேட்டர்!'' என்று போனை கட் பண்ணிவிட்டு அவசர அவசரமாய் காரை விட்டு இறங்கினான் அர்விந்த்.





# 5

**சூ**ப்பர் மார்க்கெட்டில் நுழையும் போதே... சற்று தூரத்தில் பொருட்களை தேர்வு செய்து கொண்டிருந்த அவளை... 'அவள் தான்' என்று உறுதி செய்து கொண்டான் அர்விந்த்.

உடனே ஓடிச் சென்று அவள் முன் நிற்காமல்... எட்டவிருந்தே அவளை இன்ச் பை இன்ச்சாய் கவனித்தான்.

நிதானமாய், கவனமாய் பேக்கிங் மேலிருந்த எக்ஸ்பயரி காலத்தை உன்னிப்பாய் கவனித்து எடுத்துக் கொண்டிருந்தாள்.

'அந்த கவனம்' அர்விந்தை கவர்ந்தது.

'எல்லாவற்றிலும் எச்சரிக்கையான பெண்! வெரிகுட்!' அர்விந்தன் மெல்ல நடந்து பொருட்களை பார்வையிடுவதுப் போல... அவளை பார்வையிட்டான். அவள் இவனை கவனிக்கவில்லை. இவனை மட்டுமல்ல... அங்கிருந்த யாரையுமே கவனிக்காமல் காரியமே கண்ணாக இருந்தாள்.

தேர்வு செய்த பொருட்களோடு பில் கவுண்டர் பக்கம் வந்தாள்.

'யாரிவள்? இந்த ஊர்க்காரியா? பார்த்தால் படித்தப் பெண்ணாட்டம் இருக்கிறாள். சொல்லாமல் கொள்ளாமல் ஏன் ஓடிப்போனாள்? அதற்கான பதிலை தெரிந்து கொள்ளாமல் தன் மனம் சாந்தியடையாது' என்பதை தெளிவாக உணர்ந்திருந்தான்.

பணத்தை செலுத்திவிட்டு... தன்னை தாண்டிப் போனவளை புன்னகையுடன் பின் தொடர்ந்தான்.

''ஹலோ... எக்ஸ்க்யூஸ்மீ!''

குரல் கேட்டு திரும்பிய ரேகா... அர்விந்தை கண்டு ஸ்தம்பித்து போனாள்.

''ஹவ் ஆர் யூ?''

''...''

''டு யூ ரிமெம்பர் மீ?''

''...''

''உங்க முகத்தை பார்த்தா... என்னை நீங்க இன்னும் மறக்கலேன்னு புரியுது. ஏன் மேடம் சொல்லாம, கொள்ளாம ஓடிப்போயிட்டீங்க?''

''ஸாரி''

''இட்ஸ் ஓக்கே! ஏன் போனீங்கன்னு சொன்னாதான் எனக்கு நிம்மதி! ப்ளீஸ்... டெல் மீ!''

''என்னால யாருக்கும் கஷ்டம் வரக்கூடாதுன்னு தான் போய்ட்டேன்!''

''கஷ்டமா? எனக்கென்ன கஷ்டம்?''

''நீங்க எனக்காக செலவு பண்ற பிடிக்கலே!''

''இதிலென்னங்க இருக்கு? என்னா தானே உங்களுக்கு ஆக்ஸிடண்ட் ஆச்சு?'' வியப்பாய் கேட்டான்.

''சாதாரண அடிதானே? தவிர, நா அவசரமா ஒரு இடத்துக்கு போ வேண்டியிருந்தது!...''

''அதை என்கிட்டே சொல்லியிருந்தா, நானே அழைச்சிட்டுப் போயிருப்பேனே பை..த..பை.. என் பேர் அர்விந்த்! சாஃப்ட்வே கம்பெனி நடத்திட்டிருக்கேன்!''

''.....''

அவள் ஏதாவது பேசுவாள் என் எதிர்பார்த்தவனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்காம அங்குமிங்கும் தவித்த... அவள் கண்களை ரசித்தான். நேர்க்கோடாய் இறங்கி வளைந் நாசி... அதில் கண்ணுக்கு தெரியாதளவி சின்ன சைஸில் ஒட்டிக் கொண்டிருந்த ஒற்ன சிவப்புக்கல் மூக்குத்தி, கச்சிதமான ரோஸ்நி உதடுகள், வட்ட முகத்தில் கருப்பு நிற ஸ்டிக் பொட்டு, அடர்த்தியான கூந்தல்... கோதுமை நிறம், ஐந்தடி உயரம்... அளவான உடல்வாகு என்று ஒவ்வொரு ஓவியனுக்கும் பிடித் கற்பனை உருவத்தின் நிஜமா நின்றிருந்தவளை... தன்னையும் அறியாம ரசித்து பார்த்துக் கொண்டிருந்தான் அர்விந்த்.

''அப்ப... நான் வர்றேன் சார்!'' என் நகர்ந்தாள்.

''ஒன் மினிட் ப்ளீஸ்!''

'என்ன?' என்பதுப் போல் பார்த்தவளுக் அவனின் பார்வை அவளுள் தகித்த அவனிடமிருந்து கண்ணிற்கு புலப்படா ஏதோவொன்று இடம் மாறி அவளு பாய்ந்தது. பார்வையை தழைத் கொண்டவளின் உடல் நடுங்கியது.

''யுவர் குட் நேம் ப்ளீஸ்!''

''அவசியம் தெரிஞ்சுக்கணுமா?''

அந்த கேள்வி அர்விந்தை தாக்கியது.

''அது... வந்து... அப்படியெல்ல இல்லே... பரஸ்பரம் தெரிஞ்சுக்கலாம்னு...''

''ஸாரி... எனக்கு விருப்பமில்லே! எனக்கு வேலையிருக்கு...'' குரலில் கடுமையை தக்கி வார்த்தை அம்பை வீசியெறிந்து விட்டு திரும்பி பாராமல் நடந்தாள்.

அர்விந்தின் முகம் அவமானத்தில் றுத்துப் போய் விட்டது.

**அ**றை கடிகாரம் இரண்டு முறை டித்து ஓய்ந்தது. கொசுக்களின் ரீங்காரம் ள்ளிரவில் கர்ண கடூரமாய் கேட்டது.

தூக்கம் வராமல் படுக்கையிலிருந்து ழுந்தமர்ந்தாள் ரேகா.

'நானா... நானா அப்படி நடந்துக் காண்டேன்? அந்தளவு கடுமையாய் கூட னக்கு பேச வருமா? என்னாகி விட்டது னக்கு? பெயர் என்ன என்று தானே கட்டான்? அதற்கேன் அப்படி கோபம் ந்தது?'

'நீ பேசியதில் எந்த தவறுமில்லை ரேகா... தர் சொன்னதை மறந்து விடாதே! பரும்பாலான மனிதர்கள் சாங்குமிக்கவர்கள். அக்கறை காண்டவர்கள் போல் நடித்து அழிவைத் தேடி நபவர்கள். இந்த அர்விந்தனும் பாசாங்கான விதனாக ஏன் இருக்க முடியாது?'

'ஏன் அவன் நல்லவனாகவும் ருக்கலாமல்லவா? தன்னால் விபத்து நேர்ந்து ட்டதே என்கிற பதைப்பில் உன்னைக் ப்பாற்ற விழைந்தவனிடம் நாகரீகமாய் ன்றி' என்ற ஒரு சிறு வார்த்தையையாவது றிவிட்டு வந்திருக்கலாமே! இது தான் ண்டவன் உனக்கு கற்றுத்தந்த விசுவாசமா?'

'அதற்காக... அந்நிய ஆணொருவன் பயரென்ன என்று கேட்டால் கூறிவிட டியுமா என்ன?'

'தவறில்லை தான்! நீயும் கத்திலடிப்பதுப் போல் சொல்ல முடியாது ன்று கூறிவிட்டு வந்து விட்டாய்? பிறகென்ன பதனை? உன் வார்த்தையால் அவன் முகம் டிப்போனதே... அதனாலா?'

'ஏன் பதில் சொல்ல முடியவில்லை கா? உன்னையறியாமல் உன் மனம் அவனை ாக்கி ஓடுவதால் தானே? எப்பேர்ப்பட்ட னக்காரன்? அவனை நினைக்கக்கூட நமக்கு குதியில்லை என்ற தாழ்வுணர்ச்சியால் தானே? ம் ஒரு அனாதை என்று தெரிந்தால்... லட்சியமாய் எண்ணி விடுவான் என்று னே? நீ செய்தது சரிதான் ரேகா! குதிப்பதற்கு முன் குனிந்து பார்க்க வேண்டும். முடிப்பதற்கு முன் எண்ணிப் பார்க்க வேண்டும். மனசை எப்போதும் கடிவாளம் போட்டு கட்டியிருப்பது தான் உன்னைப் போன்ற, ஏனென்று கேட்க உறவில்லாத அபலைகளுக்கு நல்லது. அந்த அர்விந்தன் நல்லவனாகவே இருக்கட்டும். ஆனால், அவன் நிழலில் நிற்கக் கூட தகுதியில்லாத உன் மனசை அலைபாய விடாதே! ஒழுங்காய் மனசை துடைத்துவிட்டு நிம்மதியாய் உறங்கு!'

மனசாட்சி அவளை அதட்ட... ரேகா பெருமூச்சுடன் படுத்தாள். இப்போது எண்ணங்களின் கனம் குறைந்திருந்ததால்... உறக்கம் வந்து தழுவிக் கொண்டது.

**மா**டிப்படியிலிருந்து நிதானமாய் இறங்கிக் கொண்டிருந்த அர்விந்தை கவனிக்கத் தவறவில்லை வடிவுக்கரசி.

'என்னாச்சு என் பிள்ளைக்கு? நான்கு நான்கு படிகளாய் தாவித்தாவி இறங்குபவன்... இன்று ஒவ்வொன்றாய் எண்ணிக் கொண்டு வருகிறான்? நேற்றிரவும் பசியில்லை என்று சாப்பிடாமல் படுத்து விட்டான். முகத்தில் கலகலப்பே காணோம்.'

நின்றிருந்த அம்மாவை கவனிக்காமல் கடந்து சென்றான்.

''அர்விந்த்!''

''ம்... என்னம்மா?''.

''என்னப்பா... எல்லாம் ரெடியா எடுத்து வச்சிருக்கேன்! டிபன் சாப்பிடாம கிளம்பறே?'' என்றாள்.

''பசிக்கலேம்மா.''

''அதெப்படிப்பா பசிக்காமப் போகும். உட்காரு.'' மகனின் கையை பிடித்து சேரில் அமர்த்தினாள்.

தட்டு வைத்து டிபன் பரிமாறினாள்.

அர்விந்த் வேறு வழியின்றி வேண்டா வெறுப்பாய் சாப்பிட்டான்.

''அர்விந்த்!''

''என்னம்மா?''

''வர்ற இருபத்திரெண்டாம் தேதி உன் பிறந்தநாள் வருது.''

''ஆமாம்!''

''இருபத்தியேழு முடிஞ்சு... இருபத்தியெட்டு வயசாகப் போகுது.''

''...?''

''நம்ப பரம்பரையிலே ஆம்பளைங்க இருபத்தியெட்டு வயசாகியும் கல்யாணமாகாம

யாரும் இருக்கவில்லே!''

''அப்ப.. நான் அந்த ரெக்கார்டை உடைச்சிட்டேன்னு சொல்லுங்க!''

''இது விளையாடற விஷயமில்லே அர்விந்த். உங்கப்பாவுக்கு கல்யாணமாகறப்ப இருபது வயசு தெரியுமா?''

''அம்மா... அதெல்லாம் எதுக்கு இப்ப?'' என்றான் எரிச்சலுடன்.

''நீ என்ன சொன்னாலும் சரி. இனி உன் பேச்சை கேக்கற நிலைமையில நாங்க இல்லே. உடனடியா உனக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்னு முடிவுப் பண்ணிட்டோம்.''

''அம்மா...''

''வயசுப் பிள்ளைக்கு எதெது எப்பப்ப நடத்தணும்னு எங்களுக்குத் தெரியும். கருவேப்பிலை கொத்து மாதிரி ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணுன்னு பெத்து வளர்த்து... இன்னும் கல்யாணம் பண்ணாம வச்சிருக்கீங்களேன்னு பார்க்கறவங்க எல்லாம் கேக்கறப்ப.. மனசுக்கு ரொம்ப வேதனையா இருக்குப்பா!''

''எப்படியோ... . கோபுரங்கள் சாய்வதில்லை சுகாசினி மாதிரி உனக்கொரு மருமகளை கொண்டு வந்து மணவறையிலே என் பக்கத்துல உட்கார வைக்கப்போறே... அப்படித்தானே?''

''அம்மா... உனக்கு அப்படியா கண்ணை மூடிக்கிட்டு பொண்ணு பார்ப்பேன்? என் பிள்ளைக்கு ராணி மாதிரி அழகா, பெரிய இடத்துல பார்க்க மாட்டேனா? எல்லாரும் மூக்கில விரலை வைக்கப்போறாங்க பார்!''

''போரடிக்குது.. நேரமாச்சு நான் கிளம்பறேன்.'' பாதியிலேயே எழுந்து கையை கழுவிக் கொண்டு புறப்பட்டான்.

''அர்விந்த்.. அர்விந்த்'' வடிவுக்கரசி அழைத்ததையும் பொருட்படுத்தாமல் போர்டிகோவிலிருந்த காரை உருவி எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

எடுத்ததும் எண்பது கிலோ மீட்டர் வேகத்தில் பறப்பவன் ஆமை வேகத்தில் காரை செலுத்தினான்.

'ஸாரி.. எனக்கு விருப்பமில்லே.. எனக்கு வேற வேலையிருக்கு.'

ரேகா பேசிய வார்த்தை காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றியதுப் போல் எரிந்தது.

அந்த வார்த்தையில் ஒளிந்திருந்த அர்த்தம்... எரிச்சலுடன் வெளிப்பட்ட தொனி.. ஆறடி உயர ஆண்மகனை சாண் உயரத்துக்கு தலையில் அறைந்தது.

'அர்விந்த்... அவள் யாரோ எவளோ அவள் சொன்ன வார்த்தைக்காக நீ இப்ப அப்செட் ஆகலாமா?'

வேறு யார் பேசியிருந்தாலும் தாங்கிக் கொண்டிருந்திருப்பான். ஆனா அவள் பேசியதைத்தான் ஏனோ தாங் கொள்ள முடியவில்லை. தூக்கத்தை பசியையும் பறித்து அவனை கலங்கடி கொண்டிருக்கிறாள்.



# 6

ஒரு வாரமாகியும் சமாதானமாகவில்லை அர்விந்துக்கு. மனதை வேறெதிலாவது திசை திருப்பி தேவலை என்று தோ... சட்டெ சுபத்ராவின் முகம் நினைவிற்கு வந்தது.

அன்று அவளால் தானே... சுபத்ரா போனை கட் பண்ணிவிட்டு ஓடினே பாவம்... என்னை என்ன நினைத்திருப்ப அதன் பிறகு நானும் போன் பண்ணவில்ல இப்போது போனில் பேசுவதைவிட நே போனால் என்ன?

ஆபீஸிலிருந்து உடனே ஏகாம்பரத் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

வாசலில் இவனை பார்த்ததும் மு மலர்ந்துப் போனாள் அம்பிகா.

''வாங்க.. தம்பி... உள்ளே வாங்க!''

''நல்லாயிருக்கீங்களா ஆன்ட்டி?''

''ரொம்ப நல்லாயிருக்கேன். ரொம்ப நாளா ஆளைக் காணோம். சுசிலாவோட பிறந்தநாள் விழாவுல ஒவ்வொரு வருஷமும் கலந்துக்குவீங்க. இந்த வருஷமும் எதிர்பார்த்தேன்!''

''எதிர்பாராம சில வேலைகள் வந்துடுச்சி. வரமுடியாம போய்டுச்சு! ஸாரி ஆன்ட்டி!''

''அடடா.. அதுக்கு எதுக்கு ஸாரியெல்லாம்?''

''அங்கிள் இல்லையா?''

''இன்னும் ஆபீஸ்லேர்ந்து திரும்பலே!''

''ஹாய் அர்விந்த்.... ஹவ் ஆர் யூ?'' ஆர்ப்பாட்டமாய் அழைத்த படி உள்ளிருந்து வந்தான் தினேஷ்.

''ஃபைன்...!'' என்றபடி கையை பற்றி குலுக்கினான்.

''பிஸினெஸெல்லாம் எப்படி போகுது அர்விந்த்?''

''இந்தப்பக்கமாகத்தான்!'' கிண்டலாய் இடதுபக்கம் கையை காட்டினான்.

''எத்தனை வயசானாலும் குறும்பு மட்டும் மாறலே?''

விளையாட்டாய் தோளில் தட்டினான் தினேஷ்.

''சுபத்ரா... காலேஜ்லேர்ந்து வந்துட்டாளா?'' என்றான் அர்விந்த்.

''காலேஜ்லேர்ந்து வந்துட்டாளாவா? ஒரு வாரமா அவள் காலேஜிக்கே போகலே தம்பி!''

''ஏன்? ஸ்டடி லீவா?''

''ஒரு லீவுமில்லே! ஏன்டி போகலேன்னு கேட்டா...! ஏன் நான் இந்த வீட்லே இருக்கறது உங்களுக்கு பிடிக்கலையான்னு சம்மந்தமில்லாம எரிஞ்சு விழறா! அம்மாடி... நீ போகறதும், போகாததும் உன் இஷ்டம்னு கப்சிப்புனு வாயை மூடிக்கிட்டோம்.'' சிரித்தபடி சொன்னாலும் அம்பிகாவின் குரலில் கவலை இருந்தது.

''அடடா...!''

''வயது ஏறிக்கிட்டே போகுது. ஆனா, குழந்தைதனமா எல்லா விஷயத்துக்கும் பிடிவாதம் பிடிக்கிறா!''

''எங்கே இருக்கிறா?''

''அவளோட ரூம்லதான்!''

''நான் அவளை பார்த்துட்டு வர்றேன் ஆன்ட்டி!'' என்று மாடிப்படியேறிப் போனான்.

சுபத்ராவின் அறைக்கதவு திறந்தே இருந்தது. அர்விந்த் இருவிரல்களால் தட்டி சப்தமெழுப்பினான்.

''கதவு திறந்துதானே இருக்கு!'' குரல் மட்டும் வந்தது.

''அதுக்காக... தட்டாம உள்ளே வர்றது தப்பில்லையா அம்மணி?''

குப்புற கவிழ்ந்து படுத்திருந்த சுபத்ரா அந்த குரலைக் கேட்டதும்... வாரி சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

''அ...ர்...வி..ந்...த்?''

''நானே தான்!'' மார்புக்கு குறுக்கே கைகளை கட்டிக் கொண்டு கதவோரம் சாய்ந்தபடி நின்றான்.

வாடிய பயிர் மழைத்தண்ணீரை கண்டது போல் அவளுள் புத்துணர்ச்சி பாய்ந்தது. பொங்கிய சந்தோஷத்தை உடனே உள்ளிழுத்துக் கொண்டு... முகத்தை பழையபடி உம்மென்று வைத்துக் கொண்டு ஒன்றும் பேசாமல் கட்டிலில் போய் அமர்ந்தாள்.

அவளின் கோபம் உணர்ந்தவனாய் சிரித்தபடி அவள் எதிரேப் போய் அமர்ந்தான் அர்விந்தன்.

''உன் ரூமுக்கு வந்தவனை வான்னு கூப்பிட மாட்டியா சுபி?''

''நான் ஏன் கூப்பிடணும்? நீங்க யாரோ?

## ஓவியக்கலையில் உயர்ந்து நிற்கும் மாண



சாந்தி பாலச்சந்திரன் 10-ம் வ மாணவி. இயற்கையிலேயே ஓவியம் வரையும் திறமை பெற்றவர். வயதிலேயே இவரது ஓவியங் பெர்லினில் இந்திய கலாசார மை சார்பில் நடந்த ஓவியக் கண்காட்சி இடம்பெற்றன.

வருகிற ஏப்ரல் மாதம் இ ஓவியங்கள் மும்பையில் ஓவி கண்காட்சியில் வைக்கப்பட உள் ாங்க் ஆப் பரோடா க்கண்காட்சிக்கான பாறுப்பை ஏற்றுக் காண்டுள்ளது.

இவ்வளவு சிறிய யதில் எப்படி ங்களால் இவ்வளவு ற்புதமாக ஓவியங்களை வரைய டிகிறது என்று சாந்தி பாலச்சந்திரனிடம் கட்டபோது, ''மனதில் தோன்றியதை ரைகிறேன். ஓவியம் எனக்கு மிகவும் டிக்கிறது. அதனால் வரைகிறேன்'' என்று பதில் அளிக்கிறார்.

-திருமகள்.

தான் வாரோ?''

''அப்ப நான் எந்திரிச்சி போய்டவா?''

''அது உங்க இஷ்டம்! போன்ல பேசிட்டிருக்கும் போதே... முகத்திலடிக்கிற மாதிரி கட் பண்ணிட்டு போகிற மாதிரி... இப்பவும் எந்திரிச்சி போய்டலாம்... தப்பில்லே!''

''ஓஹோ... அம்மணிக்கு அதான் கோபமா? சுபி... நிஜமாகவே அன்னைக்கு ரொம்ப அர்ஜெண்ட்டான ஒரு விஷயத்துக்காக போனை கட் பண்ணிட்டு ஓட வேண்டியதாயிருந்தது!''

''ஆனா, சுபி இன்னும் உயிரோட தானே இருக்கா? அதுக்குப் பிறகு ஒரு போன் பண்ணக் கூட தோணலே இல்லே?''

சொல்லும்போதே கண்கலங்கியது.

''சேச்சே... இப்படியெல்லாம் பேசக்கூடாது சுபி!''

அவள் வாயைப் பொத்தினான். கண்ணீர் அவன் கையை நனைத்தது. சுபத்ரா இந்தளவு உடைந்துப் போயிருப்பாள் என்று அர்விந்த் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இதயம் துணுக்குற கண்களை துடைத்து விட்டான்.

''எல்லாரும் மாறி போய்ட்டாங்க! அம்மா அப்பாதான் மாறிப் போய்ட்டாங்கன்னா... நீங்களும் என்னை அவாய்ட் பண்றீங்க!''

''உன்னை எப்படி சமாதானப் படுத்தறதுன்னே தெரியலே. யாரும் மாறவுமில்லே... நான் உன்னை அவாய்ட் பண்ணவுமில்லே! சரி... ஏன் காலேஜுக்குப் போகலே?''

''போக பிடிக்கலே!''

''அதான் ஏன்?''

''உங்க மேல கோபம்!''

''வாட்? என் மேலயா? ஏன்?'' என்றான் திடுக்கிட்டு.

''இந்த வீட்டுக்கு புதுசா ஒரு அனாதை வந்திருக்கா. அவளைக் கண்டாலே எனக்கு பிடிக்கலே அர்விந்த்! அவளை ஒரு வார்த்தை சொன்னாக்கூட அப்பாவும் அம்மாவும் என்னைத் திட்டறாங்க! என்னை விட அவதான் முக்கியமா போய்ட்டா அவங்களுக்கு! சரி.. நீங்க இல்லேன்னா என்ன? எனக்கு என் அர்விந்த் இருக்கார்ன்ற தைரியத்துல இருந்தேன்! ஆனா நீங்களும் என்னை அவாய்ட் பண்ணினதும் நொந்துப் போய்ட்டேன் தெரியுமா? வாழவேப் பிடிக்கலே... வெளியே போகவே பிடிக்கலே!''

''சு...ப...த்...ரா!'' திகைப்புடனும், பயத்துடனும் அவளைப் பார்த்தான்.

''என்ன சொல்றே சுபத்ரா? என்னால வெளியே போகலியா? ஏன்?''

''ப்ளீஸ்.. ஐ லவ் யூ ஐ லவ் யூ ஸோ ...

அர்விந்த்!'' அவன் கையைப் பற்றி ... கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டு சுபத்... கண்களை மூடிக்கொண்டாள்.

அந்த செய்தியும், அவள் செய்கை... புதிராயிருக்க... அர்விந்த் செய்வதறியாம... திகைத்துப் போய் அமர்ந்திருந்தான்.

''என்னால... நீங்க இல்லாம வ... முடியாது அர்விந்த்! நீங்க எனக்கில்லேன்... செத்துப் போய்டுவேன் அர்வி... என்னை...என்னை நீங்களும் லவ் பண்றீ... தானே? எனக்குத் தெரியும்.... என்னை ... பண்றீங்க!'' பதறியபடி அவன் நெஞ்சி... சாய்ந்துக் கொண்டாள் சுபத்ரா.

அர்விந்த் நடுங்கிப் போய்விட்டான்.

'என்ன சொல்கிறாள் இவள்? ந... இவளை காதலிக்கிறேனா?'

நெஞ்சில் முகம் புதைத்திருந்த அவ... விலக்கவும் பயமாயிருந்தது. தொட... அச்சமாயிருந்தது. இருதலை கொ... எறும்பாய் தவித்தான் அர்விந்த்.

''அம்மா... டெலிபோன் பில்... கட்டிட்டு, நீங்க சொன்ன மாதிரி பரங்கிம... போய் சித்ராம்மா வீட்லே அந்த கவ... கொடுத்துட்டு வந்துட்டேன்!'' களைத்து... போய் திரும்பியிருந்த ரேகா அம்பிகாவி... ஒப்புவித்துக் கொண்டிருந்தாள்.

''நான் கொடுத்தனுப்பிய கவர்ல எ... இருந்ததுன்னு தெரியுமா ரேகா?''

''தெரியாதும்மா! கொடுத்தனுப்பியதை பத்திர... ஒப்படைச்சிட்டு வந்துட்டேன்! அதுதா... என்னோட வேலை?''

அம்பிகா சிரித்துக் கொண்டாள்.

''சரி.. எனக்கு குடிக்க கொஞ்சம் தண்... கொண்டு வா ரேகா!''

''இதோ வந்துட்டேம்மா!''

சில நொடிகளில் தண்ணீரோடு வந்த...

''என்ன ரேகா... என் செல்போன் ... கட்டிட்டியா?'' தினேஷ் அங்கு வந்தான்.

''ஆச்சு சார்... இதோ ரிஸீப்ட்!'' தந்தா...

''ஒக்கே... தாங்க்ஸ்...'' வாங்கிக் கொ... நகர்ந்தான்.

''ரேகா... நீ பே... சமையல்காரம்மாகிட்டே ரெண்டு பாதாம்...



...வாங்கிக்கிட்டு மாடியில உள்ள கெஸ்ட்டுக்கு கொண்டு போய் கொடு!'' என்றாள் கனகா.

ரேகா சமையலறை நோக்கி சென்றாள்.

''கனகா...உனக்கு எத்தனை முறை சொல்வேன்? ரேகாவை இந்த மாதிரி எடுபிடி வேலையெல்லாம் செய்ய விடாதேன்னு?''

''இதிலே என்ன தப்பிருக்கு? ஒரு வேலையும் செய்யாம சும்மா மூணு வேளையும் சாப்பிட்டு சம்பளம் வாங்கறதுக்கு நம்ம வீட்லே ஒண்ணும் பணம் மரத்திலே காய்க்கலியே!''

''ரேகாவும் படிச்ச பொண்ணுதான் கனகா! அதுக்காகதான் சொல்றேன். அவ படிச்ச படிப்புக்கு மரியாதை தர வேண்டாமா? நான் அவளை சித்ராம்மா வீட்டுக்கு அனுப்பினதுக்கு ஒரு காரணமிருக்கு. அவகிட்டே ஒட்டாம கொடுத்தனுப்பின கவருக்குள்ளே அஞ்சாயிரம் ரூபாய் வச்சிருந்தேன். ஒரு சின்ன டெஸ்ட்டுக்காக! அந்த கவருக்குள்ளே என்ன இருக்குன்னு பிரிச்சு பார்க்காம கொடுத்த அந்த நேர்மை அவளிடம் இருக்கான்னு தெரிஞ்சுக்கதான் அனுப்பினேன். ரேகா நான் வச்ச டெஸ்ட்டுல ஜெயிச்சுட்டா!''

''அத்தை ஏன் இப்படி வெகுளியா இருக்கீங்க?'' என்ற கனகா முகத்தை திருப்பிக் கொண்டாள்.

ரேகா ட்ரேயில் இரண்டு டம்ளர் பாதாம்கீருடன் வந்தாள்.

''ரேகா... அதை இப்படிக் கொடு! ...வந்திருக்கிறவர் நம்ம வீட்டுக்கு ரொம்ப வேண்டியவர். நானே கொடுத்துடறேன். வேற வேலை எதுவுமில்லே. நீ ரெஸ்ட் எடுக்கணும்னு நினைச்சா.. உன் ரூமுக்கு போய்டலாம்!''

''சரிங்கம்மா!'' என்றபடி ட்ரேயை அம்பிகாவிடம் கொடுத்து விட்டு அவுட் ஹவுஸை நோக்கி நடந்தாள்.

''கொஞ்சம் விட்டா இவளை தானே ...தெடுத்து வளர்த்தாலும் ஆச்சர்யப் ...படறதுக்கில்லே!'' தனக்குத்தானே ...லம்பியபடி நகர்ந்தாள் கனகா.

அம்பிகா பாதாம்கீருடன் மாடியேறிச் சென்றாள்.

அறைக்குள் செல்ல முயன்ற அம்பிகா... ...ள்ளிருந்து வந்த பேச்சுக் குரல் கேட்டு ...ப்படியே நின்றாள்.

''என்னை... என்னை நீங்களும் லவ் ...ண்றீங்க தானே? எனக்குத் தெரியும். என்னை ...வ் பண்றீங்க!''

சுபத்ராவின் நெகிழ்ந்த குரலும்... அதன் ...பின் தொடர்ந்த மௌனமும் அம்பிகாவை முதலில் அதிர்வுற செய்தாலும் அடுத்த நொடியே சந்தோஷம் நெஞ்சை நிரப்பியது.

'முருகா.. உனக்கு கோடானு கோடி நன்றியப்பா!' உணர்ச்சி பெருக்குடன் மானசீகமாக கரம் குவித்தாள்.

சுபத்ராவிற்கும் அர்விந்துக்கும் திருமணம் செய்ய இரு வீட்டாருமே ஆசைப்பட்டது நிஜம். ஆனால், இவர்களுக்குள் அப்படியொரு எண்ணம் இருக்கிறதா என்று தான் புரிபடவில்லை. இதோ... இப்போது புரிந்து விட்டதே!

அவர்களை தொந்தரவு செய்ய விரும்பாமல் மெல்ல கீழிறங்கி வந்த அம்பிகா, தன் கணவருக்கு போன் செய்து விஷயத்தை சொன்னாள்.



7

புல்வெளியில் நான்கு சேர்கள் போடப்பட்டு சுபத்ராவை தவிர்த்து அனைவரும் அமர்ந்திருந்தனர்.

ரேகா கார்ட்லஸ் போனுடன் ஏகாம்பரத்தை நெருங்கினாள்.

''சார்.. கால் பார் யூ''

ஏகாம்பரம் வாங்கி காதில் வைத்தார்.

''ஹலோ..''

''...''

''ஹலோ.. சம்மந்தி சொல்லுங்க'' குரலில் அளவிட முடியாத மகிழ்ச்சியும், ஆர்ப்பாட்டமும் வெளி வந்தது.

''.....''

''கடவுள் போட்ட முடிச்சை மாத்த முடியுமா? நம்ம எண்ணப்படியே.. நம்ம பிள்ளைங்க மனசுலேயும் இப்படியொரு எண்ணம் இருக்கிறதுன்னா.. கடவுளோட அனுக்கிரஹம் இல்லாம வேறென்ன இருக்க முடியும்?''

''......''

''ஆமாமா.. முறைப்படி ஏற்பாடு செய்திடலாம். சரிங்க சம்மந்தி.. வெச்சிடட்டுமா?'' பேசி முடித்து வைத்தார்.

''போன்ல யாருங்க?''

''தெரியாத மாதிரி கேப்பியே. என் வாயால சொல்லணும் அப்படித்தானே?

திருவேங்கடம்தான் பேசினார். அவரும் விஷயம் கேள்விப்பட்டு ரொம்ப சந்தோஷப்பட்டார்.''

''எப்படியோ.. எல்லாமே நல்லவிதமா முடிஞ்சா சரிதான். நம்ம சுபியோட முகத்தைப் பார்த்ீங்களா? ரொம்ப சந்தோஷமாயிருக்கா. பழையபடி காலேஜுக்குப் போய் வர்றா!''

''சுசீலா உயிரோட இருந்திருந்தா.. அவளும் கல்யாணமாகி கணவன், குழந்தைன்னு நம்மளோட சந்தோஷத்தை பங்கு போட்டுக்கிட்டிருப்பா.. ஹூம்... அற்பாயுசுல போய்ட்டா எம்பொண்ணு'' ஏகாம்பரத்தின் தொண்டை கரகரத்தது.



''ஆமாங்க.. நம்ம பொண்ணு சாவுக்கு நாமே காரணமாய்ட்டோம். எந்த தாய் தகப்பனும் செய்யத் துணியாத காரியத்தை நாம செய்துட்டோம். பெத்த பொண்ணை விட வயித்துப் பசிதானே பெருசா தெரிஞ்சது. அம்மாடி.. சுசீலா'' அம்பிகா உடைந்து போய் அழ ஆரம்பித்தாள்.

அந்த அழுகை ரேகாவை சஞ்சலப்படுத்தியது. ஓடிப்போய் அவள் கண்ணீரை துடைக்க வேண்டும் போல் கை பரபரத்தது.

குடும்பம் மொத்தமும் வேதனையின் பிடியில் நெகிழ்ந்திருக்க கனகா எதேச்சையாக நிமிர்ந்தாள். ரேகா அங்கேயே நின்றிருந்தது கண்டு சினந்தவள், ''ரேகா இப்படி வா'' என்று முன்னே நடக்க பின் சென்றாள் ரேகா.

''என்னடி படிப்பு படிச்சே? நாங்கதான் முக்கியமான விஷயம் பேசிக்கிட்டிருக்கோம்னு தெரியுதில்லே. அந்த இடத்தை விட்டு போகணும்னு தோணாதா? அப்பாம்மா பேர் தெரியாத அனாதைங்களையெல்லாம் வேலைக்கு சேர்த்தா.. இப்படித்தான். போ.. போய் வேற வேலையைப் பார்.. போ'' முகத்தில் வெறுப்பை தேக்கி விரட்டினாள் கனகா.

நெஞ்சம் கனக்க.. தலையை தொங்க போட்டுக் கொண்டு அங்கிருந்து அகன்றாள் ரேகா.

கனகா மறுபடி வந்தமர்ந்து கொண்டாள்.

## பள்ளிக்கூடமாகும் அரண்மனை

இந்தியாவில் மன்னர்களின் அரண்மனைகள் பல உண்டு என்றாலும் ஜெய்ப்பூர் அரண்மனைக்கு தனிசிறப்பு உண்டு. இதன் கட்டிடக்கலை சிறப்பும், கண்கவர் தோற்றமும் உலக மக்களை இன்னமும் வியந்து பாராட்ட வைக்கிறது.

ஆடம்பர விருந்தும், கேளிக்கைகளும் நடந்து வந்த இந்த அரண்மனையில் இனி மழலைக் குழந்தைகளின் மழலைக்குரல்களும், பாடம் சொல்லித்தரும் ஆசிரியைகளின் வருங்கால நம்பிக்கை மொழிகளும் எதிரொலிக்க இருக்கிறது.

ஆமாம், இங்கு உள்ள அருங்காட்சியகம் ஆரம்பப்பள்ளி ஆகிறது. வருகிற ஏப்ரல் மாதத்தில் இருந்து பள்ளிக்கூடம் தொடங்க இருக்கிறது. பள்ளி நடத்துவதற்கான பொறுப்பை இளவரசி தியாகுமாரி [ராஜ்மாதா காயத்ரி தேவியின் பேத்தி] ஏற்றுள்ளார்.

இப்பள்ளியில் பயிலும் மாணவர்களில் தனது மகன் 'பத்மனாப்'பும் அடக்கம் என்றார், தியாகுமாரி. உண்மையிலேயே இவரது இந்த முயற்சி வரவேற்புக்குரியது மட்டுமல்லாமல் போற்றுதலுக்கும் உரியதாகும்.

-சுகன்யா.

அம்பிகா விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள். தினேஷ் மனபாரத்துடன் கன்னத்தில் கைதாங்கி இருந்தான். சற்று முன் இருந்த கலகலப்பு மொத்தமும் விடை அங்கிருந்து பெற்றிருந்தது.

ஏகாம்பரம் தழுதழுப்புடன் ஆரம்பித்தார்.

''செல்வத்திற்குப் பின் வறுமை வருவதைக் காட்டிலும் வறுமைக்குப்பின் செல்வம் வருவது மேல். ஆனா ரெண்டு கால கட்டமும் நம்ம குடும்பத்துக்கு வந்ததுதான் என் சுசீலாவுக்கு எமனாயிடுச்சு. ஏழையாயிருந்து செல்வத்தை பார்த்திருந்தா.. பசியும், கவுரவமும் ஒரு பொருட்டாயிருந்திருக்காது. ஆனா, பணக்காரனாயிருந்து மறுபடி ஏழையாகும்போது... பணக்காரனாகணும்ங்கற வெறி பாசத்தை பின்னுக்குத் தள்ளிடுச்சு. என் மகளை இழக்க முக்கியமான காரணம் என்னோட பணத்தாசைதான். என்னோட பணத்தாசைதான் நான் கொலைகாரன், பேராசைக்காரன். எனக்கு மன்னிப்பே கிடையாது அம்பிகா.'' தலையில் மடேர் மடேர் என்று அடித்துக் கொண்டார் ஏகாம்பரம்.

பதறிப்போன அம்பிகாவும், தினேஷும் அவர் கையை பற்றி தடுத்தனர்.

''என்னப்பா இது?''

''மனசை போட்டு அலட்டிக்காதீங்க. தலை விதி. இப்படியொரு காரணத்தை காட்டி சுசீலாவை நம்மகிட்டயிருந்து பறிச்சுடுச்சு. நீங்க உங்க சுயநலத்துக்காக அந்த காரியத்தை பண்ணலையே. பிள்ளைங்களோட பசியை பொறுத்துக்க முடியாமதானே? அந்த கசப்பான நாட்களை நாம மறக்க முயற்சிக்கறதுதான் நல்லது'' என்றாள் அம்பிகா.

''முடியலே அம்பிகா. குற்ற உணர்வு நெருஞ்சி முள்ளாய் நெஞ்சிலே உறுத்திக்கிட்டேயிருக்கு. எப்படி மறக்க முடியும் சொல்லு.''

அங்கு கனத்த மவுனம் சூழ்ந்தது. ஒவ்வொருவர் மனத்திரையிலும் கசப்பான அந்த நாட்கள் மறுபடி ஒருமுறை வந்து போனது.

### கல்லிடைக்குறிச்சி!

எங்கு திரும்பினாலும் பச்சை பசேர் என்ற பசுமை. அந்த ஊரில் பாதி நிலம் ஏகாம்பரத்துக்கு சொந்தமாயிருந்தது. பணம், ஆள் அம்பு என்று ராஜபோக வாழ்க்கை. விஸ்தாரமாய் காரைக்குடி செட்டியார் வீடுகளைப்போல் முழுக்க தேக்கும் ரோஸ்வுட்டுமாய் இழைத்து கட்டப்பட்ட வீடு. கட்டை விரலில் போட என்னவோப் போலிருந்ததால் மற்ற எட்டு விரல்களிலும் வைர மோதிரங்கள் மின்னும் ஏகாம்பரத்திற்கு.

தினேஷ், சுசீலா, சுபத்ரா என்று அருமையாய் அழகாய் மூன்று குழந்தை செல்வங்கள். நல்ல மனைவியாய் நல்ல தாயாய் நிறைவாய் குடித்தனம் நடத்தினாள் அம்பிகா.

தினேஷிற்கு ஒன்பது வயது. சுசீலாவுக்கு மூன்று வயது. சுபத்ராவுக்கு ஒரு வயது. அள்ள அள்ளக் குறையாத செல்வம் இருந்தாலும் கொஞ்சம் கூட கர்வமோ, பணத்தாசையோ அம்பிகாவிடம் இருந்ததில்லை.

ஏகாம்பரம் எல்லாரையும் எப்போதும் அதட்டிக் கொண்டே வேலை வாங்கினால்தான் அவருக்கு பொழுதுபோகும். அம்பிகாவிடம் இல்லாத திமிரும், கர்வமும், பண ஆசையும் அவரிடமிருந்தது. கொஞ்சம் அப்படி இப்படி என்றிருந்தார். நண்பர்கள் யாரேனும் வந்து விட்டால் அன்று வெளிநாட்டு சரக்கு தண்ணீராய் ஓடும்.

ஏகாம்பரத்தின் ஏகபோக வாழ்க்கையின் முன் பவ்யமாய் முதுகு வளைத்து நின்றவர்களில் ஒருவர் மட்டும் அவரை நிமிர்ந்து பார்த்தார். அவர் முதுகில் குத்த சரியான சந்தர்ப்பம் எதிர்நோக்கியிருந்தார்.

அவர் வேறு யாருமல்ல! ஏழுமலை. ஏகாம்பரத்தின் தம்பி. இருவருக்கும் தந்தை ஒருவரே! தாய்தான் வேறு வேறு. ஏகாம்பரத்தின் தந்தைக்கு சட்டபூர்வமான மனைவியை தவிர, வைப்பாட்டியான கமலத்திற்கும் ஒரு மகன் உண்டு. அது ஏழுமலை. முதல் மனைவி அன்னலட்சுமியின் பூர்வீக சொத்துதான் திருமணத்திற்கு பின் அவள் கணவர் நாகேந்திரனுக்கு வந்தது. அவர் மரணத்திற்கு பிறகு சட்டப்படி அனைத்து சொத்துகளும் ஏகாம்பரத்திற்கு போய் சேர... கமலாவும் ஏழுமலையும் நாகேந்திரன் வாங்கிக் கொடுத்த சிறிய மச்சு வீடும், சொற்ப விளை நிலங்களுமாய் வாயடைத்து நின்றனர். பஞ்சாயத்து மூலமும் கேட்டுப் பார்த்தனர். ஏகாம்பரம் ஒரு பிடி மண் கூட தர மறுத்து விட்டார். அதே கவலையில் போய் சேர்ந்தாள் கமலா.

கமலாவின் இறுதி சடங்கில் கூட கலந்துக் கொள்ளவில்லை ஏகாம்பரம். அவர் மீது மேன்மேலும் வன்மம் கூடியது.

'உன்னை போண்டியாக்கி நடுத்தெருவில் நிற்க வைக்கவில்லை என்றால்... நான் நாகேந்திரனுக்கே பிறக்கவில்லை' என்று சபதம் செய்து கொண்டான் ஏழுமலை.

சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தான். அமைந்தது. திட்டம் போட்டு காயை நகர்த்திய

ஏழுமலை சினிமாவில் வருவதுப்போல் ஆட்களை ஏற்பாடு செய்து நகரின் விருந்தினர் மாளிகைக்கு ஏகாம்பரத்தை வரவழைத்தான்.

வெளிநாட்டு சரக்கும், சில ஆயிரம் ரூபாய்க்கு வாடகை பேசி வரவழைக்கப்பட்ட சினிமா நடிகையும் போதுமானதாய் இருந்தது ஏகாம்பரத்தை கவிழ்க்க.

தன்னை மறந்திருந்த நிலையில் நடிகை காட்டிய வெற்றுத்தாள்களில் எல்லாவற்றிலும் கையெழுத்து போட்டுக் கொடுத்தார் ஏகாம்பரம். மறுநாளே குடும்பத்துடன் நடுத்தெருவில் நின்றார் ஏகாம்பரம்.

நினைத்ததை சாதித்து விட்ட ஏழுமலையை சட்டத்தின் மூலமாகவும் நெருங்க முடியாமல் திணறிப் போனார். பனித்துளியைப் போல் நொடியில் காணாமல் போன செல்வத்தையும் கவுரவத்தையும் எப்படியாவது மீட்டு விட துடித்தார்.

ஆனால், எப்படி?

வழிதெரியாமல் தவித்தார்.

மனைவியும், குழந்தைகளும் பட்டினியால் வாடி போயினர். கையிலிருந்த கொஞ்ச நஞ்ச நகைகளும் கரைந்து போக... அடுத்த வேளை சோற்றுக்கு வழி இல்லாமல் போனது. குழந்தை சுபத்ரா பாலுக்காக அழுதழுது தொண்டை கட்டிக் கொண்டது. தினேஷ் மூலையில் சுருண்டு படுத்தவன் படுத்தவன் தான். சுசிலா சோர்வில் உறங்கிப் போனாள்.

அம்பிகா கதறி அழுதாள். ஏகாம்பரம் வேதனையுடன் மனைவியை ஆறுதல் படுத்தினார்.

''மன்னிச்சிடு அம்பிகா! என்னோட சின்ன புத்திக்காக கேடு கெட்ட ஆசைக்காக கிடைத்த தண்டனை பெரிசும்மா! கேவலமான மனுஷனா இருப்பதை விட ஒரு நல்ல குரங்காயிருக்கலாம். நான் கேவலமான மனுஷனா இருந்தேன். கடவுள் என்னை மட்டும் தண்டித்திருக்கலாம். என் பிள்ளைகளை ஏன் தண்டிக்கணும் அம்பிகா? நாம வாழணும்.. வாழ்ந்து காட்டணும்! முன்பை விட செல்வாக்காய் எல்லார் முன்னாடியும் வாழ்ந்து காட்டணும்'' ஏகாம்பரத்தின் கண்களில் உறுதி பளிச்சிட்டது.

''எப்படிங்க முடியும்? குழந்தைங்க பசியிலே மயங்கி கிடக்கறாங்க... அதுங்க பசியை போக்க ஏதாவது வழியிருக்கான்னு பாருங்க...!''

''நான் யாருக்கும் கெடுதல் பண்ணலே! அடுத்தவன் சொத்தை ஏமாத்தி அபகரிக்கலே. கடவுள் நமக்கு கை கொடுப்பார். நம்பிக்கையோட இரு! நான் கோவில் வரைக்கும் போய் வர்றேன். நைவேத்தியம் பண்ணினதை தர்றேன்னு குருக்கள் சொல்லியிருந்தார். நான் போய் வாங்கிட்டு வந்திடறேன்'' என்று கூறிவிட்டு வெளியேறிச் சென்ற கணவனை நெஞ்சு வெடிக்க பார்த்தாள் அம்பிகா.

'வாரி வாரி கொடுத்த எம்புருஷன் இன்னைக்கு... கையேந்தி நிற்கிறாரே என்று!''

**கோ**விலில் கூட்டம் அதிகமில்லை. கையில் உணவுப் பொட்டலத்துடன் கோவில் தெப்பக்குளத்தை தாண்டிய ஏகாம்பரம்... அந்த அழுகுரல் கேட்டு நின்றார். எட்டிப்பார்த்தார்.

கணவன், மனைவி போலும். அவருக்கும் இவர் வயசுதான் இருக்கும்.

அழுது கொண்டிருந்த மனைவியை தேற்றிக் கொண்டிருந்தார்.

''புஷ்பா... அழாதே புஷ்பா... ப்ளீஸ்!''

''எப்படிங்க அழாம இருக்க முடியும்? பத்து வருஷமாகியும் குழந்தை பிறக்கலேன்னா... அதுக்கு நான் என்னங்க பண்ண முடியும்? நம்ம ரெண்டு பேர்கிட்டேயும் எந்த குறையும் இல்லேன்னு டாக்டர்கள் சொல்லிய பிறகும்... உங்க குடும்பத்தை சேர்ந்தவங்க என்னை குறை சொல்றாங்க!''

''அவங்களைப் பத்தி நீ ஏன் கவலைப்படறே புஷ்பா? நான் உன்னை ஒரு சிறு வார்த்தையாவது சொல்லியிருப்பேனா?''

''அந்த அன்புக்காகத்தாங்க நான் இன்னும் உயிரோட இருக்கிறேன்!''

''புஷ்பா... நான் ஒண்ணு சொன்னா கேப்பியா?''

''சொல்லுங்க!''

''நமக்கு நிச்சயம் குழந்தை பிறக்கும். அந்த நம்பிக்கை எனக்கிருக்கிறது. அது பிறக்கும் போது பிறக்கட்டும். ஆனா, இப்ப... நாம ஒரு குழந்தையை தத்து எடுத்து வளர்த்தா என்ன?''

''......''

''என்ன புஷ்பா பதிலேக் காணோம்!''

''இப்படியொரு எண்ணம் கொஞ்ச நாளா என் மனசுக்குள்ளேயும் இருந்ததுன்னா நம்புவீங்களா?'' என்றாள் வியந்து.

''நிஜமாவா சொல்றே?''

''ஆமாங்க! ஆனா, அதை உங்ககிட்டே சொன்னா சண்டைப் போடுவீங்களோன்னு பயந்தேன்.''

''சேச்சே... தத்து எடுக்கறது மிகப்பெரிய நல்ல காரியமல்லவா? நம்மிடம் ஏகப்பட்ட பணமிருக்கிறது. நம் வசதிக்கு பத்து அனாதை பிள்ளைகளைக் கூட தத்து எடுத்து வளர்க்கலாம்!''

''ஆனால், ஒரு விஷயம்!''

''என்னம்மா?'' என்றார் வாஞ்சையாய்.

''நாம் தத்து எடுக்கப் போவது நிச்சயம் ஒரு அனாதைக் குழந்தையாய் இருக்கக்கூடாது!''

''புரியலே...!''

''நாம பாரம்பரியமான கவுரமான குடும்பத்தை சேர்ந்தவங்க. நாம தத்து எடுக்கப்போகிற குழந்தையும் நல்ல குடும்பத்துல... நல்ல ரத்தத்துல உருவாகினதா இருக்கணும். அனாதை ஆஸ்ரமத்துல... கண்ட வழியிலே உருவாகின குழந்தைகளை விசிட்டுப் போறாங்க. அப்படிப்பட்ட குழந்தை நமக்கு வேண்டாம்.''

''நீ சொல்றது சரியானாலும்... பெத்தவங்களிடம் நேரடியாக போய் தத்து எடுப்பது சிரமமான விஷயமில்லையா?''

''பத்திரிகையில் விளம்பரம் தரலாம். நாட்டில் எத்தனையோ பேர் குழந்தைகளை பசவசன்னு பெத்துட்டு வளர்க்க முடியாம சிரமப்படறாங்க? அவர்களில் ஒருவர் கூடவா நம்மைத் தேடி வரமாட்டாங்க?''

புஷ்பாவின் யோசனைக்கு கோபாலன் தலையை ஆட்டி யோசித்தார்.

இவையத்தனையும் காதில் விழ... ஏகாம்பரத்திற்கு சட்டென ஒரு யோசனை தோன்றியது.

தீர யோசித்து ஒரு முடிவுக்கு வந்தவர், அந்த தம்பதிகளை நோக்கி நடந்தார்.



8

''**மு**டியாது... முடியாது... நீங்க சொல்றதுக்கு என்னால ஒத்துக்க முடியாது!'' உடல் நடுங்க... குஞ்சுகளை தன் பரந்த சிறகால் மூடும் பெட்டைக் கோழியைப் போல் மூன்று குழந்தைகளையும் சேர்த்தணைத்துக் கொண்டாள் அம்பிகா.

''அம்பிகா... நான் சொல்றதை நிதானமா கேள்!''

''நான் எதையும் கேட்க தயாராய் இல்லை! நீங்கள்லாம் ஒரு மனுஷனா? பெத்த குழந்தையிலே ஒண்ணை வித்துடலாம்னு எப்படி சொல்ல முடிஞ்சது ஐயா! எந்த தகப்பன் வாயிலேயாவது வருமா இப்படியொரு வார்த்தை? ஆட்டுக்குட்டிகளை விற்பதுப்போல் விற்க துணிந்து விட்டீர்களே! நான் பெற்றது ஆடோ, மாடோ அல்ல சாமி! பிள்ளைகள்! உயிருள்ள... பேசும் குழந்தைகள்!''

''அம்பிகா... நீ என்னை புரிஞ்சுக்காம பேசறே! எனக்கு மட்டும் நம் குழந்தைகள் மீது அன்பில்லை என்றா நினைக்கிறாய்?''

''ஆஹா... அதான் தெரிந்துக் கொண்டேனே உங்கள் அன்பை!'' கசப்புடன் வந்தன வார்த்தைகள்.

''நம் குழந்தைகள் மீது நீ எந்தளவு அன்பை வைத்திருக்கிறாயோ... அதைவிட பன்மடங்கு நானும் வைத்திருக்கிறேன்!''

''அப்புறம் ஏன் இப்படியொரு முடிவு எடுக்க வேண்டும்?'' ஆதங்கத்துடன் கேட்டாள்.

''நம் குழந்தைகளில் ஒன்று எங்கோ ஒரு மூலையில் குபேர வாழ்க்கை வாழப்போகுது அம்பிகா! நீயே யோசித்துப்பார்! எப்படி வாழ்ந்தோம்? ஒரு சிட்டிகைப் போட்டால் பத்து வேலையாட்கள் நின்ற காலம் போய்... இன்று பசியோடு மூலையில் முடங்கி கிடக்கிறோம். உன் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த தாலி கூட மஞ்சள் துண்டாய் மாறிவிட்டது. சாப்பாட்டுக்கு வழியில்லாமல் கோவிலில் போய் கையேந்தி வாங்கிக் கொண்டு வருகிறேன்! இந்தளவு கேவலமாக வேண்டுமா நம் நிலைமை?''

''......''

''இந்த ஊரில் எந்த விதத்திலும் பிழைப்பு நடத்த முடியாதபடி ஏழுமலை எனக்கெதிராய் சதி செய்கிறான். அதனால் உழைத்தும் என்னால் காப்பாற்ற முடியவில்லை. எனக்கு சென்னையில் நம்பிக்கையான நண்பர் ஒருவர் இருக்கிறார். கிரானைட் தொழிலில் சக்கைப்போடு போட்டுக் கொண்டிருக்கிறார். இப்போதைக்கு என் கையில் ஒரு லட்சம் இருந்தால் போதும். மாதம் பத்தாயிரத்திற்கு மேல் சம்பாதிக்கலாம். நாம் பழையபடி இழந்தவைகளை மீட்கலாம். அந்த ஏழுமலையைக் கூட என்னால் விலைக்கு வாங்க முடியும்!''

''அதற்காக... என் குழந்தையை

விலைக்குத் தரச் சொல்கிறீர்களா? என்னால் முடியாது. அதற்கு பதில் என் உயிரை வேண்டுமானாலும் பறித்துக் கொள்ளுங்கள்.''

''அம்பிகா... நீ சுமந்து பெற்றவள். உன் வேதனை எனக்குப் புரிகிறது. தாய்ங்கற பாசம் மனுஷங்ககிட்டே மட்டுமல்ல.. மிருகத்திடமும், பிராணிகள், பறவைகளிடமும் கூட இருக்கிறது. நாயும், பூனையும் குட்டிப் போட்டா... பக்கத்துல யாரையும் சேர்க்காம காவல் காக்கும். ஆனா, பத்தியத்துக்காக தன் குட்டிகள்ல ஒண்ணை தானே தின்னுடறதே... அதுக்காக... அதுக்கு குட்டிகள் மேலே பாசமில்லேன்னு ஆகிடுமா? தாய் நல்லாயிருந்தா தானே குட்டிகளை பாதுகாக்க முடியும்?''

''நாயும், நானும் ஒண்ணாகிட முடியுமா? என்னங்க பேச்சு பேசறீங்க? நீங்க செய்ய நினைக்கற அநியாயத்துக்கு நியாயம்னு நிறம் பூசி ஏமாத்த நினைக்காதீங்க! என்னிடமிருந்து என் குழந்தைய பிரிக்க நினைச்சீங்கன்னா... அடுத்த நிமிஷமே என் உடம்பிலேர்ந்து உயிர் பிரிஞ்சிடும்!''

''அம்பிகா.. என்னை புரிஞ்சுக்கவே மாட்டியா?'' பரிதாபமாய் கேட்டார்.

''புரிஞ்சுக்கிட்டேங்க! எப்படியாவது பணத்தை சம்பாதிச்சே ஆகணும்ங்கற வெறியிலே பாசத்தை காலடியிலே போட்டு கல்லா மாறிப்போயிட்டீங்கன்னு நல்லாவே புரிஞ்சுக்கிட்டேன்!''

''கடைசியா என்னதான் சொல்றே?''

''உங்க எண்ணத்தை மாத்திக்குங்க!''

''என்னை பிச்சைக்காரனாவே கடைசி வரை பார்க்கணும்னு முடிவுப் பண்ணிட்டியா?''

''ஒரு பாட்டில் விஷம் வாங்கிட்டு வாங்க! சாப்பிட்டுட்டு நிம்மதியா போய் சேர்ந்திடலாம்!''

''என் அம்பிகா! செத்தாலும் பரவாயில்லே... மண்ணுக்குத் தந்தாலும் பரவாயில்லே.. குழந்தையில்லா ஒரு பெண்ணுக்கு உன் குழந்தைய தரமாட்டேயில்லே? உன் மனசென்ன கல்லா?''

''இந்த விஷயத்திலே கல்லாயில்லேன்னா... தாயா இருக்க எனக்கென்னங்க தகுதியிருக்கு? ஒரு நல்ல தாய்... புருஷனைக் கூட விட்டுத் தந்தாலும் தருவாளே தவிர.. பெத்த குழந்தைய விட்டுத்தர மாட்டா!''

''புரிஞ்சுக்கிட்டேன் அம்பிகா! உனக்கு என் மேல எள்ளளவும் அக்கறையில்லே! சொந்த பந்தம் நம்ம புருஷனை ஏமாத்தி நடுத்தெருவிலே நிறுத்திடுச்சே... அவங்க முகத்துல கரியை பூசி... என் புருஷனை உயர்ந்த நிலைக்கு கொண்டு வர்றேன்னா இல்லையாப் பார்னு உனக்கு தான் முதல்ல துடிக்கணும்; ஆனா, உனக்கு என் மேல எந்த அக்கறையுமில்லே! இனி இவனால எந்த உபயோகமுமில்லே.. கையாலாகாதவன்ங்கிற எண்ணம் உன் மனசுல ஆழமா பதிஞ்சுடுச்சு. அதனால நான் செத்தாக்கூட உனக்கு கவலையில்லே அப்படித்தானே?''

## செல்போன் அபாயம்

தற்போது பல நகரங்களில் செல்போன்களின் பயன்பாடுகள் அதிகரித்து வருகின்றன. கையில் எடுத்துச் செல்வதற்கு எளிதாகவும், வேகமாக தகவல்கள் சென்றடைவதாலும் மக்கள் மத்தியில் வெகு சாதாரணமாக புழக்கத்தில் உள்ளது.

ஆனால் செல்போன்களை தொடர்ந்து பயன்படுத்தினால் மூளை செயல் இழக்கும் அபாயம் ஏற்படுவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. பதின்மூன்று வயதுக்கு குறைவானவர்கள் பயன்படுத்தினால், அவர்களின் மூளைக்குச் செல்லும் சில நுண்ணிய நரம்புகள் பாதிக்கப்படுகின்றன என்றும், குழந்தைகளின் மண்டையோடு மிகவும் மெல்லியதாக இருப்பதால், மூளையின் மிக நுண்ணிய நரம்பு மண்டலத்தில் ஏதாவது பாதிப்பை ஏற்படுத்துமென்றும் டாக்டர்சால் என்ற ஜான் விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

இதற்காக இங்கிலாந்து உள்பட பல வெளிநாடுகளில் செல்போன்கள் வெளியேற்றும் கதிர்வீச்சின் அளவு அந்தந்த செல்போன்களில் குறிப்பிடப்பட வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அதுபோல, அதிக சக்திவாய்ந்த டிரான்ஸ் மீட்டர் சாதனங்கள் அருகே வசிப்பவர்களுக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுமென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-சுசிலா ராஜன், பெங்களூர்.

''நீங்க குழப்பத்திலே இருக்கீங்க அவசரத்துல எடுக்கிற எந்த முடிவும் சரியானதா இருந்ததில்லே. படுத்து எந்திரிச்சா.. மனசு தெளியும்.''

ஏகாம்பரம் பதிலேதும் கூறாமல் மனைவியை முறைத்து பார்த்துவிட்டு.. அறைக்குள் நுழைந்து உள்தாளிட்டுக் கொண்டார்.

அவர் கோபம், வேகம், கதவை அறைந்து சார்த்திய விதம்... எல்லாமே அசம்பாவிதமாக உணர்ந்த அம்பிகாவின் அடிவயிற்றில் தீப்பற்றிக் கொண்டது.

ஓடிச் சென்று கதவை தட்டினாள்.

''என்னங்க... கதவை திறங்க...!''

''......''

''என்னங்க...சொன்னாக், கேளுங்க.. கதவைத் திறங்க!''

அவள் பலமாய் தட்டி, சத்தியும் கூட ஒரு பதிலேதும் வராமல் போகவே பயத்தில் அழ ஆரம்பித்தாள் அம்பிகா.

அவள் அழுவதைப் பார்த்து குழந்தைகளும் அழ ஆரம்பித்தன. அம்பிகா வீட்டின் பின்பக்கமாய் ஓடினாள். மூடியிருந்த ஜன்னலை திறந்துப் பார்த்தவள் திக்கென அதிர்ந்தாள்.

அங்கே... ஏகாம்பரம் உத்திரத்தில் சுருக்கு வைத்துக் கொண்டிருந்தார்.

''ஐயய்யோ... என்ன காரியம்... பண்றீங்க?''

''நான் மானஸ்தன் அம்பிகா! கவுரவமா வாழ ஆசைப்படறவன். என்னால பிச்சையெடுக்க முடியாது. நான் போகிறேன்!''

''அவசரப்படாதீங்க... சொன்னாக் கேளுங்க! முதல்ல கீழே இறங்குங்க!''

''என் மேல அக்கறையில்லாத உன் பேச்சை கேட்பேன்னு எதிர்பார்க்காதே!''

''உங்களைவிட வேற யாருங்க முக்கியம் எனக்கு? நீங்க என்ன சொன்னாலும் கேட்கறேன்.. முதல்ல இறங்கி வெளியே வாங்க!''

''உன் பேச்சை நான் எப்படி நம்பறது?''

''நம்ம குழந்தைங்க மேல சத்தியமா சொல்றேன். நீங்க என்ன சொன்னாலும் கட்டுப்படறேன்!'' அழுதபடி சத்தியம் செய்தாள்.

அதன் பிறகே, இறங்கி வெளியே வந்தார் ஏகாம்பரம்.

அழுதழுது முகம் வீங்கிப் போயிருந்தது அம்பிகாவுக்கு. அவளைப் பார்க்கவே ஏகாம்பரத்தின் மனசும் பிசையவே செய்தது. தானொரு அரக்கத்தனம் மிக்க, சுயநலக்கார தந்தையாக நடப்பது அவருக்கே புரிந்தது. ஆனால், இதைத்தவிர அவருக்கு வேறுவழி புலப்படவில்லை. இந்த காலத்தில் அவ்வளவு பெரிய தொகையை அவருக்கு கடனாக கொடுத்து உதவ யாருமில்லை. சென்னை நண்பர் கூட பிஸினஸ் வழிமுறைகளை சொல்லி உதவதான் தயாராக இருந்தாரே தவிர, பணம் தர தயாராய் இல்லை. அதனால் தான் கடவுளாய் காட்டிய வழியாய் இந்த முடிவிற்கு வந்தார்.



தனக்கு மட்டும் இதில் முழு சம்மதமா என்ன? பெற்ற குழந்தையை பணத்துக்காக விற்பது அரக்கத்தனமல்லவா? ஆனால், கோபாலன் பெரும் பணக்காரர். அதனால் தன் குழந்தை வசதியாய், சந்தோஷமாய் தானே வாழப்போகிறது? என்று சமாதானப்படுத்திக் கொண்டார்.

அம்பிகா, கண்ணீருடன் மூன்று குழந்தைகளுக்கும் பாலை ஊற்றிக் கொடுத்தாள்.

இந்த மூன்று பேரில் யார் பிரியப் போகிறார்கள்? இன்னும் சற்று நேரத்தில் முடிவுத் தெரிந்து விடும். துடிதுடித்த இதயம் வாய் வழியே வந்து விடுமோ என்று அஞ்சினாள் அம்பிகா!

முன்தினமே விவரம் சொல்லியிருந்ததால்... சரியான நேரத்திற்கு கோபாலன், புஷ்பா தம்பதியர் வந்து விட்டனர். அம்பிகா வாயேத் திறக்கவில்லை. ஏகாம்பரம்தான் வரவேற்று பேசினார்.

''உங்களைப்பத்தி இந்த ஊரில் கேள்விப்பட்டேன் மிஸ்டர் ஏகாம்பரம்! வாழ்ந்து கெட்ட குடும்பம் உங்களுடையது. ஒரு நல்ல குடும்பத்திலேர்ந்து தத்து எடுக்கப் போகிறோம்னு நினைக்கறப்ப... ரொம்ப சந்தோஷமாயிருக்கு. உங்க குழந்தைகள்...?'' என்றார் கோபாலன்.

''இதோ... இவங்கதான்! இவன் தினேஷ்... ஒன்பது வயசாகுது... நாலாவது

படிக்கிறான்!''

தினேஷைப் பார்த்தனர்.

''விவரம் புரியற வயசு! இவன் வேண்டாம். நாங்க தத்து எடுக்கிற குழந்தை முழுக்க எங்களை பெத்தவங்களா நினைச்சி வளரணும். சின்னக் குழந்தையா இருந்தா நல்லது!''

''இதோ... இவபேரு சுசிலா. மூணுவயசு. இது சுபத்ரா. ஒரு வயசு தான் ஆகுது!''

''பால்குடி மறக்காத குழந்தைன்னா கஷ்டம்! இந்தக் குழந்தைய எனக்கு ரொம்ப பிடிச்சிருக்குங்க!'' என்ற புஷ்பா... சுசிலாவை இழுத்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

விவரம் புரியாத சுசிலா அவளைப் பார்த்து சிரித்தாள். அந்த சிரிப்பில் புஷ்பா மயங்கிப் போனாள்.



## 9

அம்பிகா கண்களையும், காதுகளையும் மூடி இதயத்தை இரும்பாக்கிக் கொண்டாள். புஷ்பாவிற்கு சுசிலாவை மிகவும் பிடித்திருந்தது. துருதுருவென்று அழகாக இருந்தாள். அதனால் அவளையே தத்தெடுக்க விரும்பினாள். கோபாலனுக்கும் சுசிலாவை பிடித்திருந்தது.

'எந்த சந்தர்ப்பத்திலும் அவளுக்கு பாதகம் வராமல் என் மகளாய் பாதுகாப்பேன்' என்றும் குறிப்பிட்டு எழுதி கொடுத்து ஒரு லட்சம் ரூபாய் பணத்தை கொடுத்து சுசிலாவை சட்டபூர்வமாய் தன் மகளாக்கிக் கொண்டார் கோபாலன்.

பணம் கைமாறியது.

சுசிலா கைமாறினாள்.

அம்பிகா அதையெல்லாம் காணத் தெம்பின்றி உள்ளே சென்று கதவை மூடிக்கொண்டாள். ஏகாம்பரத்திற்கு நெஞ்சடைத்தது. சுசிலாவை வாரியணைத்து முத்தமிட்டார்.

''வாம்மா!'' என்று கைப்பற்றி அழைத்த புஷ்பாவை விநோதமாய் பார்த்தாள் சுசிலா.

சுசிலாவை அழைத்துக் கொண்டு வெளியேறினர்.

''விடுங்க!'' பற்றியிருந்த கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள் சுசிலா.

புஷ்பா இன்னும் இறுக்கமாகப் பற்ற... பயம் பிடித்துக் கொண்டது சுசிலாவிற்கு. அலறினாள்.

''விடுங்க... நான் வரலே... நான் வரலே.. அப்பா... அம்மா... பாருப்பா... அப்பா... அண்ணா!''

தினேஷ் பாய்ந்து சென்று தங்கையை அவர்களிடமிருந்து பறிக்க முயன்றான்.

''என் தங்கச்சிய விடுங்க!''

''தினேஷ்... அவங்களை விடுப்பா!'' ஏகாம்பரம் மகனை இழுத்தார்.

''அப்பா.. நம்ம சுசியை கூட்டிட்டுப் போறாங்கப்பா! பார்த்துக்கிட்டு நிக்கறீங்களே... என் தங்கச்சிய கூட்டிட்டுப் போக இவங்க யாரு?''

''இனிமே அவளுக்கு அம்மா, அப்பா எல்லாமே இவங்கதான்... நீ வாப்பா!'' சமாதானப்படுத்தினார்.

''அப்ப நீங்க யாருப்பா?''

ஏகாம்பரம் அந்த கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் திணறினார்.

நான் யார்?

அப்பாவா?

வியாபாரியா?

கோபாலன் சுசிலாவை வலுக்கட்டாயமாய் காரில் ஏற்றினார். கார் புறப்பட்டது.

சுசிலா முகம் முழுக்க கண்ணீருடன் கைகளிரண்டையும் வெளியே நீட்டி ''அண்ணா!'' என்றலறினாள்.

தினேஷ் காரின் பின்னேயே ஓடினான்.

''சுசி...''

''அண்ணா...''

''சுசிக்குட்டி... வெளியே குதிச்சிடு!''

''அண்ணா...''

கார்வேகம் பிடித்தது. சுசிலாவின் குரல் தேய்ந்து மறைந்தது.

அந்த வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியா இயலாமையும், கோபமுமாய் கல் எடுத்து கா[ர்] சென்ற பாதையில் வீசி எறிந்து அங்கே[யே] விழுந்து மண்ணில் புரண்டு அழுதான்.

கிட்டத்தட்ட ஆறுமாதம் சுசிலா அழு[து] அடம் பிடித்தாள்.

புஷ்பாவிற்கு அந்த குழந்தையி[ன்] ஆதங்கம் புரிந்தது. பொறுமை[யை] கையாண்டாள்.

வீடு நிறைய அவள் விளையாட[ும்] பொம்மைகள் வாங்கிப் போட்டாள்.



செங்கல்பட்டில் மிகப்பெரிய வீடு கோபாலனுக்கு. கிட்டத்தட்ட கல்லிடைக்குறிச்சியில் இருந்த தங்கள் வீடு போலவே இருந்ததால், சுசிலாவிற்கு வீட்டு நினைப்பு அதிகமாய் எழவில்லை. மூன்று வயது தான் என்பதால்... அந்த பிஞ்சு மனசில் இருந்த நினைவுகளை எளிதாக அழித்து தங்களைப் பெற்றோராய் பதித்துக் கொள்ள பெரும் சிரமம் ஒன்றும்படவில்லை அவர்கள். சுசிலா என்றழைத்தால்... பழைய நினைவுகள் வரும் என்று அஞ்சி... அவளுக்கு ரேகா என்று பெயர் சூட்டினர். ரேகா அவர்களுடன் ஒன்றிப் போனாள். வருடங்கள் உருண்டன. ரேகாவின் மனதில்... ஞாபகப்பெட்டகத்தில் பழையவைகள் முற்றிலும் மறைந்துப் போயின. அப்பா கோபாலன். அம்மா புஷ்பா! இந்த இரண்டுப் பெயர்களும் அவளுள் ஆழமாய் பதிந்துப் போயின.

ரேகாவை கான்வெண்ட்டில் சேர்த்து படிக்க வைத்தனர். கற்பூரபுத்தி அவளுக்கு. சிறப்பாய் படித்தாள். அவள் நன்றாக படிக்க ஊக்கப்படுத்தி ஒவ்வொரு பிறந்தநாளின் போதும் சைக்கிள், பியானோ என்று வாங்கிக் கொடுத்தனர்.

ஐந்து வருடங்கள் காணாமல் போனது.

ரேகாவிற்கு எட்டு வயதான போது தான் 'எப்போது... அந்த நாள்... எல்லாப் பெண்களையும் தாய் என்கிற பதவியைக் கொடுத்து பெண்ணை முழுமையாக்குகிற அந்த இனிய நாள் எப்போது வரும்' என்று காத்திருந்த புஷ்பாவிற்கு.. அப்படிப்பட்ட நாளொன்றை கடவுள் அவளுக்கும் காண்பித்தார்.

திருமணமாகி பதினைந்து வருடங்கள் கழித்து புஷ்பாவின் கர்ப்பக் கதவு திறந்தது. நெடுநாள் கழித்து தந்ததாலோ என்னவோ கடவுள் அவளுக்கு இரட்டை சந்தோஷத்தை அளித்திருந்தார்.

ஆம்... புஷ்பாவிற்கு இரட்டைக் குழந்தைகள்.. பெண் குழந்தைகள் பிறந்தது.

ஊரே கூடி வாழ்த்தியது. சொந்த பந்தங்கள் வாய் ஓயாமல் ஆச்சர்யப்பட்டனர்.

கோபாலனும் புஷ்பாவும் சந்தோஷத்தின் விளிம்பிற்கே சென்றனர்.

தன் ஜீன், தன் ரத்தம் என்கிற பந்தத்திற்கு இவ்வளவு பெரிய சக்தியா?

இருவரும் மாறி மாறி இரண்டு குழந்தைகளை கவனிக்கவே நேரம் சரியாய் இருந்ததால்.. ரேகாவை கவனிக்க மறந்துப் போயினர்.

'தரையில் கால்படாமல் உள்ளங்கையில் வைத்து தாங்கியவர்கள்... புதிதாய் குட்டிப் பாப்பாக்கள் வந்ததும் எனக்கு சாப்பிட கொடுக்கக் கூட நினைவின்றி கொஞ்சி கொண்டிருக்கிறார்களே! எல்லாம் இதுங்களால் தான்!'

ரேகாவின் கோபம் குழந்தைகளின் மீது பாய்ந்தது. நாள் ஆக.. ஆக.. வெறுப்பாய் மாறியது. புஷ்பாவும் மாறிப் போனாள். கிடைக்காத வரை பெரும் ஆறுதலாய் இருந்த ரேகா.. தானும் தாயாகும் பாக்கியம் கிடைத்த பிறகு, புஷ்பாவுக்கு உறுத்தலாய் தெரிந்தாள். அவள் செய்யும் சின்ன சின்ன தவறுகளை கூட பெரிதாக்கி கை நீட்டி அடிக்க ஆரம்பித்தாள்.

ரேகாவிற்கு பத்து வயதானது. அப்போது தான் அந்த சம்பவம் நிகழ்ந்தது. கோபாலனின் வியாபாரத்தில் தொடர்ந்து நஷ்டம். இரட்டை குழந்தைகள் அடிக்கடி நோயில் படுத்தன.

ஒருநாள்!

கொதிக்க கொதிக்க பாலை வைத்து விட்டு உள்ளே வேலையாக சென்றிருந்தாள் புஷ்பா! ரேகா படித்துக் கொண்டிருந்தாள். புத்தகம் எடுக்க கையை நீட்டிய ரேகா தவறி சூடாய் இருந்த பாலை தட்டிவிட... அடுத்த நொடி... இரண்டு குழந்தைகளும் வீலென்று கத்தின.

உள்ளிருந்து ஓடிவந்த புஷ்பா அலறினாள். கொதிக்கும் பால் பட்டு குழந்தைகளுக்கு கொப்புளித்து போயிருந்தன.

ரேகாவிற்கு செமையாய் அடிவிழுந்தது.

''இதோப் பாருங்க! நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். இவ இனிமே இங்கே இருக்கக் கூடாது. நானும் பார்த்துக்கிட்டு தான் வர்றேன். நம்ம குழந்தைகளை பார்த்தாலே இவளுக்கு ஆகறதில்லே. நான் இல்லாதப்ப அடிக்கறதும், கிள்ளறதுமா இருக்கா. இதோ, இப்ப கொதிக்கிற பாலை வேணும்னே மேல ஊத்திட்டா. இப்படியே விட்டா... ஒரு நாள் நம்ம குழந்தைங்களை சாகடிக்கத் தான் போகிறா... பாருங்க!''

''என்னை என்ன பண்ண சொல்றே?''

''இவளை கொண்டு போய் பெத்தவங்ககிட்டேயே விட்டுட்டு வந்திடுங்க!''

''எந்த சூழ்நிலையிலேயும் இவளை கை விடமாட்டேன்னு எழுதி கொடுத்திட்டு எப்படி கொண்டு போய் விடமுடியும்? சட்டப்படி அது குற்றம். தவிர, அவங்க அப்பவே ஊரை விட்டே போய்ட்டாங்கன்னு கேள்விப்பட்டேன்.''

''நீங்க என்ன பண்ணுவீங்களோ, எது



பண்ணுவிங்களோ எனக்குத் தெரியாது. இனி இவ இங்கே இருக்கக் கூடாது. நமக்கும் வியாபாரம் சரியில்லே! கண்ணுமூடி கண்ணு திறக்கறதுக்குள்ளே இவ வளர்ந்துடுவா! கல்யாணம் காட்சின்னு செலவு பண்ணனும். நமக்கும் ரெண்டு பொண்ணுங்க இருக்கு. அதை ஞாபகம் வச்சுக்குங்க. இவளை கொண்டு போய் எங்கேயாவது அனாதை ஆஸ்ரமத்துல சேர்த்து விட்டுட்டு வாங்க! அவ்வளவு தான் நான் சொல்வேன்!'' என்றாள் புஷ்பா தீர்மானமாய்.

கோபாலனும் மறுபேச்சு பேசவில்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகள், மனைவியின் கூற்றில் நியாயமிருப்பதாய் நினைக்க வைத்தது.

ரேகா வாயடைத்துப் போயிருந்தாள்.

பத்து வயது எல்லாம் புரிகிற வயது!

தான் யாரென்று புரிந்தது. இதயம் நொறுங்கிப் போனது.

தன் பெற்றோர் இவர்களில்லை. அவர்கள் யாரோ? என்னை பணத்துக்காக இவர்களிடம் விற்றிருக்கிறார்கள். அப்படியென்றால் அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? என்னை அவர்களுக்கும் பிடிக்கவில்லை. இவர்களுக்கும் பிடிக்கவில்லை.

இனி... நான் யார்?

அனாதையா?

ரேகா... உதடுகள் மடங்க... தனிமையில் கேவிக் கேவி அழுதாள். மறுபேச்சு பேசாமல் கோபாலனுடன் சென்றாள்.

அன்னை தெரசா காப்பகத்தில் விட்டார்.

பாதர் சாலமனிடம் பச்சை பொய் சொன்னார். ''ரோட்டில் அனாதையாய் கிடந்தவளை எடுத்து இது நாள்வரை என் மகளாய் பாசமாய், நல்ல கல்வி கொடுத்து வளர்த்தேன். ஆனால் என்னமோ தெரியவில்லை. கொஞ்ச நாட்களாய் இவள் நடவடிக்கையே சரியில்லை. என் இரண்டு பெண் குழந்தைகளை கொல்ல முயற்சிக்கிறாள். என்னால் மேற்கொண்டு இவளை பாதுகாக்க

முடியவில்லை. இவன் கொடிய குற்றவாளியாக மாறுமுன், உங்களிடம் ஒப்படைக்கிறேன். அனாதைகளுக்கு கருணை காட்டும் நீங்கள் இந்த அனாதைப் பெண்ணையும் காத்து ரட்சிக்க வேண்டும்!'' என்று இனிமையாய் பேசி ஒப்படைத்து விட்டு வந்து விட்டார். அன்று முதல் ரோகாவின் தாய்வீடு அன்னை தெரசா மகளிர் காப்பகம் தான் என்றானது.

**ம**களை தந்து கொடுத்து அதன் மூலம் கிடைத்த லட்ச ரூபாய் பணத்தோடு, குடும்பத்துடன் சென்னை வந்தார் ஏகாம்பரம்.

அம்பிகா கிட்டத்தட்ட ஒரு நடைப்பிணமாகவே வாழ்ந்தாள். மகளை உயிரோடு பறிகொடுத்த ரணம் அவள் மனதை விட்டு மறையவில்லை. கணவனிடம் அதிகம் பேசுவதில்லை. ஏகாம்பரத்திற்கும் புரியாமலில்லை. தன் அருமை மகளை தந்து கொடுக்க யாரால்தான் மனமுவந்து சம்மதிக்க முடியும்?

பணம் அவருக்கு அவசரத்தேவையாக இருந்தது. அதன் மூலம் கிடைக்கப் போகும் கவுரவம்... இழந்த அந்தஸ்தை, மானத்தை எப்படியாவது மீட்டாக வேண்டிய வெறி.. மற்ற அன்பு, பாசம் எல்லாவற்றையும் இரண்டாம் பட்சமாகி விட்டது.

சில சமயங்களில் தன்னை நினைத்தே வேதனைப் பட்டார்.

'எவ்வளவு மோசமான மனிதன் நான்? எந்த தகப்பனும் செய்யத் துணியாத செயலை செய்து விட்டேனே! மனிதனுக்கு கவுரவமும், மனைவி குழந்தைகளும் தானே நிரந்தர சொத்து? ஒன்றை பெற.. ஒன்றை இழந்து விட்டேனே? மகளே... சுசீலா.. என் கண்ணே... என்னை மன்னிச்சிடு என் தங்கமே!' மானசீகமாய் தினசரி பாவமன்னிப்பு கேட்டுக் கொண்டுதானிருந்தார்.

ஏகாம்பரமே எதிர்பார்க்கவில்லை. தனலஷ்மியின் கடாட்சம் தன் பக்கம் உடனடியாக திரும்புமென்று. நண்பர் கொடுத்த ஆலோசனைப்படி பணத்தை கிரானைட் பிசினஸில் இன்வெஸ்ட் பண்ணினார். லாபம் வஞ்சனையின்றி கொட்டியது. ஏழே வருடத்தில் நகரத்தின் பெரும் பணக்காரர்களில் ஒருவராக ஏகாம்பரம் உயர்ந்தார். பணம் சேர சேர சுசீலாவின் நினைவு அந்த 'வீட்டாரை மட்டுமல்ல, ஏகாம்பரத்தை வெகுவாய் கொன்றது.

எந்தப் பணத்துக்காக மகளை விற்றாரோ, அந்த பணம் இன்று அளவுக்கு மீறி கொட்டி கிடக்கிறது. ஆனால் கைமாறிப் போன மகள்?

அம்பிகாவிற்குள்ளும் இதே எண்ணம் தான் ஓடியது. இதற்கு மேலும் இந்த வேதனையை தாங்கிக் கொள்ள முடியாது என்று இருவருக்கும் தோன்றியது. மகளை மறுபடி மீட்டு வர பெட்டியில் இருபது லட்சம் பணத்துடன் எப்படியோ கோபாலன் வீட்டை தேடி கண்டு பிடித்தார்.

கோபாலன் சற்றும் எதிர்பார்க்கவில்லை, அவர் மகள் இன்று அனாதை ஆஸ்ரமத்தில் இருக்கிறாள் என்ற உண்மையை சொன்னால்.., இப்போது ஏகாம்பரம் இருக்கும் செல்வாக்கிற்கு தன்னை உயிரோடு விட்டு வைக்கமாட்டார் என்று தோன்றியதால்... மனசாட்சியை அடக்கி வைத்து அப்பட்டமாய் ஒரு பொய்யை சொன்னார்.

'சுசீலா... இங்கு வந்த ஒரு வருடத்திலேயே காலரா நோயால் இறந்து விட்டாள்' என்று.

ஏகாம்பரம் துடிதுடித்துப் போனார், அம்பிகா மயங்கி விழுந்தாள்.

அந்த வேதனையை அவர்களால் இன்று வரை ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை.

பழைய நினைவுகளிலிருந்து மீண்டாலும் சோகத்திலிருந்து அவர்களால் மீள முடியவில்லை.



## 10

**த**லை கனத்தது. காய்ச்சல் வருவதுப் போல் உடம்பெல்லாம் வலித்தது. படுக்கையை விட்டு எழவே மனசில்லை அர்விந்துக்கு.

ஜன்னல் வழியே... திரைச்சீலை அகன்று வழிவிட்டபோதெல்லாம்... சூரிய வெளிச்சம் குபுக்கென உள்ளே பாய்ந்தது.

வேலைக்காரன் காபியுடன் உள்ளே நுழைந்தான்.

''சார்!''

''அப்படி வச்சிட்டுப் போ!''

கண்ணாடி டீப்பாய் மீது வைத்து விட்டு போனான். நேரம் கடந்தது. படுக்கையை விட்டு எழ பிடிக்காமல் அப்படியே படுத்துக் கிடந்தான்.

'சுபி... ஏன் அப்படி நடந்துக் கொண்டாள்? என்னைப் பற்றி முழுக்க தெரிந்து கொள்ளாமல் காதலிக்கிறேன் என்கிறாள். நானும் அவளை காதலிப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறாள். அவள் மனதில் அப்படியொரு எண்ணம் பதியுமளவிற்கு நான் என்றைக்கு நடந்துக் கொண்டிருக்கிறேன்? அவளை தோழியாக அல்லவா நினைத்துப் பழகினேன்? அதைத் தாண்டி அவளை ஒரு காதலியாக என்னால் நினைத்தே பார்க்க முடியாத ஒன்று!

என்னைப் பெற்றவர்களும், சுபியை என் மனைவியாக்கும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கிறார்கள். சுபி... என் மனைவியா? மைகாட்! என்னால் அது முடியாத காரியம். இவர்களாக எதையோ தவறாக அர்த்தம் பண்ணிக் கொண்டு முடிவெடுக்கிறார்கள். நீங்கள் நினைப்பதுப் போல் எதுவுமில்லை என்று சொல்லி விட வேண்டும். அதுவும் இன்றே!' முடிவு செய்தவன் கட்டிலை விட்டு இறங்குவதற்கும்... அவன் தாயார் உள்ளே வருவதற்கும் சரியாய் இருந்தது.

''என்ன அர்விந்த்... இப்பதான் எழுந்திரிச்சியா? காபி ஆறிப்போய் கிடக்கு. குடிக்கலியா?''

''ஆமாம்மா!''

''அட... சொல்ல வந்ததை மறந்திட்டேன் பார்! சுபத்ரா லைன்ல இருக்கா... பேசு!'' கார்ட்லஸ் போனை மகனிடம் நீட்டினாள் வடிவுக்கரசி.

'சே... இதுவேற தொந்தரவு!' சலித்தபடி வாங்கினான்.

''ஹலோ...!''

''ஹாய் அர்விந்த் குட்மார்னிங்!''

''மார்னிங்...! என்ன விஷயம்?''

''உங்ககிட்டே பேசக்கூட எனக்கு காரணம் தேவையா?''

''சுபி... நான் கொஞ்சம் பிஸியாயிருக்கேன். நானே மறுபடி பேசறேன் சரியா?'' பட்டென்று அணைத்தான்.

''என்ன அர்விந்த்... மூஞ்சியிலே அடிக்கிற மாதிரி வச்சுட்டே!'' வடிவுக்கரசி சங்கடத்துடன் கேட்டாள்.

''நீயே-பேசி வச்சிடறதை விட்டு... ஏம்மா என்கிட்டே தூக்கிட்டு வர்றே?''

''அர்விந்த்!'' என்றாள் அதிர்ச்சியுடன்.

''எனக்கு பிடிக்கலேம்மா!''

''அர்விந்த்!''

''நீங்களும் அப்பாவும் சுபியை என் மனைவியாக்க நடத்தற நடவடிக்கைகள் எதுவும் பிடிக்கலேம்மா!''

''ஏம்ப்பா?''

''சொல்லத் தெரியலே. பட், சுபி... சுபியை என்னால ஒரு மனைவியா... ஓ.ஹ்... நோ.... ஐ காண்ட்... என்னால முடியாதும்மா!''

''அர்விந்தா... கல்யாண ஏற்பாடுகள் ரெண்டு வீட்லேயும் நடந்துக்கிட்டிருக்கு. இந்த நேரத்திலே இப்படியொரு குண்டை தூக்கிப் போடறியேப்பா! நீயும் சுபத்ராவை விரும்பறேன்னு சொன்னாங்களே...?''

''நான் சொன்னேனா?''

''சரி... எப்படியோ இருந்துட்டு போகட்டும். சுபத்ராவுக்கு என்னப்பா குறைச்சல்? அழகில்லையா, பணமில்லையா?''

''எல்லாம் இருக்கலாம். ஆனா, அவ என் மனசுலே ஒட்டலையேம்மா!''

''அர்விந்த்... அந்த காலத்துல தாலி எல்லாம் கட்டிக்கிட்ட பிறகுதான் புருஷன் முகத்தையே பார்ப்போம். நாங்கள்லாம் சந்தோஷமா குடும்பம் நடத்தலியா என்ன? ஏகாம்பரம் உங்கப்பாவோட நண்பர். உன்னால அவங்க நட்புக்கு பங்கம் வந்துடக் கூடாதுப்பா!'' கெஞ்சினாள்.

''நானும் சுபியை ஒரு ஃப்ரண்டாதான் நினைச்சுப் பழகினேன். அவ விரும்பிட்டாங்கறதுக்காக... அந்த விருப்பத்துக்கு நான் அடிபணிய முடியாதும்மா!''

''அர்விந்த்... சுபத்ரா உன்னை விரும்பிட்டாங்கறதுக்காக மட்டுமே இந்த கல்யாண ஏற்பாடை பண்ணலே! உனக்கும் சுபத்ராவுக்கும் விவரம் புரியற வயசு வர்றதுக்கு முன்னாடியே உங்கப்பாவும், அவர் நண்பரும் முடிவு பண்ணின விஷயம் இது! புரிஞ்சுக்கப்பா...!''

''அம்மா... நாம இருக்கறது ட்வென்ட்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி. பெரியவங்க பேசி முடிச்ச ஒரே காரணத்துக்காக... இணைய முடியாத ரெண்டு மனசை ஒட்டப்பார்க்கிற தப்பை... தொடர்ந்து பண்ணிட்டிருக்காதீங்க! என்னால சுபியை கல்யாணம் பண்ணிக்க முடியாது!''

''பிடிக்காததுக்கு என்ன காரணம்னு சொல்லு! சுபத்ராகிட்டே என்ன குறை இருக்குன்னு சொல்லு.. அதுக்குப்பிறகு... பார்ப்போம்!'' என்றாள் வீம்பாக.

''சுபத்ரா எனக்கு தோழி மட்டுமே!''

''தோழியை கல்யாணம் பண்ணிக்கக்

கூடாதுன்னு சட்டமிருக்கா என்ன? உன்னை நல்லா புரிஞ்சுக்கிட்ட பொண்ணோட வாழ்க்கை நடத்தினா தான் உனக்கு நல்லது. அர்விந்த் உன்னை கெஞ்சி கேட்டுக்கறேன். தயவு செய்து... ஏடாகூடமாய் எதையாவது சொல்லி இந்த கல்யாணத்தை நிறுத்திடாதேப்பா!'' கையெடுத்து கும்பிட்டு விட்டு... அறையை விட்டு வெளியேறினாள் வடிவுக்கரசி.

அர்விந்த் கற்சிலையாய் நின்று விட்டான்.

**டி**.ஆர். உட்லண்ட்ஸ்!

மெல்லிய இசையும், கண்களை உறுத்தாத ஒளியும் மனதை... மெல்ல தடவிக் கொடுத்தது.

அவினாஷ் எதிரே அமர்ந்திருந்த அர்விந்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இரு கைகளாலும் முடியை கோதிவிட்டுக் கொண்டு பெருமூச்சுவிட்டான் அர்விந்த்.

மெல்ல புன்னகைத்த அவினாஷ் அர்விந்தின் கல்லூரித் தோழன். இவனைப் போலவே தனியே பிஸினஸ் நடத்திக் கொண்டிருப்பவன்.

''என்னடா.... ஏன் ஒரு மாதிரியாயிருக்கே? எனிதிங் ப்ராப்ளம்?''

''நத்திங்!''

''உன் முகத்தைப் பார்த்தா அப்படித் தெரியலியே! உடனே கிளம்பி இங்கே வான்னு போன் பண்ணினே! வந்தேன். எதையோ சொல்லணும்னு கூப்பிட்டிருக்கேன்னு புரியுது. அப்புறம் ஏன் தயங்கறே? கமான்... சொல்லுடா... என்ன பிரச்சினை?''

''அவினாஷ்!''

''ம்...!''

''எவ்ரிதிங்... ஐ'ம் ஹாவிங்! பட்...''

''ம்... சொல்லு!''

''நிம்மதியில்லே அவினாஷ்... பீஸ் ஆப் மைண்ட் இல்லே!''

''எதனால?''

''வீட்லே கல்யாண ஏற்பாடு பண்றாங்க!''

''நல்ல விஷயம் தானே?''

''விளையாடாதே அவினாஷ். இந்த கல்யாணத்துல எனக்கு விருப்பமில்லே!''

''வொய்?''

''டு யூ நோ சுபத்ரா?''

''யெஸ்... ஐ நோ! தினேஷோட சிஸ்டர்!''

''யா... அவளே தான்! அவளுக்கும் எனக்கும் முடிச்சிப் போட பார்க்கிறாங்கடா!''

''ஸோ வாட்? சுபத்ராவுக்கு என்னடா ஒட்டை? மிஸ் இண்டியாவுல கலந்துக்கற அளவுக்கு தகுதியுள்ள பொண்ணு! அவளை குருடன் கூட வேண்டாம்னு சொல்ல மாட்டான்!''

''பட், என்னால... அவளை மனைவியா நினைக்க முடியாது அவினாஷ்!''

அவினாஷ் அவனை உற்றுப் பார்த்தான்.

''நீ... யாரையாவது காதலிக்கிறியா அர்விந்த்?''

அந்த கேள்விக்கு திடுக்கிட்டு நிமிர்ந்தான். 'இல்லை' என்று சொல்லவும் முடியவில்லை. 'ஆமாம்' என்று சொல்லவும் முடியவில்லை. அவனாலேயே அவனை புரிந்துக் கொள்ள முடியவில்லை.

''கம் அவுட் அர்விந்த்! நீ யாரையோ காதலிக்கறே.. யாரது?''

''நானா?'' என்றவனுக்கு சட்டென கா... மோதி விபத்துக்குள்ளான அந்த பெண்ணி... முகம் நினைவிற்கு வந்தது.

''நீ என்கிட்டே மறைக்கிறே. எல்ல... தகுதியும் உள்ள ஒ... பொண்ணை... வேண்டாம்னு சொல்றேன்னா... அப்ப உ... மனசுக்குள்ளே வேறொருத்... இருக்கான்னுதானே அர்த்தம்? சொல்... யாரது?''

''நீ சொல்ற மாதிரி காதல், கீத... எதுவுமில்லே.. ஆனா, நீ சொன்னப்பிறகுதா... தெரியுது.. அவ என் மனசுக்குள்ளே... இருக்கிறான்னு.''

அவினாஷ் ஆச்சர்யத்துடன் பார்த்தான்.

''என்னடா சொல்றே? யாரத்... பொண்ணு?''

''தெரியாது.. அவ யாரு? எங்கிருக்க... என்ன பண்றா, என்ன பேருன்னுக்கூட... தெரியாது.''

''அ..ர்..வி..ந்..த்'' இன்னும் அதிர்ந்தா...

அர்விந்த் எல்லாவற்றையும் சொன்னா...

அவன் சொல்ல சொல்ல, அவினாஷின் ...கம் மாறியது.

''அர்விந்த்... ஆர்... யூ...மேட்?''

''அவினாஷ்...''

''பின்னே என்னடா? இவன் கார்ல ...மோதினானாம், ஹாஸ்பிடல்ல சேர்த்தானாம், ...வளுக்குத் தெரியாம சொல்லாம கொள்ளாம ...டிப் போய்ட்டானாம், மறுபடி பார்த்தானாம், ...பேரைக் கூட சொல்லாம போய்ட்டானாம். ...வளை இவரு காதலிக்கிறாராம். என்னடா ...தல் இது? அவ மிஸ்ஸா மிஸஸ்ஸான்னு கூட ...ரியாம, பேரு தெரியாம, ஒரு மண்ணும் ...ரியாம எப்படிடா வரும் காதல்?''

''அவளைப் பார்த்தா கல்யாணமானவளா ...ரியலியே?''

''இந்த காலத்துல ரெண்டு குழந்தை ...த்தவக்கூட கல்யாணமாகாத பொண்ணு ...திரிதான் இருக்கிறா? அப்படியே... அவ ...ண்ணும் மிஸ்ஸாகவே இருந்துட்டுப் ...கட்டுமே. அவளுக்குத்தான் உன்மேல ...ப்படிப்பட்ட அபிப்ராயம் எதுவுமில்லேன்னு ...இப்போச்சே... பிறகென்ன? இதோ பார் ...விந்த்.. எத்தனையோ பேர் சொல்லி ...த்துப்போன அதே டயலாக்கை இப்ப நான் ...ல்றேன். நீ விரும்பற பொண்ணை விட ...ன்னை விரும்பற பொண்ணுதான்டா.. ...ம்பத்ய வாழ்க்கைக்கு அவசியம். அதை ...ஞ்சுக்கிட்டு நடந்துக்க. பெத்தவங்க மனசை கஷ்டப்படுத்தாம பேசாம சுபத்ராவை கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமாய் இரு'' என்றான் அழுத்தமான குரலில்.

அர்விந்த் அதைக் கேட்டு மவுனமானான்.

''**கெ**ட்டி மேளம்... கெட்டி மேளம்''

ஐயர் குரல் கொடுக்க.. மேளம் முழங்க.. அட்சதைப் பூக்கள் சுற்றிலுமிருந்து இவர்கள் மேல் வந்து விழ.. அர்விந்தின் கதகதப்பான கரம் இவள் கழுத்தில் சிலிர்ப்பேற்படுத்த... மூன்று முடிச்சை போட்டு விட்டு அடிக்கண்களால் நோக்க... வெட்கத்துடன் தலை குனிந்துக் கொண்டாள் ரேகா.

திடுக்கிட்டு கண் விழித்த ரேகா உடம்பெங்கும் வியர்வை வெள்ளம்.

'கனவு.. அத்தனையும் கனவு. என்ன கனவிது? ஆழ்மனதில் அமிழ்ந்து போயிருக்கும் ஆசைகள்தான் கனவாக வருமென்று சொல்வார்கள். இப்படியோர் ஆசை எனக்குள் இருக்கிறதா என்ன? வரலாமா எனக்கு இப்படியோர் ஆசை? குப்பையில் கிடக்கும் எச்சில் இலை, கோபுர கலசத்தை தொட ஆசைப்படலாமா? கனவு காணக்கூட தகுதியில்லாத அனாதை நான்.'

நினைக்கும்போதே கண் கலங்கியது ரேகாவுக்கு.

'எனக்கும் அம்மா அப்பா இருந்திருந்தால் காலா காலத்தில் கல்யாணம் பண்ணி பார்த்திருப்பார்கள்.'



'அடிப்பைத்தியக்காரி. நீ செலவு வைத்து விடப் போகிறாயோ என்ற அச்சத்தில் தானே உன்னையே பணத்திற்கு விற்றார்கள்? அவர்களாவது உனக்கு கல்யாணம் செய்து வைப்பதாவது?' சிரித்துக் கொண்டாள்.

'மூன்று வேளை சாப்பாடும் தங்க ஒரு கூரையும் கிடைத்திருக்கிறதே என்று சந்தோஷப்படு. அதை விட்டு காதல், கல்யாணம் என்று கனவு காணும் வேலையெல்லாம் வச்சுக்காதே.'

தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டாள் ரேகா.

''**செ**ல்போனை வீட்லேயே வச்சிட்டு வந்துட்டேன். ரேகாவிடம்

## ராணியின் நாய்கள்

**ல**ண்டனில் பக்கிங்ஹா... அரண்மனையில் எலிசபெத் ராணியி... பாதுகாப்பு குதிரை படையினரி... அணிவகுப்பு தினமும் நடப்பதை கா... உல்லாச பயணிகள் வந்து குவிவார்க... ...ணிவகுப்பு மைதானத்திற்கு பின்னால் ...மைந்துள்ள ராணியின் தோட்டத்தில் ...ர்க்கப்பட்டு வரும் நாய்களுக்கு தனி ...ணிவகுப்பு நடைபெறுவது ...கொள்ளா காட்சி ஆகும்.

-பாரீஸ் பார்த்தசாரதி.

கொடுக்கனுப்பிடு அம்பிகா'' என்று கூறிவிட்டு போனை வைத்த ஏகாம்பரம், எதிரே அமர்ந்திருந்த அர்விந்தை புன்னகையுடன் ஏறிட்டார்.

''என்ன சாப்பிடறே அர்விந்த். முதமுதலா என் ஆபீசுக்கு வந்திருக்கே..''

''நோ தாங்க்ஸ் அங்கிள். வரும்போதுதான் சாப்பிட்டு வந்தேன்.''

''நோ.. நோ... சாப்பிடாம அனுப்பினா.. சுபத்ரா என்னை சும்மா விட மாட்டா'' என்றவர் இண்டர்காமில் கூல்ட்ரிங்ஸ் கொண்டு வரச் சொன்னார்.

அர்விந்த் சிரிக்க முயன்றான்.

''அர்விந்த்.. எனக்கிருக்கிறதோ ஒரே பொண்ணு. என்னுடைய சொத்துக்கு இனிஷேஷ்ும், சுபியும்தான் வாரிசு. உனக்கு என்ன வேணும்ங்கறதை கூச்சப்படாம கேட்கணும்னுதான் இங்கே வரச்சொன்னேன். அடையாறுல அம்பது லட்சத்துக்கு ஒரு பங்களா வாங்கியிருக்கிறேன். அதை உன் பேருக்கு.. ஸாரி... என் மாப்பிள்ளையை நீ வா போன்னு பேசறேனேன்னு பார்க்காதே. திடீர்னு மாத்திக்க முடியல.. என்ன சொன்னேன்? அ.. அடையாறு பங்களா... அதை உன் பேருக்கு ரிஜிஸ்டர் பண்ணனும். நாளைக்கு என்னோட வர்றியாப்பா? சில பார்மாலிட்டிஸ் இருக்கு. அதை முடிச்சிட்டு வந்துடலாம்.''

இடையில் வந்த கூல்ட்ரிங்கை குடித்து முடித்தவன், ''ஸாரி அங்கிள்.. எனக்கு இதெல்லாம் பிடிக்கலே. அப்பாவே எனக்கு நிறைய சேர்த்து வச்சிருக்கார். நானும் நிறைய சம்பாதிக்கிறேன். அதுவே போதும். ஒரு பார்ட்டியை மீட் பண்ணனும். அப்ப நான் கிளம்பறேன் அங்கிள்'' எழுந்தான்.

''ஓகே.. உன் பேருக்கு மாத்த முடியலேன்னா சுபியோட பேருக்கு மாத்திட்டுப் போறேன். எல்லாம் ஒண்ணுதானே? புறப்படு அர்விந்த்'' விடை கொடுத்தார் ஏகாம்பரம்.

அர்விந்த் உற்சாகம் குறைந்தவனாய் காரை செலுத்திக் கொண்டிருந்தான்.

பஸ்ஸை விட்டிறங்கி அலுவலகம் நோக்கி ரோடில் வந்து கொண்டிருந்த ரேகாவை பார்த்த அர்விந்தின் செல்கள் பரபரத்தது.

கார் தன்னாலே நின்றது. எதிரே வந்த ரேகாவும் இவனைப் பார்த்து விட்டாள்.

கால்கள் நடக்க சிரமப்பட்டு பின்னிக் கொண்டன.

அர்விந்திற்கு அவளிடம் ஏதேதோ பேச வேண்டும் போலிருந்தது. கஷ்டப்பட்ட் அடக்கினான். அருகில் வந்த ரேகா... ஒ கணம், ஒரே ஒரு கணம் அவனை நிமிர்ந் பார்த்து விட்டு விறுவிறுவென நடந் விட்டாள். ஏமாந்துப் போன மனசை அடக் சிரமப்பட்ட அர்விந்த் திரும்பிப் பார்த்தான்.

அதே நேரம் ரேகாவும் திரும்பிப் பார்க்க..

அவளிடமிருந்த அவனும்..

இவனிடமிருந்த இவளும்..

அவர்களுக்கேத் தெரியாமல் காணாம போனார்கள். பொங்கி வந்த அழுகைய கட்டுப்படுத்திக் கொண்டு விரைந்து நடந் அவன் கண்களை விட்டு காணாமல் போனா ரேகா.



# 11

''சிஸ்டர்.. நான் செங்கல்பட்டு இருந்து வர்றேன். என் பேர் கோபாலன். ந பாதர் சாலமனைப் பார்க்கணும்''

நோட்டில் கணக்கு வழக்குகளை எழு கொண்டிருந்த சிஸ்டர் மரியா.. அவ ஏறிட்டுப் பார்த்தாள்.

''என்ன விஷயமாய் பார்க்கணும் சொன்னா நல்லது''

''தப்பா நினைச்சுக்காதீங்க சிஸ்டர். அ நான் பாதரிடம் மட்டுமே பேச நினைக்கிறே

''ஸாரி.. திஸ் இஸ் மை டியூட்டி. விஷ தெரியாம பாதரை சந்திக்க பர்மிஷன் தர என உரிமையில்லை.''

''ப்ளீஸ் சிஸ்டர்'' என்றார் கெஞ்சல் கோபாலன்.

அவர் இந்த பத்து வருடத்தில் ரொம்ப மாறி விட்டிருந்தார். உடல் தளர்ந்து, முது ஆக்கிரமித்து, கண்களில் நிரந்தர சோ குடியமர்ந்து.. அடிபட்ட வலி குர வெளிப்பட.. கோபாலன் வெகுவாகவே விட்டிருந்தார்.

''என் விருப்பத்துக்கோ விருப்பத்துக்கோ நடைமுறைகளை ம முடியாது சார். பாதர் பிரேயர் மீட்டிங் இருக்கிறார். என்ன காரணத்துக் பார்க்கணும்னு சொன்னா நல்லது.''

''என் மகளைப் பார்க்கணும் சிஸ்டர்.

''மகளா?'' சிஸ்டர் கண்கள் விரி



பார்த்தாள்.

''ஆமாம். பத்து வருஷத்துக்கு முன்னாடி என் மகளை இங்கே விட்டுட்டுப் போனேன். அவளை கூட்டிக்கிட்டு போக வந்திருக்கேன்.''

சிஸ்டர் அவரையே ஆச்சர்யமாய் பார்த்தபடி இண்டர்காமில் யாரிடமோ, ''பாதர் பிரேயர் முடிஞ்சு வந்துட்டாரா?'' என்று விசாரித்துக் கொண்டிருந்தாள்.

புஷ்பா.. காத்திருப்பாள். 'என் ரேகாவை அழைத்து வாருங்கள். நான் செய்த பாவத்திற்கு என் குழந்தையின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டால்தான் போகிற இடத்தில் புண்ணியமாவது கிடைக்கும்' என்று வாய் ஓயாமல் புலம்பிக் கொண்டிருக்கிறாள்.

கோபாலனைப் போன்று புஷ்பாவும் மாறிவிட்டிருந்தாள்.

தனக்கென்று குழந்தைகள் பிறந்ததும் ரேகா மீது வெறுப்பை வாரியிறைத்து, அனாதை ஆஸ்ரமத்தில் சேர்த்த பிறகுதான் புஷ்பாவிற்கு இல்ல உறக்கமே வந்தது. தன் இரட்டை குழந்தைகளை ஊரே மெச்சும்படி சிறப்பாகவே வளர்த்தாள். ஆனால், அவர்களுக்கு ஒன்பது வயதான போது ஊரில் தாக்கிய காலரா நோய் குழந்தைகளையும் தாக்கியது. இரண்டே நாளில் ஒருவர் பின் ஒருவராக இரட்டையர் இறந்துப் போயினர். இடிந்துப் போயினர் பெற்றவர்கள்.

'ஒன்பது வருடம் வரை வைத்து விளையாடவா ஆண்டவன் பதினைந்து வருடமாய் காக்க வைத்தான்? கொடுப்பது போல் கொடுத்து பிடுங்கிக் கொள்வதற்கு தராமலேயே இருந்திருக்கலாமே.' அழுதழுது தீர்த்தாலும் ரணம் ஆறவில்லை.

அதுநாள் வரை சிந்தையைத் தொடாத ரேகாவின் நினைவு அதிகமாய் வாட்டிற்று. அவளைப் பெற்றவர்கள் வந்து கேட்டபோது மனுஷத்தன்மையே இல்லாமல் குழந்தையை பெற்றவரிடம் சேர்க்காமல், சுயநலத்துக்காக 'அவள் காலராவில் இறந்து விட்டாள்' என்று கூசாமல் பொய் சொன்னோமே. அதற்காக இப்படி தண்டித்து விட்டாயா கடவுளே.

ரேகாவை அனாதை ஆஸ்ரமத்தில் சேர்க்க எப்படி மனசு வந்தது? பெற்றோர் வசதியாக வாழ, அவள் எங்கோ அனாதையாக வளர.. எல்லாவற்றிற்கும் நான்தானே காரணம்?

'எனக்கு ரேகா வேண்டும். என் மகள் வேண்டும். என் ரேகா எனக்கு சொந்தமானவள். அவளை எப்படியாவது அழைத்துக் கொண்டு வாருங்கள். இல்லாவிட்டால் என்னை உயிரோடயே பார்க்க முடியாது.' முடிவாய் கூறிவிட்டாள் புஷ்பா.

''சார்.. பாதர் உங்களை வரச் சொல்றார்'' ரிஸீவரை வைத்த மரியா சிஸ்டர் அவரிடம் சொன்னாள்.

''தாங்க்ஸ் சிஸ்டர்.''

''ரிசப்ஷனுக்கு அடுத்து நாலாவது அறை. போய்ப் பாருங்க.''

தளர்ந்த நடையுடன் பாதர் சாலமன் எதிரே போய் நின்றார் கோபாலன்.

''வணக்கம் பாதர்.''

''வணக்கம். உட்காருங்கள்.''

''சார் என் பேர் கோபாலன். உங்களை பத்து வருடத்திற்கு முன்பு சந்தித்திருக்கிறேன்.''

''அப்படியா? நினைவில்லையே...?'' கூர்ந்து பார்த்தார்.

''ரேகா என்கிற பத்து வயதுப் பெண்ணை விட்டுச் சென்றேனே..''

''ஓ.... ரோட்டில் கிடந்த குழந்தையை எடுத்து வளர்த்தவர்?''

கோபாலன் உடைந்து போனார்.

''நான் பொய் சொல்லி விட்டேன் பாதர். ரேகா ரோடில் கிடந்த குழந்தையல்ல. சட்டபூர்வமாய் தத்து எடுத்து வளர்த்தக் குழந்தை.'' நடந்தவைகளை... இரட்டை குழந்தைகள் இறந்தது வரை எல்லாவற்றையும் சொன்னார்.

சாலமன் வாயடைத்துப் போனார்.

''எவ்வளவு பெரிய தவறினை இழைத்து விட்டீர்கள் கோபாலன்? இங்குள்ள ஆயிரம் இதயங்களிலும் தாம் அனாதைகள் என்கிற வேதனையும், அம்மா அப்பாவால் தூக்கி எறியப்பட்டோமே என்கிற துயரமுமாகத்தான் துயர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உங்கள் கடமையிலிருந்து தவறியிருந்தாலும், பெற்றவர் வந்து குழந்தையை கேட்டபோது உண்மையைக் கூறியிருக்கலாமே. ரேகா அனாதை என்ற அடைமொழியிலிருந்து விடுபட்டு வளர்ந்திருப்பாளே.''

''ஐயா.. நான் பாவியாகி விட்டேன். எங்கள் பாவங்கள் கரைய வேண்டும். ரேகா வராவிட்டால் என் மனைவியை உயிரோடு காண முடியாது. என் மகள் வேண்டும். அவளுக்கு செய்ய வேண்டிய கடமைகள் செய்து அவளை சிறப்பாய் வாழவைக்க ஆசைப்படுகிறோம். ரேகாவை எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள்.. ப்ளீஸ்'' கண்ணீர் விட்டு கதறினார்.

பாதர் பெருமூச்சு விட்டார். "நீங்களோ நானோ நினைத்தால் கூட ரேகாவை உங்களுடன் அனுப்ப முடியாது."

"ஏன் பாதர்?" தீயைத் தொட்டாற்போல் திடுக்கிட்டார். சாலமன் கருக்கமாய் சொன்னார்.

"அப்படியானால்.. ரேகா இங்கில்லையா?" குரலில் ஏமாற்றம்.

"இல்லை."

"அவளை வேலைக்கு சேர்த்த தொழிலதிபரின் அட்ரஸாவது கிடைக்குமா பாதர்?"

"நிச்சயமாக" என்றபடி ஏகாம்பரத்தின் முகவரியை டைரியிலிருந்து எழுதிக் கொடுத்தார்.

"ரொம்ப நன்றி பாதர்" என்றார் நிம்மதியுடன் கோபாலன்.

அர்விந்த்- சுபத்ராவின் திருமணத்தையொட்டி வீட்டில் வேலை செய்யும் பணியாளர்கள் அத்தனை பேருக்கும் புத்தாடை வழங்கப்பட்டன.

ரேகாவிற்கு ஸ்பெஷலாய் பட்டுப் புடவை வாங்கி இருந்தாள் அம்பிகா.

"ரேகா!"

"சொல்லுங்கம்மா!"

"இப்படி வா!"

வந்தாள்.

அட்டைப் பெட்டியுடன் பட்டுப் புடவையை நீட்டினாள்.

"அம்மா.. இது.." பிரம்மிப்புடன் கேட்டாள்.

"உனக்குதான்.. பிடி."

மகிழ்ச்சியில் நெஞ்சம் விம்ம வாங்கிக் கொண்டாள். கண்கள் கலங்கியது.

"அடடா.. என்ன ரேகா இது? இந்த வீட்டைப் பொறுத்தவரை சுபத்ராவைப் போல் நீயும் என் மகள் போலதான்" என்றார் ஏகாம்பரம்.

"உங்கள் அன்புக்கு ரொம்ப நன்றி சார்."

"மேரேஜ் இன்விடேஷன் எல்லாம் வந்து விட்டது. சுபியை நான் கூப்பிட்டேன்னு சொல்லும்மா."

"சரி சார்" என்று கூறிவிட்டு மாடிப்படி ஏறினாள் ரேகா.

அர்விந்தின் போட்டோவையே பார்த்தபடி இதயத்தில் நிரப்பிக் கொண்டிருந்த சுபத்ரா கதவு தட்டும் சப்தம் கேட்(டு) எரிச்சலுடன் நிமிர்ந்தாள்.

ரேகா!

"என்ன?"

"சார்... உங்களை கூப்பிடறார்!"

"வர்றேன்னு சொல்லு!"

"....."

"என்ன நின்னுக்கிட்டேயிருக்கே? வர்றேன்னு சொல்லு போ!"

"இல்லே... இப்ப உங்க முகத்துல தலை...



## வண்ண வண்ண கண்கள்!

தினமும் ஒவ்வொரு புதி... கண்களுடன் நீங்கள் வலம் வ... வேண்டுமா? ஜெர்மன் நாட்... நிறுவனம் பல வண்ணங்களி... ...ண்களை தயாரித்து விற்பனைக்கு ...கொண்டு வந்துள்ளன. இதில் ...ங்கள் ரசனைக்கு ஏற்ற கண்களை ...தேர்வு செய்து பொருத்திக் ...கொள்ளலாம். ஆனால் ஒரே முறை, ...பயன்படுத்த முடியும்.

-வத்சலா.



அழகு தெரியுது!"

"ஏன் இவ்வளவு நாளா அந்த அழ... தெரியலியா? ஐஸ் வைக்கறியா?"

"சேச்சே! கல்யாணம்னதும்... அதுவு... மனசுக்கு பிடிச்சவரோட கல்யாணம்னதும்... தனிக் களை வந்துடாதா? அதைதா... சொன்னேன்!"

"இதுக்கு முன்னாடி எத்தனை கல்யாண... பண்ணியிருக்கே? அனுபவம் பேசுதா?"

கிண்டலாய் கேட்டாள் சுபத்... என்றாலும் அவள் மேல் கோபமோ... வருத்தமோ ஏற்படவில்லை ரேகாவிற்கு.

"உங்க முகத்தை கண்ணாடியி... பார்த்தா உண்மை உங்களுக்கே புரியும். ...வருங்கால கணவர் இங்கே பலமுறை வ... ஒருமுறைக்கூட நான் பார்த்ததில்லை... பார்க்கணும்னு ஆவலாயிருக்கு. போட்டோ... இருந்தா காட்டுங்களேன்!"

"இதோ இதுக்கூட அவரோட போட்டோ... தான். ஆனா, உனக்கு காட்ட இஷ்டமில்... கல்யாணத்தன்னைக்கு பார்த்துக்...

...ப்படியெல்லாம் பேசி என்னை ...யக்கிடலாம்னு பார்க்கறியா? அதெல்லாம் ...ன்கிட்டே நடக்காது."

ரேகாவிற்கு அந்த வார்த்தைகள் ஊசியாய் ...னதை துளைத்தாலும் சிரித்தபடி கீழிறங்கி ...ந்தாள்.

சற்று நேரங்கழித்து சுபத்ரா கீழிறங்கி ...ந்தாள்.

"வாம்மா... கல்யாணப் பொண்ணு!" ...னகா கிண்டல் செய்தாள்.

"போங்கண்ணி!"

"ஏம்மா... என் பொண்ணை எப்ப ...ர்த்தாலும் கிண்டல் பண்ணிக்கிட்டே ...ருக்கே?" செல்லமாய் கோபித்தாள் அம்பிகா.

"எத்தனை நாளைக்கு பண்ணப் ...ாகிறேன் அத்தை! இன்னும் பத்துநாள்ல ...யாணம் பண்ணிக்கிட்டு 'மாமியார் ...ட்டுக்குப் போகப்போறா!"

சுபத்ரா வெட்கத்துடன் தலை ...ிழ்ந்தாள்.

"என் பொண்ணு வெட்கப்பட்டு ...தான் முதல் முதலா பார்க்கிறேன்!" ...றார் ஏகாம்பரம்.

"ஆளாளுக்கு எங்க என் பொண்ணை ...ண்டல் பண்றீங்க? இன்விடேஷனை ...கிட்டே காட்டுங்க... பிடிச்சிருக்கான்னு ...சொல்லட்டும்"

'இந்தாம்மா.. இதிலே எந்த மாடல் ...டிச்சிருக்குன்னு சொல்லு! நாம செலக்ட் ...ற மாடல் சம்மந்தி வீட்லேயும் ...டிச்சிருக்கான்னு தெரிஞ்சுக்கிட்டு இன்னைக்கே பிரஸ்லே தெரியப்படுத்திடலாம்!"

அப்பா கொடுத்த இன்விடேஷன் மாடல்களையும், ஏற்கனவே இவள் கல்யாணத்துக்காக அச்சடிக்கப்பட்டிருந்த மாதிரிகளையும் பார்த்து... இரண்டு மாடல்களை செலக்ட் பண்ணிக் கொடுத்தாள்.

"இது தான் எனக்கும் பிடிச்சிருந்தது. அதையே தான் நீயும் செலக்ட் பண்ணியிருக்கே! அப்புறம், அம்பிகா இந்த இன்விடேஷனை சம்மந்தி வீட்லே காட்டி, ஏதாவது பேரு விடுபட்டு போயிருக்கான்னு கேக்கணுமே! கடைசி நேரத்திலே தாய்மாமன் பேரைப் போடலே, பாட்டனார் பேரைப் போடலேன்னு சம்மந்தி சண்டை வந்துடக் கூடாதுப் பாரு! இதை நீ சம்மந்தி வீட்டுக்கு எடுத்துக்கிட்டு போய் காட்டிட்டு வந்திடேன்!"

"அடிக்கடி நாம சம்மந்தி வீட்டுக்குப் போறது.. சரியா வராது! தவிர, நானும், கனகாவும், தினேஷும் பட்டுப்புடவை எடுக்க காஞ்சிபுரம் போகப் போகிறோம். நீங்களும் போக முடியாது. பேசாம.. ரேகாகிட்டே கொடுத்தனுப்பினா என்ன?" என்றாள் அம்பிகா.

"அதுவும் சரிதான். ரேகா கிட்டேயே கொடுத்தனுப்பு. நம்ம கார்லேயே அனுப்பு!"

அடுத்த ஐந்தாவது நிமிடம் ரேகா இன்விடேஷனோடு புறப்பட்டாள். அப்போது தான் அந்த மாதிரி இன்விடேஷனைப் பார்த்தாள்.

மணமகள் சுபத்ரா, மணமகன் அர்விந்த் என்றிருந்தது.

'அவன் பெயரும் அர்விந்து தானோ?'

'அர்விந்த்!' அவள் உதடு முணுமுணுத்தது.

'எட்டாத நிலவுக்கு கொட்டாவி விடாதே ரேகா! உன் நிலையை அடிக்கடி மறந்துடறே! உன் வேலை என்னவோ அதை மட்டும் செய்!' மனசாட்சி இடித்துரைத்தது.

ரேகா... மனதிற்குள் பிரேயர் பண்ண ஆரம்பித்தாள்.

மனம் அமைதியடைந்தது!

கார்... அர்விந்தின் வீட்டு வாசலின் முன் நின்றது. சப்தம் கேட்டு வெளியே வந்தாள் வடிவுக்கரசி.

"அம்மா.. என் பேரு ரேகா! நான் ஏகாம்பரம் சார் வீட்லே வேலை செய்யறேன்!

சார் இந்த இன்விடேஷன் எல்லாம் கொடுத்தனுப்பினாங்க!''

''தெரியும்! நீ இங்கே வரப்போறதை சம்மந்தியம்மா போன் பண்ணி சொல்லிட்டாங்க! எப்படியிருக்கா என் மருமகப் பொண்ணு?'' இன்விடேஷனை பார்த்தபடி கேட்டாள்.

''ரொம்ப நல்லாயிருக்காங்கம்மா!''

''உக்காரும்மா ரேகா... காமாட்சி ஒரு காபி கொண்டு வா!'' என்றவள் இன்டர்காமில் மாடியிலிருந்த மகனை தொடர்பு கொண்டாள்.

''அர்விந்த்... கொஞ்சம் கீழே வாயேன்!''

''ஏம்மா?''

''சுபி வீட்லேர்ந்து இன்விடேஷன் வந்திருக்கு. உனக்கு பிடிச்சிருக்கான்னு வந்து பாரு!''

''அதெல்லாம் நீ பார்த்து முடிவுப் பண்ணுங்கம்மா!''

''ம்ஹூம்... நீ தான் முடிவு பண்ணனும். சீக்கிரம் கீழே வா!'' ரிசீவரை வைத்து விட்டாள்.

காமாட்சி தந்த காபியை வாங்கி குடித்துக் கொண்டிருந்தவள்... படிகளில் இறங்கி கொண்டிருந்த அர்விந்தைப் பார்த்து அதிர்ச்சியுடன் இருக்கையை விட்டு எழுந்தாள் ரேகா!



# 12

அர்விந்தும் இவளைப் பார்த்து விட்டான்.

தன் வீட்டிலேயே அவளை எதிர்பார்க்காத அர்விந்த் பரபரப்புடன் அவள் எதிரில் வந்து நின்றான்.

''என்ன அர்விந்த்... அப்படிப் பார்க்கறே? இந்தப் பொண்ணு பேரு ரேகா! சுபியோட வீட்லே வேலை செய்யறா! இன்விடேஷன் கொடுத்தனுப்பி இருக்காங்க. இந்தாப்பா!''

அர்விந்த் ரேகாவின் முகத்திலிருந்து கண்களை எடுக்கவேயில்லை.

''ரேகா.. சுபி சொன்ன ரேகா நீதானா? கைக்கெட்டும் தூரத்தில் வச்சுக்கிட்டே உன்னை ஊரெல்லாம் தேடினேனே! ரேகா... என்ன கொடுமையிது? இப்படிப்பட்ட சூழ்நிலையிலா உன்னை நான் சந்திக்கணும்? என் மனசுல நீயிருக்கறது உனக்கு நல்லாவே தெரியும். உன் மனசுல நான் இருக்கிறேன்னு எனக்கும் நல்லாவே தெரியும்!''

''அர்விந்த்.... என்னடா... என்னென்னவோ பேசறே?'' வடிவு பயந்தாள்.

அவன் காதில் வாங்கி கொள்ளவேயில்லை. ரேகாவே எதிர்பார்க்கா ஒரு தருணத்தில் அவள் கைகளைப் பற்றி கொண்டான்.

''ரேகா... எனக்கு நீ வேணும்! என் மனசுக்குள்ளே நீ தான் நிறைஞ்சிருக்கே! சுப மேல எனக்கு கொஞ்சமும் காதல் இல்லே பெரியவங்க பிடிவாதமா நடத்தப்போகி கல்யாணம் இது! நீ ஒரு வார்த்தை சொல்லு இப்பவே நம்ம கல்யாணம் நடக்கும்.''

''விடுங்க... கையை விடுங்க!'' பதறினாலும் ரேகா... அவன் அன்பி கரைந்தாள்.

'இவனுக்கு என் மீது இவ்வளவு காதலா?' வடிவுக்கரசி கோபத்தி எரிமலையானாள். ரேகாவைப் பிடித்து இழுத் தள்ளிவிட்டாள்.

''அர்விந்த் உனக்கென்ன பைத்தியம் பிடிச்சிருக்கா?''

''அம்மா... எனக்கு ரேகா வேணும்மா!''

''அவ ஒரு அனாதைடா! சுபி வீட் வேலை செய்யறவ! பத்துநாள்ல கல்யாணத்த வச்சுக்கிட்டு.. இறுக்கு பிடிச்சவன் மாதி உளறாதே!''

''எனக்கு எதைப்பத்தியும் அக்கறையில்லே. போலித்தனமா என்னால சுபியோட வாழ்க்கை நடத்த முடியாதும்மா எனக்கு ரேகா வேணும். இந்த கல்யாணத்த நிறுத்துங்க! நீங்க என்ன நிறுத்தறது? நானே நிறுத்தறேன்!'' ஆத்திர அவசரத்தில் என் பேசுவது, செய்வது என்று புரியாமல் சுபத் வீட்டிற்கு போன் செய்தான்.

சுபத்ராதான் போனை எடுத்தாள். அவ ஹலோ சொல்லுமுன் இவனே பேசி விட்டா

''ஹலோ... நான் அர்விந்த் பேசறே இந்த கல்யாணத்திலே எனக்கு இஷ்டமில் கல்யாணத்தை நிறுத்திட சொல்லுங் பட்டென்று போனை வைத்து விட்டான்.

அது அர்விந்தின் குரல்தான் என்பதி எள்ளளவும் சந்தேகமில்லை சுபத்ராவுக் தலை இறுகிறுத்தது.

''அர்விந்த்... என்ன காரியம் பண் அடிப்பாவி... எல்லாம் உன்னால தா எங்கேர்ந்து வந்து தொலைஞ்சே? குடிக டுக்கறதுக்குள்ளே வந்தியா? போடி வெளியே!'' இரைந்தாள் வடிவுக்கரசி.

அடுத்தடுத்து நடந்த சம்பவங்களால் தம்பித்துப் போயிருந்த ரேகா.. உடல் நடுங்க டிருந்து ஓடினாள்.

''ரேகா.... ரேகா.. போகாதே நில்லு!'' னான் அர்விந்த். பின்னே ஓடமுயன்றான்.

''அர்விந்த்... இதுக்குமேலே ஓடி எடுத்து சாக்கூட என்னை உயிரோட பார்க்க ட்டே!''

''அம்மா!''

''போடா உள்ளே!''

துவண்டுப்போய் மாடியேறினான். ன் அலறியது. எடுத்தாள்.

''ஹலோ!''

''ஹலோ... என்னாச்சு அங்கே?'' குரல் ங்க கேட்டாள் அம்பிகா.

''ரேகான்னு ஒரு அனாதைய அனுப்பி ங்களே.. அவளால எல்லாமே நாசமா ச்சு!'' என்றபடி நடந்தவைகளை சொல்ல ம்பித்தாள்.

கேட்டுக் கொண்டிருந்த அம்பிகாவின் ம் கொதித்தது.

''அடிப்பாவி... என்னக் காரியம் ணை துணிஞ்சிட்டே?''

போனில் தூக்குமாட்டிக் கொள்ள முயன்ற த்ராவை கனகா பார்த்து விட்டு அலற... னஷ் ஓடிப்போய் தங்கையை தாங்கிக் ண்டான். இன்னும் ஓரிரு விநாடிகள் த்திருந்தாலும் சுபத்ராவை உயிரோடு ருக்க முடியாது.

அம்பிகா மகளை கட்டிக் கொண்டு தாள்.

''ஏம்மா... ஏற்கனவே ஒரு மகனை ந்தேன்! நீயும் என்னை விட்டு போகணும்னு வுப் பண்ணிட்டியாம்மா?''

''என்னால... என்னால... அர்விந்த் லாம வாழ முடியாதும்மா! கேவலம் ஒரு லைக்காரியிடம், நான் த்துட்டேனேம்மா!'' அம்மாவின் மடியில் புதைத்து கதறினாள்.

''நான் அப்பவே சொன்னேன்... ங்களா? அவ சின்ன மீனைப் போட்டு ய மீனைப் பிடிக்கிறவா! நமக்கேத் யாம அர்விந்தை வளைச்சு போட்டுட்டா! கப்படறதுக்கும் ஒரு அளவிருக்கு அத்தை! ாலும் நீங்க அவளுக்கு அதிகமாகவே இடம் கொடுத்திட்டீங்க!''

அம்பிகா இறுகிப்போனாள்.

கிரீஷ் விக்கித்துப் போனான்.

விஷயம் கேள்விப்பட்டு ஓடோடி வந்த ஏகாம்பரம் பதறிப்போனார்.

இம்மூவரின் கோபமும் ஒருசேர ரேகாவின் மீது பாய்ந்தது.

அதே நேரம்...

ரேகா வந்து சேர்ந்தாள்! நடந்து விட்ட எதிர்பாராத சம்பவங்களால் உடம்பெங்கும் நடுக்கம் பரவியிருந்தது.

'நடந்த சம்பவத்துக்கும் எனக்கும் எந்த விதத்திலும் சம்மந்தமில்லை' என்பதை வலியுறுத்தி சொல்லிவிடும் அவசரத்தோடு வந்தவளை, அம்பிகாவின் குரல் தடுத்தது.

''அங்கேயே நில்லு!''

''அ...ம்...மா!''

''சீ...உன் வாயால என்னை அம்மான்னு சொல்லாதே! அதுக்கு தான் பெரிசா நாமம் போட்டுட்டியே... என் பொண்ணோட வாழ்க்கையிலேயே விளையாடிட்டியே சண்டாளி! உன்னை மகளா நினைச்சு பாசம் காட்டினேனே... வேஷம் போட்டு நடிச்சிட்டியே. எங்க வீட்டு உப்பு எங்க கன்னத்திலேயே அறைஞ்சிருச்சே!''

''அப்படியெல்லாம் பேசாதீங்கம்மா... உங்க வாயால என்னை திட்டாதீங்கம்மா... தாங்கிக்க முடியலேம்மா!'' துடித்தாள் ரேகா.

''அனாதை இல்லங்களுக்கு வாரி வாரி கொடுக்கறவள் நான்! ஏன் தெரியுமா? அந்தப் புண்ணியம் என் பிள்ளைங்களுக்கு போய் சேரணும்னு தான். பாதர் சொன்ன ஒரே காரணத்துக்காக... உனக்கு என் வீட்டில் வேலையும் கொடுத்து, இடமும் கொடுத்தேன். உன் மூலமா ஒரு பெரிய பாவத்தை வரவைச்சிட்டேன். புத்தியை காண்பிச்சிட்டியே! எத்தனை தான் குளிப்பாட்டி, சீராக்கினாலும் நாய் நாய் தான்னு... நிரூபிச்சிட்டியே! உன் உடம்புல ஓடறது நல்ல ரத்தமாயிருந்திருந்தா... உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செஞ்சிருக்க மாட்டே! அன்னமிட்ட வீட்லே கன்னம் வச்சிருக்கமாட்டே! உன்னை நம்பி உள்ளே சேர்த்தது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்ப புரிஞ்சு போச்சு! போடி... வெளியே!''

ஏகாம்பரத்தின் உடல் ஆத்திரத்தில் நடுங்கியது.

''சார்.. அவசரப்பட்டு வார்த்தைகளை கொட்டாதீங்க! நீங்க நினைக்கறமாதிரி நானில்லே! நடந்தது என்னங்கறதை

சொல்றதுக்கு எனக்கொரு சந்தர்ப்பம் கொடுங்க... ப்ளீஸ்!'' கை கூப்பி கதறினாள்.

''நடந்தது என்னங்கறது தான் தெரியுமே! அதை உன் வாயால வேற தெரிஞ்சுக்கணுமா? உன்னைப் பத்தி என் பொண்டாட்டி சொல்லும் போதெல்லாம் நம்பலே! உனக்காக அவகிட்டே சண்டை போட்டேன்! ஏன் தெரியுமா? சுபத்ரா மாதிரி உன்னையும் என் தங்கச்சியா நினைச்சேன். அதனால தான் அவளுக்கு பார்த்த மாப்பிள்ளையை தட்டிப்பறிச்சிட்டியா? எங்க சுபத்ரா உனக்கென்ன துரோகம் பண்ணினா? அவ அர்விந்த் மேல எத்தனவு உயிரை வச்சிருக்கான்னுத் தெரியுமா? எல்லாம் தெரிஞ்சிருந்தும் ஒண்ணும் தெரியாத பூனைமாதிரி நடிச்சிட்டியே! நீ பண்ணின துரோகத்தால சுபத்ரா தூக்குல தொங்கிட்டா! நல்லவேளை.. கடைசி நேரத்தில காப்பாத்திட்டோம்! இதுக்கெல்லாம் காரணம் யார்? நீ!'' தினேஷ் சுட்டு விரல் நீட்டி காட்டினான்.



''இல்லே.... இல்லே... நானில்லை!'' கத்தினாள்... கதறினாள். தனக்கு பேச ஒரு நிமிடம் தரமாட்டார்களா என்று தவித்தாள். தன்னை திட்டியதுக்கூட பாதிக்கவில்லை. சுபத்ரா தற்கொலைக்கு முயன்றாள் என்ற செய்தியும், அதற்கு தான் தான் காரணம் என்று அவர்கள் உறுதியாய் நம்பிவிட்டதும் தான்... அவள் உயிரை பிடித்து உலுக்கியது. 'நான் நம்பிக்கை துரோகியல்ல... நன்றி கெட்டவள் அல்ல... கேடு கெட்ட நாயுமல்ல.. இதை எல்லாம் சொல்ல ஒரே ஒரு நிமிடம் அவகாசம் தர மாட்டார்களா?'

''தினேஷ்...இன்னும் இவகிட்டே என்ன பேச்சு? இவளை முதல்ல வெளியே அனுப்பிட்டு.. இந்த வீட்டை டெட்டால் ஊத்தி அலம்ப சொல்லு!'' என்றார் ஏகாம்பரம் கோபமாக.

''மாமா... டென்ஷனாகாதீங்க... உங்க உடம்புக்கு ஆகாது!'' கனகா கவலைப்பட்டாள்.

''அம்மா... அவளை வெளியேப் போக சொல்லும்மா! என் கண்ணு முன்னால நிக்க வேணாம்னு சொல்லும்மா!'' கவலையும்,

## ஆரஞ்சு பழ தோல் சட்னி

ஆரஞ்சுபழ தோ[...] சிறு துண்டுகளாக நறுக்[...] வதக்கி 4 அல்லது 5 சிவ[...] மிளகாய், தேவையான பு[...] உப்பு மற்றும் கொஞ்ச[...] தேங்காய் துருவல் சேர்த்து சற்று கரகரப்பாக அரைத்து எடுக்கவும். கடுகு, உளுந்து, சிட்டிகை பெருங்காயத்தூள் தாளித்து கொட்டி உபயோகிக்கவும். இந்த சட்னி இட்லி, தோசை, பூரி மற்றும் சப்பாத்தியுடன் தொட்டுக்கொள்ள நன்றாக இருக்கும்.

-ராகினி தியாகராஜன்.

களைப்புமாய் முனகின[...] சுபத்ரா.

''தினேஷ்.. அவள[...] முதல்ல வெளியே அனுப்பு!

''ஏய்... வெளியே[...] போ!''

''நான் சொல்றவ[...] கொஞ்சம்...''

''யாரும் கேக்[...] தயாராயில்லே! மரியாதை[...] வெளியேப்போ!''

''இல்லே... [...] பழிகாரியா நான் இங்கிரு[...] போக மாட்டேன்... என்னை [...] விடுங்களேன்!'' கண்ணீருடன் கெஞ்சின[...] ரேகா.

''என்னை கொலைகாரனாக்கா[...] போய்டு!'' இரைந்தான் தினேஷ்.

''இல்லே.. நான் போகமாட்டேன்!''

அடுத்த கணம் தினேஷ் அவள் கையை[...] பிடித்து தரதரவென வெளியில் இழுத்து வ[...] விட்டு...

''வாட்ச்மேன்...கேட்டை லாக் பண்ணு[...]'' என்றான்.

இப்படியோர் அவமானத்[...] எதிர்பார்க்காத ரேகா உறைந்துப் போன[...] கேட் சார்த்தப்பட்டு பூட்டப்பட்டது. ரே[...] நடுத் தெருவில் நின்றபடி கண்ணீருடன் [...] வீட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள். [...] தளர்ந்த நடையுடன் அங்கிருந்து சென்றா[...]

அர்விந்தின் கார் வந்து நின்[...] அரக்கப்பரக்க அதிலிருந்து இறங்கினான்.

''ரேகா... ரேகா!'' சத்தமாய் அழை[...] கொண்டே ஏகாம்பரத்தின் வீட்டிற்[...] சென்றான்.

அவனைப் பார்த்ததும் அங்கிரு[...]

[...]அத்தனைபேரும் முகத்தை சுசப்புடன் திருப்பிக் கொண்டனர்.

''என்னப்பா... சுபத்ரா உயிரோட இருக்காளா, இல்லையான்னு பார்க்க வந்தியா?'' என்று கேட்டாள் அம்பிகா.

''ஆன்ட்டி....!''

''அதுக்கெதுக்குப்பா... சுபத்ராவை கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சே? அந்த அனாதை ரேகாவையே கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே?''

''ஆன்ட்டி... உண்மை என்னன்னு உங்களுக்குத் தெரியாது. அவபேரு ரேகான்னு எனக்கே இப்பதான் தெரியும். இத்தனை நாளா அவ இந்த வீட்லே இருந்ததுக் கூட இப்பதான் தெரியும்''

''அர்விந்த்... என்ன சொல்றே நீ?'' வியப்புடன் கேட்டான் தினேஷ்.

''ஆமாம் தினேஷ்! ரேகாவை மானசீகமாய் நான் காதலித்தது நிஜம். ஆனா, இன்னைக்குதான் என் மனசை அவளிடம் வெளிப்படுத்தினேன். நடந்தது என்னன்னா...?''

அர்விந்த் அவளை முதன் முதலாய் சந்தித்தது முதல் இன்று நடந்தது வரை எல்லாவற்றையும் சொல்லி முடித்தான்.

அனைவர் முகத்திலும் அதிர்ச்சி!

''ரேகா... ரொம்ப பயந்து விட்டிருக்கிறாள். நான் கொஞ்சம் யோசிச்சு.. நிதானமாய் நடந்திருந்திருக்கலாம். என்னை எல்லாரும் மன்னிச்சிடுங்க. நான் ரேகாவை பார்க்கணும்!''

சுபத்ராவிற்கு அவன் மனதில் தானில்லை என்கிற நிஜம் அழுகையை உற்பத்தி செய்தது.

''ரேகா எங்கே?'' மறுபடி கேட்டான்.

''அவ இப்ப இங்கே இல்லே!'' என்றான் தினேஷ்.

''எங்கே போயிருக்கா?''

''தெரியாது!''

''வாட்?''

''அவ இனிமே இங்கே வரமாட்டா!''

''தினேஷ்... என்ன சொல்றே நீ?''

''சுபத்ராவோட கண்ணீருக்கு காரணமான அவளை எங்க வீட்டுக்குள்ளே வச்சிருக்க.. எங்களுக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?''

''டேய்!'' கோபத்துடன் அவன் சட்டையைப் பற்றினான். ''என் ரேகாவை என்னடா பண்ணீங்க?''

''யார் மேல கையை வைக்கறே? எடுடா கையை. அந்த அனாதை நாய் எந்த தெருவிலே பொறுக்கிக்கிட்டு இருக்குதோ.. போய்ப் பாரு!''

''யாரைப் போய் நாய்ங்கறே?'' அடிக்க கையை ஓங்கினான் அர்விந்த். ஓங்கிய கையை தடுத்துப் பிடித்தார் ஏகாம்பரம்.

அவர் பேச வாயெடுக்கவும்... ''சார்!'' என்ற குரல் ஒலிக்கவும்... அனைவரும் வாசல்பக்கம் திரும்பினர்.

வாசலில் கோபாலன் நின்றிருந்தார்.



13

''யாரது?'' ஏகாம்பரம் அவர் அருகில் சென்றார்.

''மிஸ்டர் ஏகாம்பரம்...?''

''யெஸ்...நான் தான்!'' என்பவருக்கு நெற்றி முடிச்சிட்டது. 'இவரை எங்கோ பார்த்திருக்கிறோமே!'

''சார்... என் பேர் கோபாலன்... நான் பாதர் சாலமன்கிட்டேர்ந்து... சார்... உங்களை இதற்கு முன்னாடி சந்திச்சிருக்கேன்!'' என்றார் அவர் முகத்தை ஆராய்ந்தபடி.

''நானும்... உங்களை ஏற்கனவே சந்திச்சிருக்கேன்! ஆனா... எங்கேன்னு தான் தெரியலே!''

கோபாலனுக்கு நினைவிற்கு வந்து விட்டது.

''சார்... நீங்க ஏகாம்பரம் தானே? கல்லிடைக்குறிச்சி ஏகாம்பரம்!''

''அட ஆமாம்!''

''சார்... என்னைத் தெரியலியா? செங்கல்பட்டு கோபாலன்... உங்கப் பொண்ணு சுசீலாவை...!''

''மைகாட்! அந்த கோபாலனா நீங்க? ஆளே அடையாளம் தெரியலே சார்! உக்காருங்க.. நல்லாயிருக்கீங்களா?'' ஏகாம்பரம் அவர் கையைப் பற்றி சோபாவில் அமர வைத்தார்.

கோபாலன் நிலைகுலைந்துப் போனார்.

'நாம் ஒரு கணக்குப் போட்டால்... கடவுள் எவ்வளவு அழகாக ஒரு கணக்குப் போடுகிறார்? இவர் பெற்ற பெண்ணை உயிரோடிருக்கும்போதே... இறந்துவிட்டாள் என்று பொய் சொன்னேன். ஆனால், கடவுள் இன்று அந்த குழந்தையை பெற்றவர்களிடமே அல்லவா சேர்த்து வைத்திருக்கிறான்? ரேகா எங்கே?' சுற்றிலும் கண்களை ஓடவிட்டார்.

''சார்... ரேகா எங்கே?''

அவர் ரேகாவைப் பற்றி கேட்டதும் அனைவர் முகத்திலும் அதிர்ச்சி.

''ரேகாவா? நீங்க ஏன் அவளைப் பத்தி கேக்கறீங்க?''

''சார்... என்னை மன்னிச்சிடுங்க... இந்த பாவியை மன்னிச்சிடுங்க!'' என்று துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்தார். அனைவருக்கும் வியப்பு கூடியது.

''என்ன சார் சொல்றீங்க? எதுக்காக அழறீங்க?'' கோபாலன் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

''எனக்கு மன்னிப்பே இல்லே சார்! உங்க பொண்ணு சுசிலா உயிரோடு இருக்கும்போதே... செத்துப்போய்ட்டான்னு அநியாயமா பொய் சொன்ன பாவி நான்!''

''எ... என்னது? என் பொண்ணு சுசிலா உயிரோட இருக்காளா?''

''நிஜமாதான் சொல்றீங்களா?''

''இப்ப எங்கேயிருக்கா?''

அனைவருக்கும் புது ரத்தம் பாய்ந்தது.

''ஆமாங்க! சுசிலா இன்னும் உயிரோட தான் இருக்கா! அதுவும் உங்களோட.... இங்கே தான் இருக்கிறா!''

''என்ன சொல்றீங்க? இங்கே... எங்களோடயா? எங்கே?''

''உங்க பொண்ணு சுசிலா என் பொண்ணா வளர்ந்தப்ப பேரை ரேகான்னு மாத்திட்டேன்!''

''எ... எ... ன்..ன?''

''ஆமாங்க.. நடந்ததெல்லாம் ஒண்ணு விடாம சொல்லிடறேன்!''

கோபாலன் எல்லாவற்றையும் சொன்னார்.

**அ**ன்னை தெரசா மகளிர் காப்பகத்தை நோக்கி மூன்று கார்கள் சென்றன.

பாதர் சாலமனிடம் போனில் தொடர்பு கொண்ட போது ரேகா அங்கு வந்திருப்பது தெரிந்ததும் அனைவரும் புறப்பட்டனர்.

ஒரு காரில் ஏகாம்பரம் குடும்பத்தினர் அனைவரும் இருந்தனர்.

அம்பிகா அழுதுக் கொண்டே வந்தாள்.

''என் குழந்தைன்னு தெரியாம எப்படியெல்லாம் பேசிட்டேன்? கடவுளே!''

''அவளை நான் தான் ரொம்ப மோசமா பேசிட்டேன் அம்பிகா!''

''என் தங்கைய இந்த கையால தானே அடிச்சு விரட்டினேன்?'' வேதனையுடன் கையை ஓங்கி கார் கதவில் அடித்தான் தினேஷ்!

''நாம யாரும் வேணுமின்னே அவளை திட்டலே... வருத்தப்படாதீங்க!'' கனகா ஆறுதலாய் சொன்னாள்.

''இல்லே அண்ணி! நான் தான் அக்காவை ரொம்ப ஹர்ட் பண்ணிட்டேன்!'' விக்கி விக்கி அழுதாள் சுபத்ரா.

இன்னொரு காரில் திருவேங்கடம் குடும்பத்தினர் பயணித்தனர்.

அர்விந்த் தான் காரை ஓட்டினான்.

'ரேகா.. கடவுளால் கூட நம்மை பிரிக்க முடியாது. இனி யாராலும் நம்மை பிரிக்க முடியாது!' உற்சாகமாய் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

அடுத்த காரில் கோபாலன்.

நம்பிக்கை எல்லாம் இழந்து சோர்ந்து காணப்பட்டார்.

'புஷ்பா... ரேகா நமக்கு மறுபடி கிடைப்பாள்ங்கற நம்பிக்கை எனக்கில்லேம்மா!'

**சு**ற்றி அனைவரும் அமர்ந்திருக்க. நடுவில் ரேகா அமர்ந்திருந்தாள்.

அவள் முகத்தில் என்றும் இல்லாத நிம்மதி இப்போது குடிகொண்டிருந்தது.

''ரொம்ப சந்தோஷமாயிருக்கு! நான் அனாதையல்ல. எனக்கும் அப்பா, அம்மா, அண்ணன், தங்கைன்னு பாரம்பரியமான குடும்பம் இருக்குன்னு நினைக்கறப்ப ரொம்ப ரொம்ப சந்தோஷமாயிருக்கு!''

''சுசீ... என் வாயால உன்னை கண்டபடி திட்டிட்டேனம்மா!'' அம்பிகா அழ ஆரம்பித்தாள்.

''அடடா.. நான் தான் சொன்னேனே. அதைப்பத்தி பேசக்கூடாது. போன நிமிஷம் வரை நடந்த கசப்பை எல்லாம் மறந்திடணும்னு!'' ரேகா செல்லமாய் அதட்டினாள்.

''நீயும் ஏகாம்பரத்தோட பொண்ணுதான்னு தெரிஞ்சுட்ட பிறகு.. அர்விந்த் விருப்பப்படி உன்னை அவனுக்கே கல்யாணம் பண்ணி வச்சிடணும்னு நாங்க முடிவு பண்ணிட்டோம் ரேகா!'' என்றார் திருவேங்கடம்.

சுபத்ராவை தவிர அனைவர் முகத்திலும் சந்தோஷமே!

''ஸாரி... எனக்கு இந்த கல்யாணத்துல விருப்பமில்லே!'' என்றாள் ரேகா.

''ரே..கா!'' தேள் கொட்டியதுப் போலிருந்தது அந்த வார்த்தை அர்விந்துக்கு.

ரேகா அவன் முகம் பார்த்து பேச இதயம் வலித்தது. அந்த வலியை முகத்தில் காட்டாதபடி சிரமப்பட்டு மறைத்தாள்.

''உங்களுக்கும், எனக்கும் சரிவர அறிமுகம் கூட இல்லாத நிலையில் நமக்குள் காதல், கல்யாணம்ங்கறதெல்லாம் சரிப்பட்டு வராது. எனக்கு அப்படிப்பட்ட எண்ணமேயில்லை. சுபியை உங்களுக்கு பல வருஷங்களாக தெரியும். உங்க மேல் அவளுக்கு நிறைய அன்பிருக்கு! தன்னுடைய உயிரையே மாய்ச்சி கொள்கிற அளவுக்கு காதல் இருக்கு! இந்த உலகத்துல என் தங்கச்சியை விடவும் நல்ல மனைவி நிச்சயமாய் உங்களுக்கு கிடைக்கமாட்டா!''

''ரேகா!''

''என் மேல உங்களுக்கு அன்பிருப்பது நிஜம்னா.. அந்த அன்புக்கு மரியாதை கொடுத்து என் வேண்டுகோளுக்கு செவி சாய்ப்பீங்கன்னு நம்பறேன்!'' என்றாள் வெடித்துக் கொண்டு வந்த அழுகையை கட்டுப்படுத்தி!

அர்விந்த் அவளையே வேதனை பொங்க பார்த்தபடி ''சரி'' என்றான்.

சுபத்ராவுக்குள் . குப்பென ரோஜா மலர்ந்தது. அக்காவை நன்றியுடன் நோக்கினாள்.

''சரி.. மீதியை வீட்லே போய் பேசிக்கலாம்.... புறப்படலாம் வா!'' என்று ரேகாவின் கையை பற்றினாள் அம்பிகா.

''எந்த வீட்டுக்கும்மா?''

''நம்ம வீட்டுக்குதான்!''

''ஸாரிம்மா.. என் வீடு அதுவல்ல!''

''சு...சீ..லா!''

''இந்த பேருக்கூட என்னுடையதல்ல!''

''என்னடி சொல்றே?'' அம்பிகா பயத்துடன் மகளைப் பார்த்தாள்.

''என்னைப் பெத்தது நீங்களா இருக்கலாம். சொல்லிக் காட்டறேன்னு தயவு பண்ணி தப்பா நினைச்சிடாதீங்க! நீங்க அடிச்சிருந்தா.. வலியோட மறந்திருக்கலாம். ஆனா, சூடு போட்டிருக்கீங்களே! அந்த தழும்பு மறையலியேம்மா!''

''சுசிலா!''

''காக்காக் கூட தன் குஞ்சுகளை கஷ்டப்பட்டு காப்பாத்துது! ரோட்ல கிடக்கிற அனாதை குழந்தைகளைக் கூட சோத்துக்கு வக்கில்லேன்னாக் கூட எடுத்து வளர்க்கிற எத்தனையோ ஏழைகள் இருக்கவே செய்யறாங்க! ஆனா, உங்க பணத்தேவைக்காக என்னை வித்துட்டீங்களேப்பா! அந்த வடு மறையலேப்பா! உங்களை உங்கப்பா இதே மாதிரி பணத்துக்கு வித்திருந்தா.. உங்க மனசு என்ன பாடுபடும்?''

''கண்ணே... என்னை மன்னிச்சிடும்மா! அப்பா தெரிஞ்சோ, தெரியாமலோ செஞ்ச தப்பும்மா அது!'' ஏகாம்பரம் மகளின் கையைப் பற்றி கெஞ்சினார்.

''பணம் கொடுத்து வாங்கின குழந்தையை இந்தப்பா.. நல்லாவே வளர்த்தார். நல்ல கல்வியை கொடுத்தார். பெத்த குழந்தையையே விலைக்கு விக்கிறப்ப... வாங்கின குழந்தையை அனாதைன்னு சொல்லி ஆஸ்ரமத்துல சேர்த்தது பெரிய தப்பா எனக்குத் தெரியலேப்பா!''

கோபாலன் தலைநிமிர்ந்து பார்த்தார். ஏகாம்பரம் தலை கவிழ்ந்தார்.

''நாம எல்லாரும் ஒண்ணு சேர்ந்ததுல எனக்கு ரொம்ப சந்தோஷம்! அம்மா.. உங்களுக்காவது ஒரு பிள்ளையும், பொண்ணும், மருமகள் பேரக்குழந்தைன்னு உண்டு! ஆனா, இந்தப்பாவுக்கு அம்மாவைத்தவிர வேற யாரும் இல்லேம்மா! ரெண்டு தங்கச்சிகளும் இறந்துப் போய்ட்டாங்க! பொண்ணுங்களை இழந்த ஒரு தாயோட மனவேதனை உனக்கு நல்லாவேத் தெரியுமில்லையா? இப்பதாம்மா என்னோட அன்பு இவங்களுக்கு அவசியம் தேவை!''

''சு...சீ...லா!'' அம்பிகாவின் கண்கள் கலங்கியது.

''அழக்கூடாதும்மா! சுசிலா ரேகாவாய்ட்டாம்மா! அவளால மறுபடி சுசிலாவா ஆக முடியாது.''

''சுசீ... என்ன முடிவு இது?'' தினேஷ் தங்கையின் தலையை ஆறுதலாய் வருடினான்.

''நிதானமா யோசிச்சுப் பாருங்கண்ணா... நான் எடுத்த முடிவுல உள்ள நியாயம் புரியும்!''

''நான் இனி உங்கிட்டே சண்டை போட மாட்டேன்க்கா. ப்ளீஸ் எங்களோட வந்துடேன்!'' என்றாள் கெஞ்சலாக சுபத்ரா!

''நான் எங்கே போய்டப் போகிறேன்? இதோ இருக்கிற செங்கல்பட்டுக்கு தானே? வாரத்துக்கு ஒருமுறை வந்து பார்க்க மாட்டேனா என்ன?''

''ஏம்மா.. பெத்தவங்களைவிட உன்னை வளர்த்தவங்க முக்கியமா போய்ட்டாங்களா? இந்த தாயோட கண்ணீர் உன்னை கரைக்கலியா சுசீலா?''

ரேகா அம்பிகாவின் கைகளைப் பற்றி கன்னத்தில் வைத்து அழுதிக்கொண்டாள்.



''அம்மா... நீ என்னை தப்பா புரிஞ்சிட்டிருக்கே! நான் காயப்பட்டிருக்கேன். அது நிஜம். ஆனா, அதுக்காக பழிவாங்கறேன்னு நீங்க நினைச்சீங்கன்னா அது தப்பும்மா! விவரம் புரியறதுக்கு முன்னாடியே உங்களை விட்டு நான் பிரிஞ்சாச்சு. எனக்கு விவரம் புரியறப்ப... என் அப்பா அம்மாவா இருந்தது இவங்கதானே? சந்தர்ப்ப சூழ்நிலைகள் நான் இந்த ஆஸ்ரமத்துக்கு வந்துட்டேன். நன்றியை மறக்கக் கூடாது இல்லையா? ஏழுவருஷமா அன்பை கொட்டி வளர்த்ததை மட்டும் மறக்காம... மற்றதெல்லாம் மறந்துட்டேன்.

பாதர் எங்களை நல்ல விதமா வளர்த்தார். உரிமைக்காக போராடறதை விட விசுவாசத்திற்காக போராடுன்னு சொல்லி சொல்லி வளர்த்தார். அது என் ரத்தத்துலே கலந்திடுச்சும்மா!

உதாசீனம்ங்கறது மனசுக்கு எவ்வளவு வேதனையைத் தரும்ங்கறதை நான் சின்ன வயசிலேர்ந்தே அனுபவிச்சேன். அந்த வேதனையை சுபி அனுபவிக்கக் கூடாது. நிச்சயதார்த்தம் வரைக்கும் வந்துட்ட ஒரு கல்யாணம் நின்னுபோனா அந்தப் பொண்ணோட எதிர்காலம் கேள்விக்குறியாய்டும்.

எல்லாம் இப்ப நல்லபடி முடிந்தாலும்... என்னை பார்க்கும் போதெல்லாம் இதுக்கெல்லாம் காரணம் அக்கா தானே என்கிற வேதனை சுபிக்கு ஏற்படும். ஏன்னா... நானும் பெண்தானே? சுபியோட மனசு எனக்கும் புரியும். அப்படியொரு தர்ம சங்கடம் என்னால ஏற்பட வேண்டாம். நமக்குள்ளே ஒரு மரியாதையான இடைவெளி இருக்கறது நல்லது!''

''உனக்கொரு கல்யாணம் பண்ணி சீரும் சிறப்புமா வாழ வைக்கிற கடமை எங்களுக்கிருக்கு சுசீலா!'' குரல் நைந்து போய் வந்தது

கொம்பரத்திற்கு.

''அந்தக் கடமை இவருக்கும் இருக்கு! இந்த விஷயத்திலே நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து எனக்கொரு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தித் தருவீங்கன்ற நம்பிக்கை எனக்குண்டு! இதிலே எனக்குன்னு தனிப்பட்ட எந்த விருப்பு வெறுப்புக்கும் இடமில்லே! நீங்க யாரைக் கொண்டு வந்து நிறுத்தினாலும் அவர் கையால் மாலை வாங்கிக்கத் தயாராயிருக்கேன். தயவு செய்து என்னை இந்தப்பாவோட போக அனுமதியுங்கப்பா!''

கொம்பரம் செய்வதறியாது கண்கலங்க... கோபாலன் உச்ச மகிழ்ச்சியோடு ரேகாவின் தலையில் முத்தமிட்டார்.

''என் பொண்ணு மறுபடி எனக்கு கிடைச்சிட்டா!''

சிறிது நேரம் கனத்த மவுனம் அங்கே நிலவியது.

**கா**ர் செங்கல்பட்டு நோக்கி செல்ல தயாராயிருந்தது.

''கவியோட கல்யாணத்துக்கு ஒரு வாரம் முன்னாடியே வந்துடுவேன். என் தங்கை கல்யாணத்துக்கு நான் தான் ஓடியாடி வேலை செய்வேன்!'' சிரித்தபடி சொன்னாலும், ரேகா அர்விந்தின் முகத்தை பார்ப்பதை தவிர்த்தாள்.

## ரத்த அழுத்தத்தை குணப்படுத்தும் ரோஜா!

சில வகை மலர்கள் படுக்கும் அறையில் இருந்தால் அவற்றின் நெடி தலைவலியையும், களைப்பையும் ஏற்படுத்தி நல்ல உணர்வையே சாகடித்து விடும். ஆனால் ரோஜாவோ அப்படி அல்ல. அதன் மணம் களைப்பை நீக்கிப் புத்துணர்வை ஏற்படுத்தி, உணர்வுகளைத் தூண்டுவதுடன் ஒரு மகத்தான மருத்துவச் சக்தியையும் ஏற்படுத்துகிறது. ரத்த அழுத்தத்தைச் சமப்படுத்தி சீர்படுத்த ரோஜா மிகவும் உதவுகிறது.

வீட்டைச் சுற்றி ரோஜா செடிகளை வைத்து வளர்த்தால் ஆயுள் விருத்தியாகும். ரோஜா மலர் மீது தவழ்ந்து வரும் காற்றை நுகர்வதால் உடல் ஆரோக்கியம் பெறுகிறது.

-ஏ.கே.நாசர், லட்சமாங்குடி.

அவன் முகத்தை பார்த்தால் எங்கே தான் உடைந்து விடுவோமோ என்று பயமாயிருந்தது.

'அர்விந்த்... என் இதயத்திலும் உங்களுக்கு இடமிருந்தது. நான் அனாதை என்ற காரணத்திற்காக என் காதலை வெளிப்படுத்த தயங்கினேன். இப்போது என் சுற்றத்தாருக்காக என் மனசுக்குள்ளேயே சமாதி கட்டி விட்டேன். என்னை மன்னிச்சிடுங்க அர்விந்த்!' துளிர்த்த கண்ணீரை சிரமப்பட்டு உள்ளிழுத்து கொண்டாள்... காதலைப் போலவே!

''கவி.. நீ ரேகாவாயிருந்தாலும்... எப்பவும் எங்களுக்கு கவிதா தான்! எங்கப் பொண்ணு உயிரோட இருக்கிறான்ற சந்தோஷம் போதும். அப்பப்ப... இந்த அம்மாவையும் அப்பாவையும் வந்து பார்த்திட்டுரும்மா!''

''என்னப்பா நீங்க? மறந்திடுவேனா? நான் இந்த பூமியிலே கால் பதிக்க காரணமாயிருந்த பிரம்மாக்கள் நீங்கதானே? அடிக்கடி வருவேன்ப்பா! அம்மா வரட்டுமா? கவி... வரட்டுமா? சமர்த்தாயிரு! அண்ணா, அண்ணி.. வர்றேன்!'' என்றவள் அர்விந்திடம் கண்களால் விடைபெற்றாள்.

கார் புறப்பட்டது.

பதினேழு வருடத்திற்கு முன்பு.... கதறியழுதபடி சென்ற கவிதா.. இன்று கைகூப்பி விடை பெற்றாள்.

தங்கையை காப்பாற்ற உருண்டு புரண்டு அழுத தினேஷ்... ரேகாவாய் மாறிய தங்கையை நெருங்க முடியாமல் கையாலாகாதவனாய் நெஞ்சு பொருமி நின்றிருந்தான்.

புழுதியை கிளப்பிக் கொண்டு கார் புறப்பட்டது. புழுதி படலத்தில் கார்... நின்றிருந்தவர்களின் கண்களிலிருந்து மறைந்தது.

காரின் சீட்டில் சாய்ந்துக் கொண்ட ரேகாவின் கண்களில் தன்னை மீறி கண்ணீர் வெளிப்பட்டது.

தன்னை பெற்றவர்கள் மீதும் பாசம் இல்லாமலில்லை.

ரேகாவோ பொறுத்தவரை... விழி இரண்டானாலும் பார்வை ஒன்றுதான்!

''அப்பா... சீக்கிரம் போங்க... அம்மா காத்திருப்பாங்க!'' என்றாள்.

கோபாலனுக்குள் புதிய ரத்தம் பாய காரின் வேகத்தை உற்சாகமாய் அதிகப்படுத்தினார்.

(முற்றும்)